# COUNTDOWN



# நாட்கள் எண்ணப்படுகிறது..

06:53:42

HOURS MINUTES SECONDS

1234567890

Pastor. S. ROMILTON

# நாட்கள் என்ணப்படுகின்றன..




# Countdown

Pastor. S. ROMILTON



# உள்ளே...


1. எதிர்தளத்தில் எழும்பியிருக்கும் ஒரு எதிர்மறை எழுப்புதல்! 01

2. நீ என்னத்தைக் காண்கிறாய் ? 07

3. இன்று நமக்கு வேண்டியது எழுப்புதல் அல்ல,
சீர்திருத்தத்தையும் தாண்டிய, ஒரு மா மகா ஆவிக்குரிய புரட்சி ! 27

4. வரப்போகும் சிறையிருப்பு எப்படியிருக்கும் ? 43

5. ஆதிசபையின் வழிமுறைகளுக்குத் திரும்பட்டும் இன்றைய சபை!
ஆதிசபையின் எழுப்புதல் ஒன்று இங்கேயும் காத்திருக்கிறது ! 69

6. இதோ, நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது ! 79

7. நாங்க பயங்கர பிஸி ! 115



# அடைபட்ட அக்கினி


Pastor. **S. ROMILTON**
246- B, Pocket - C, Mayur Vihar,
Phase -2, Delhi - 110091.
Mob : 98106 46981

# நாட்கள் எண்ணப்படுகின்றன
## C O U N T D O W N

## அறிமுகம்

ஆங்கிலத்தில் 'Countown' என்ற வார்த்தைக்கு குறிப்பிட்ட ஒரு சம்பவம் அல்லது நிகழ்ச்சிக்கான நாளும் நேரமும் குறிக்கப்பட்டு, அதை நெருங்கும் நாட்கள் முன்னேறிச் செல்லச் செல்ல, நாட்களும் மணித்துளிகளும் ஒவ்வொன்றாய்க் குறைந்துகொண்டே வருவதையே 'நாட்கள் எண்ணப்படுகிறது' என்று அர்த்தம்கொள்ளும் 'Countdown' என்று சொல்லுகிறோம். 'பகற்காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது..' (யோ 9:4) என்ற வார்த்தையைத் தீர்க்கதரிசனமாய்க் கண்டு எழுதப்பட்ட

இருள் சூழும் காலம் இனி வருதே

அருள் உள்ள நாட்களை பயன்படுத்தும்

திறவுண்ட வாசல் அடைபடுமுன்

நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார் ?'

என்றும்,

'இராக்காலம் வருகின்றதே

அதின் சாயல் தெரிகின்றதே

ஒளியுள்ள காலம் முடிவாகும் முன்பே

உன் சேவை நிறைவேற்றிடு !'



என்றும் பாடப்பட்டு வந்த பாடல்களின் காலமெல்லாம் கடந்து போய், தேசத்தை இருள் ஏற்கனவே மூடிவிட்ட காலத்திற்குள் வந்து நிற்கும் சபை, நோவாவின் பேழையில் மனிதரும் மிருக ஜீவன்களும் பிரவேசித்துவிட்ட பின்பும், 7 நாட்கள் கதவு திறந்து வைக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் பின்னோக்கி எண்ணப்பட்டுக் கொண்டிருந்தது போல, சபையின் நாட்கள் விரல்விட்டு எண்ணப்படும் மணித்துளிகளுக்கு வந்தாகிவிட்டது.

கடைசிக்காலம் என்ற காலம் சுருங்கி, கடைசி நாட்கள் என்ற நாட்களும் குறுகி, 'பதினோராம் மணி' என்ற நேரமும் முடிந்து, 'சீக்கிரம் சம்பவிக்கப் போகிறவைகள்' என்று சொல்லிவந்த காலமும் கடந்து, 'இதோ நாட்கள் வருகிறது..' என்று சொல்லப்பட்ட நாட்களும் போய், இப்போது, 'நாட்கள் எண்ணப்படும்' **Countdown** என்ற டிக் டிக் மணித்துளிகளுக்கு சபையைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார் தேவன். திரைச்சீலை விலக்கப்படப்போகும் கடைசி விநாடி இது!

லவோதேக்கிய சபைகளின் காரியங்களுக்கு தேவன் மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார் ! 'மெனே மெனே தெக்கேல் உப்பார்சின் !' என்று சபையின் சுவர்களிலே எழுதப்பட்டாயிற்று !

சபையின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான வேளையில் சபைக்கு தேவன் சொல்லும் மிக மிக அவசரச் செய்தி இது !

காதுள்ளவன் கேட்கக்கடவன் !

- S. Romilton



# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER

# 01

## எதிர்களத்தில் எழும்பியிருக்கும்

## எதிர்மறை

# எழுப்புதல்

எதிர்களத்தில் எழும்பியிருக்கும்

# எதிர்மறை எழுப்புதல் 01



உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல் ஒன்றுக்காகக் காத்து நிற்கும் சபை ஒருபுறம் நிற்க, இங்கே எதிர்களத்தில் காணப்படும் ஒரு மிகப்பெரிய எதிர்மறை எழுப்புதல் !

உண்மையான எழுப்புதல் காலங்களில் காணப்படும் யாவும் இங்கே எதிர்களத்தில் எதிர்மறையாய் எழும்பி நிற்பதை சபை இன்று காண்கிறதோ? போலிகளை உருவாக்குவதில் அவனுக்கு நிகர் அவனே அல்லவா?

01. எழுப்புதலின் காலங்களில் சபைகளும் ஆலயங்களும் ஆங்காங்கே எழும்பிக்கொண்டே இருக்கும்.

இங்கே இன்று வானளாவ எழும்பி நிற்கும் கோவில்கள், சிலைகள். கடைக்கோடி கிராமங்களில் கூடக் காணப்படும் புனரமைக்கப்பட்டு வெள்ளையும், பெயின்ட்டும் அடிக்கப்பட்டு இடைவிடாத விழாக்களும் கொடைகளும் கொண்டாடும் கோயில்கள்.

02. எழுப்புதல் காலங்களில் அலையலையாய் எழும்பும் ஊழியர்கள், மிஷினரிகள்.

இங்கே கணக்கற்ற எண்ணிக்கையில் இன்று எழும்பியிருக்கும் பூசாரிகள், பண்டித்துக்கள், பாபாக்கள்.

03. எழுப்புதல் காலங்களில் தேசம் முழுவதும் எழும்பி நிற்கும் தேவசேனை, மகா சேனை.

இன்று தேசம் முழுவதும் எழும்பியிருக்கும் உணர்ச்சிப் பெருக்கெடுத்த படை.

04. எழுப்புதல் காலங்களில் ஆங்காங்கே வீடுகள்தோறும், தெருக்கள்தோறும் ஆலயம்தோறும் காணப்படும் ஜெபம், ஜெபக் கூட்டங்கள்.

இங்கே ஆங்காங்கே வீடுகள்தோறும், கோவில்கள்தோறும் காணப்படும் பூஜைகள் புனஸ்காரங்கள், பலிகள், ஹோமங்கள், அர்ச்சனைகள்.

05. எழுப்புதல் காலங்களில் இடைவிடாமல் காணப்படும் ஆராதனைகள், பாடல்கள்.

இன்று திரும்புமிடமெல்லாம் கேட்கப்படும் பாடல் தொனிகள், ஜெய் ஜெய் ஜெய தொனிகள்!

06. எழுப்புதல் காலங்களில் அதிகமதிகமாய் வெளியிடப்பட்டு விற்பனையாகும் புத்தகங்கள், இலக்கியங்கள், பாடல், செய்தி CDக்கள்.

இன்று சிக்னல்களிலும் மார்க்கெட்டுகளிலும், சோஷியல் மீடியாவிலும், வீடுவீடாகக்கூடச் சென்று கூட விற்பனை செய்யப்படும் இலக்கியங்கள், புத்தகங்கள், கயிறுகள், தாயத்துகள், உருவப் படங்கள், விக்கிரகங்கள்.!

07. எழுப்புதல் காலங்களில் எழும்பும் சிறு குழுக்கள், வீட்டுக்குழுக்கள், சிறுவர் குழுக்கள், வாலிபர் கூடுகைகள்.

இன்று ஆங்காங்கே வீடுகளிலும், பள்ளிகளிலும், பார்க்குகளிலும் திறந்தவெளி மைதானங்களிலும் கூடும் ஷாக்காக்கள், முகாம்கள்.

08. எழுப்புதல் காலங்களில் நடக்கும் விசேஷ சுவிசேஷக் கூட்டங்கள், உபவாசக் கூடுகைகள், எழுப்புதல் கூட்டங்கள்.

இன்று தேசம் முழுவதும் ஆங்காங்கே சிறிதும் பெரிதுமாய் நடத்தப்படும் சிறப்பு கத்தாக்கள், கூடுகைகள், கதாகாலட்சேபணைகள், தெற்கையும் வடக்கையும் இணைக்கும் மிகப்பெரிய சிறப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள், வழிபாடுகள்.

09. எழுப்புதல் காலத்தில் எழும்பும் சுவிசேஷகர்கள், போதகர்கள்.

இன்று ஆங்காங்கே காணப்படும் தன்னார்வத் தொண்டர்கள், பக்திப் பரப்பாளர்கள்.

10. எழுப்புதல் காலங்களில் பேச்சும் மூச்சுமாய் எங்கும் கேட்கப்படும் எழுப்புதல் தொனி.

இன்று நாடு முழுவதும் மிகப்பெரிய ட்ரெண்டிங் ஆகியிருக்கும் எதிர்மறை எழுப்புதல் அலை..

11. எழுப்புதலின் காலத்தில் இடங்களையும் தேசத்தையும் மூடியிருக்கும் தேவ பிரசன்னம்.

இன்று தேசத்தின் ஆகாய மண்டலத்தை முடியிருக்கும் ஒரு இருள்மூடல்.

12. எழுப்புதல் காலங்களில் காணப்படும் மிகப்பெரிய மகிழ்ச்சி ஆரவாரம்.

இன்று எங்கும் காணப்படும் ஒரு உணர்ச்சிப்பெருக்கெடுத்தோடும் பொய்யும் பெருமையுமான ஆரவாரம்.

13. எழுப்புதலில் தேவன் எழுந்தருளியிருப்பார். அவரது நாமம் மாத்திரமே உயர்த்தி மகிமைப்படுத்தப்படும்.

இங்கே மனிதர்களும் விக்கிரகங்களும் உயர்த்தப்பட்டு, அவைகளின் புகழ் பாடல்கள்.

14. எழுப்புதல் காலங்களில் தேசத் தலைவர்களும் அதிகாரிகளும் எழுப்புதலின் கருவிகளான எழுப்புதல் வீரர்களுடன் தோளோடு தோள் நின்று இணைந்து நிற்கும் காரியங்கள் உண்டு.

இன்று நாட்டின் பெருந்தலைவர்களும், அதிகாரிகளும் முன்னின்று நடத்தும் ஒரு மகா பெரிய எதிர்மறை எழுப்புதலை தேசம் கண்கொள்ளாக் காட்சியாய்க் கண்டு களிகூருகிறதே ?

15. எழுப்புதல் காலங்களில் எழுப்புதலே செய்தித்தாட்களில் தலைப்புச் செய்தியாய், சாட்சிகளாய் வந்து கொண்டிருக்கும்.

இன்று பிரிண்ட் மீடியாவையும், சோஷியல் மீடியாவையும், தொலைக்காட்சி சானல்களையும் நிறைத்திருக்கும் இதே செய்திகள், புகழ்பரப்புகள்.

16. எழுப்புதல் காலங்களில் காணப்படும் உண்மையான தேவபக்தி.

இன்று எங்கிலும் காணப்படும் உணர்ச்சிவசப்பட்ட பக்திப் பரவசம்.

17. எழுப்புதல் காலங்களில் வீட்டுக்கு வீடு சுவிசேஷ ஒளி, ஜெயக்கொடி.

இன்று வீட்டுக்கு வீடு தீபம், வீட்டுக்கு வீடு கொடி.

18. எழுப்புதல் காலங்களில் நாலாபக்கமுமிருந்து வந்து குவியும் கர்த்தருக்கான காணிக்கைகள்.

எதிர்களத்தில் எழுந்திருக்கும் எதிர்மறை எழுப்புதலில் கொண்டு வந்து இன்று கோடி கோடியாய்க் கொட்டப்பட்டிருக்கும், கோவிலுக்கான அளவில்லா காணிக்கைகள்.

19. உண்மையான எழுப்புதலின் எப்பிசென்ட்டராயிருக்கும் இடத்துக்கோ தேசத்துக்கோ உலகில் நாலாபக்கமுமிருந்து எழுப்புதலைக் காணக் கூட்டம் அலைமோதும்.

இன்று குறிப்பிட்ட இடத்துக்குப் போய்க் குவியும் கோடிக்கணக்கான பக்தகோடிகள்.

20. எழுப்புதல் காலங்களில் ஆவியானவரின் அபிஷேகத்திலும், ஆளுகையிலும், அதிகாரத்திலும் வழிநடத்துதலிலும் எழுப்புதலின் கருவிகளும், சபையும், அந்தந்தப் பகுதிகளும் இருக்கும்.

இங்கே முழு ஆதிக்கமும் அசுத்த ஆவிகளின் பிடியிலும், ஆளுகையிலும், அதிகாரத்திலும், வழிகாட்டுதலிலுமே இருக்கக் காண்கிறோமே !

21. எழுப்புதலில் ஜனங்கள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவான அபிஷேகத்தில் நிரம்பியிருப்பார்கள்.

இங்கு இவர்கள் ஆடுகிற பேயாட்டம் இவர்களைக் கட்டியிருக்கும் ஆவிகளாலேயே நிறைந்ததென்பது கண்கூடு.

22. எழுப்புதல் ஜெபங்களில் நாம் அந்தகார ஆவிகளைக் கட்டுகிறோம். கட்டப்பட்டவர்களைக் கட்டவிழ்க்கிறோம்.

இங்கே இவர்களது ஹோமங்களிலும் பலிகளிலும் ஊழியர்களுக்கும் சபைகளுக்கும் விரோதமான மந்திரங்களும் கட்டுகளும் உண்டு. விடுதலையாக்கப்பட்டவர்களையும கட்டிவைக்கப் போராடும் மந்திர தந்திரங்கள்.

23. சபைகளில் ஆவி ஆத்துமா சரீரத்துக்கான பாதுகாப்புக்காகவும், ஜீவரட்சணைக்காகவும் வேண்டுதல் செய்யப்படுகிறது.

இங்கே விழுதலுக்காகவும், அழிதலுக்காகவும், மரணத்துக்காகவுமான வேண்டுதல்களே மேற்கொள்ளப்படுகின்றன.

24. எழுப்புதல் காலங்களில் எழும்பும் கிறிஸ்துவுக்கான ஒரு ஆவிக்குரிய பரிசுத்த வைராக்கியம்.

இங்கே எதிரே காணப்படுவதோ அப்பட்டமான ஒரு மதவெறி !

25. எழுப்புதல் காலத்தில் சபை ஆதிநிலைக்குத் (Restoration) திரும்புகிறது.

எதிர்தளத்தில் நடக்கும் எழுப்புதலில் இவர்கள் தங்கள் பூர்வ பாதைகளுக்கும், பிதாக்களின் பாரம்பரியத்துக்கும் வழிகளுக்கும் வழிபாடுகளுக்கும் திரும்புகின்றனர்.

**26.** எழுப்புதல் காலங்களில் எழுப்புதலை ஒட்டியே நடந்து வரும் உபத்திரவங்கள், சபை நசுக்கப்படுதல்கள், இரத்தசாட்சி மரணங்கள்.

**இன்று எதிர்களத்தில் இதற்கு மாறாக, கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழுப்பப்படும் கோஷங்கள், ஆலய உடைப்புகள், உயிரோடு தீக்கொளுத்துதல்கள்.**

**27.** எழுப்புதல் காலங்களில் வேத வசனத்தினாலும் சாட்சிகளினாலும், எழுப்புதல் செய்திகளினாலும் உற்சாகமும் உத்வேகமும் உந்துதலும் பெறுகிறார் ஒரு விசுவாசி.

**எதிர்தளத்தில் நடக்கும் கூட்டங்களில் பேசும் பேச்சாளர்களின் வீரியமும் விஷமும் அனல் கக்கும் மேடைப்பேச்சுகளாலும், திரைமறைவு ஆலோசனைக் கூட்டங்களாலும் வெறியூட்டப்படுகின்றனர் தனி நபர்களும் குழுக்களும்.**

மொத்தத்தில் எதிர் பாளயத்தில், எதிர் களத்தில், எதிர்த்தரப்பில் மிகப்பெரிய எதிர்மறை எழுப்புதல் சுனாமி ஒன்று எழும்பி அடித்துக் கொண்டிருக்கிறது.

# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER 02

# நீ என்னத்தைக் காண்கிறாய் ?

# நீ என்னத்தைக் காண்கிறாய் ? 02



'எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?'

'ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?'

'சகரியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?'

'எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?' என்று எரேமியாவை அன்று கேட்டவர், இன்று சபையைப் பார்த்து, 'சபையே, தேசத்திலும், உன்னைச் சுற்றிலும், சபைகளுக்குள்ளும் நீ என்னத்தைக் காண்கிறாய்? என்று கேட்கிறார்..

எரேமியாவிடமும், ஆமோசிடமும், சகரியாவிடமும் 'நீ என்னத்தைக் காண்கிறாய்?' என்று கேட்டு, பல காரியங்களை திருஷ்டாந்தங்களாய், உபமானங்களாய் அவர்களுக்குக் காட்டி, அதின் மூலம் தமது ஜனத்தின் மேல் சம்பவிக்கப்போகும் நிகழ்வுகளை எச்சரிப்பாய், தீர்க்கதரிசனமாய்க் கூறிய கர்த்தர், இன்று இதே கேள்வியின் மூலம், அவர்களுக்குக் காட்டிய அதே உபமானங்களை இன்றைய காலக்கட்டத்துக்கு ஏற்ப நமக்குக் கூறி, இன்றைய சபையின் மேல் வரப்போகிறவைகளை எக்காளமாய் எச்சரிக்கிறார்.

## எரேமியாவே நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 1. 'வாதுமைக் கிளையைக் காண்கிறேன்..'

பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர்: 'எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய்?' என்று கேட்டார். 'வாதுமைக் கிளையைக் காண்கிறேன்' என்றேன்.

அப்பொழுது கர்த்தர் : நீ கண்டது சரியே, என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன்' என்றார் (எரே 1:11,12)

## வாதுமைக் கிளை

(வாதுமை மரம் அல்லது பாதாம் மரம்)

குளிர் காலத்தில் மற்ற மரங்கள் பூத்துக் காய்க்காமல் தூங்கிக் கொண்டிருக்க, வாதுமை மரம் மட்டுமே ஜனவரியில் விழித்தெழும்பி பூத்துக் குலுங்குகிறது. மற்ற மரங்கள் தூங்கும் காலத்தில் விழிப்போடிருக்கிறது இந்த வாதுமை மரம்.

இன்று தேசத்தில் நடக்கும் காரியங்களுக்கும், சபை நடுவில் நடக்கும் காரியங்களுக்கும் இன்றைய லவோதேக்கிய சபை ஆவியில் குளிர்ந்து உறைந்து கிடக்கும்போது, ஆண்டவர் நித்திரை தெளிந்தவனைப் போலவும், பராக்கிரமசாலியைப் போலவும் விழித்து அவரது வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றும் நாட்கள் எண்ணப்படத் தொடங்கி விட்டன.

## ‘வாதுமை மரம் பூப்பூத்து..’ (பிர (12:5 )

பிரசங்கியில் சொல்லப்பட்ட ‘வாதுமை மரம் பூப்பூத்து’ வார்த்தை நரைமயிரை, வயோதிபத்தை அல்லது பூரண ஆயுசைக் குறிப்பது போல, கர்த்தர் தமது வார்த்தையை சபையின் மேல் நிறைவேற்றப்போகும் நாட்கள் இதோ பூரணமாகி, அதின் மணித்துளிகள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கும் விநாடிகளின் விநாடிகள் இவை !

## ‘வாதுமைப் பழங்களைத்’ தந்த ஆரோனின் துளிர்த்த கோல்

தேவனால் அங்கீகரிக்கப்பட்டவனுக்கும், அங்கீகரிக்கப்படாதவனுக்கும், பரலோக முத்திரை பெற்ற ஊழியனுக்கும், பெறாதவனுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரே இரவில் துளிர்த்துப், பூத்துக்காய்த்துக் கனி தந்த வாதுமை மரக்கிளையையும் கோலையும் தேவனே அடையாளமாய் வைக்கிறார். இவைகள், அழைக்கப்பட்டவனுக்கும் அமர்த்தப்பட்டவனுக்கும், அங்கீகரிக்கப்பட்டவனுக்கும் தள்ளப்பட்டவனுக்கும், தெரிந்து கொள்ளப்பட்டவனுக்கும் தெரிந்துகொள்ளப்படாதவனுக்கும், உண்மையாய் ஊழியம் செய்கிறவனுக்கும் செய்யாதவனுக்கும் உள்ள வித்தியாசத்தைத் துல்லியமாய் வேறுபிரித்துக் காட்டும் நாட்கள் நிறைவேறி, அவைகள் எண்ணப்படும் நாட்கள் !



# எரேமியாவே நீ என்னத்தைக் காண்கிறாய் ?

## 2. ‘பொங்குகிற பானையைக் காண்கிறேன்..’

கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு உண்டாகி, அவர் : ‘நீ காண்கிறது என்ன ?’ என்று கேட்டார். ‘பொங்குகிற பானையைக் காண்கிறேன்; அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது’ என்றேன் (எரே 1:13, 14).

### பொங்குகிற பானை

‘பொங்குகிற பானையை - அதின் வாய் வடக்கு நோக்கி’ இருக்கக் காண்கிறேன்..’

கர்த்தர் என்னை நோக்கி, ‘வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார் மேலும் வரும்.. இதோ நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலிமுக வாசல்களுக்கும், அதின் சுற்று மதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதா தேசத்து எல்லாப் பட்டணங்களுக்கு விரோதமாகவும் வைப்பார்கள்.. (எரே 1:13-15)

அதாவது, மகா தீங்கு ஒன்று தேசம் முழுவதிலும், சபையின் மேலும் புரண்டு வந்து சம்பவிக்க, இதோ நாட்கள் எண்ணப்படுகிறது ! தீங்கும் மகா பிரளயமும் வடக்கேயிருந்து வரும் நாட்கள் இதோ!

கர்த்தர் தமது சபையின் மேல் நியாயத்தை நிறைவேற்றவும், அதைத் தமது பக்கமாய்த் திருப்பவும், இதோ வட திசையின் வம்சங்களைக் கூப்பிடுகிறார்! அது பலத்த ஜாதி, அது பூர்வகாலத்து ஜாதி, அது நாம் அறியாத பாஷையைப் பேசும் ஜாதி, அவர்கள் பேசுகிறது இன்னதென்று சபைக்கு விளங்காது.. அவர்களது அம்பறாத்தூணிகள் திறந்த பிரேதக்குழிகளைப் போலிருக்கும். அவர்கள் அனைவரும் பராக்கிரமசாலிகள். (எரே 5: 15 - 17).

இதோ வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வந்து, பூமியின் கடையெல்லைகளிலிருந்து ஒரு பெரிய ஜாதி எழும்பி வரும். அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள்; அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்; அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்கு சமானமாயிருக்கும் ...

சீயோன் குமாரத்தியாகிய சபையே, அவர்கள் உனக்கு விரோதமான யுத்த சன்னத்தராய்க் குதிரைகள் மேலேறி வருவார்கள். அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை சபையின் வாசல்களிலும், அதின் சுற்று மதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், கிறிஸ்தவ ஊர்கள், பட்டணங்கள் மற்றும் கிராமங்களுக்கு விரோதமாய் வைப்பார்கள்.

அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டு நம்முடைய கைகள் தளர்ந்து போகும். இடுக்கணும் கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக்கு ஒப்பான வேதனையும் நம்மைப் பிடிக்கும். சுற்றிலும் சத்துருவின் பட்டயமும் பயங்கரமும் உண்டு.

ஓ! என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டைக் கட்டிக்கொண்டு சாம்பலிலே புரண்டு ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறது போல மனங்கசந்து புலம்பு; பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான். (எரே 6: 22 - 29)

இதுவே வடக்கே வாய் நோக்கிப் பொங்கும் பானை சொல்லும் செய்தி! சபையே, உலை கொதிக்கும் பானை ஒன்று வடக்கேயிருந்து நோக்கியுள்ளதைக் காண்கிறாயோ ?

## எரேமியாவே நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 3. 'அத்திப்பழக் கூடைகளைக் காண்கிறேன்..'

கர்த்தர் என்னை நோக்கி: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; அதற்கு நான்: அத்திப்பழங்களைக் காண்கிறேன்; நல்லவைகளான அத்திப்பழங்கள் மிகவும் நல்லவைகளும், கெட்டவைகளோ புசிக்கத்தகாத மிகவும் கெட்டவைகளுமாயிருக்கிறது என்றேன்..

இதோ, கர்த்தருடைய ஆலயத்தின்முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார்.

ஒரு கூடையிலே முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்குச் சமானமான மிகவும் நல்ல அத்திப்பழங்களும், மற்றக் கூடையிலே புசிக்கத்தகாத மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது. (எரே 24:1 - 3)

சபையே, இன்றைக்கு தேவனுடைய ஆலயத்துக்கு முன்னிருக்கும் இரண்டு வகை ஜனத்தைக் காண்கிறாயோ?



## அத்திமரமும் – சபையும்

- சபையாம் இந்த அத்திமர இலைகள் பாவ நிர்வாணத்தை மூடுமே? ( ஆதி 3:7)

- சபையாம் இந்த அத்திமரத்தின் மதுரத்துக்கும் சுவைக்கும் நிகருண்டோ ? (நியா 9:11)

- சபையாம் இந்த அத்திப்பழ அடை அரிபிளவையையும் குணமாக்கும் அருமருந்தல்லவோ? ( 2 இரா 20:7)

- சபையாம் இந்த அத்திமர நிழலிலே அவனவன் வந்து உட்காருவானே ! (மீகா 4:4)

- சபையாம் இந்த அத்திமரக் காய்கள் நட்சத்திரங்களுக்கு அடையாளம் அல்லவோ? (வெளி 6:13)

- இப்படிப்பட்ட அத்திமரமான சபையின் கனிகள் ஒரு பகுதி புசிக்கத் தகாததாய்க் கெட்டுப்போனதென்ன?

- பல வருடங்களாய்க் கனி தேடி வரும் நேசரின் பசியாற்ற கனியற்றுப்போன உன்னை வெட்டிப்போடு என்று அவர் சொல்லும் காலமோ இது?

- வெறும் இலைகளாய் நீ நிறைந்திருக்கக் கண்டு அவர் உன்னை சிட்சிக்கத்தக்க காலமோ இது?

- புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவது போல தேவன் தமது ஜனத்தைத் தள்ளிவிடும் காலமோ இது?

அவர்கள் அலைந்து திரிகிறவர்களாகவும், எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், சாபமாகவும் வைத்து அவர்களுக்குள்ளே பட்டயத்தையும் பஞ்சத்தையும் கொள்ளை நோயையும் அனுப்பும் காலத்துக்கு நாட்கள் இதோ எண்ணப்படுகின்றன ! (எரே 24: 8 - 10)

ஆனாலும் இன்னொரு கூடையில் காணப்பட்ட நல்ல அத்திப்பழங்களைப் போலக் காணப்படும் மீதியான ஒரு கூட்டமும் சபையில் நிச்சயமாகவே உண்டு.

அத்திமரமும் – சபையும்

# ஆமோசே நீ என்னத்தைக் காண்கிறாய் ?

## 4. 'தூக்குநூலைக் காண்கிறேன்'

### தூக்கு நூல்

கர்த்தர் என்னை நோக்கி : 'ஆமோசே, 'நீ என்னத்தைக் காண்கிறாய்?' என்றார். 'தூக்கு நூலைக் காண்கிறேன்' என்றேன். அப்பொழுது ஆண்டவர், 'இதோ இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்க மாட்டேன்..

ஈசாக்கின் மேடைகள் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும்; நான்... வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பி வருவேன்' என்றார் (ஆமோஸ் 7: 8, 9)



- இதோ தேவ ஜனமாகிய சபையின் நடுவே அதற்கு விரோதமாய், கர்த்தரின் நியாய விசாரிப்பு என்னும் துல்லியமான தூக்குநூல் அவரது கையிலே தூக்கப்பட்டிருக்கிறது...

- சபையின் மதிலின் மேல் நிற்கும் அவர் தமது ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடும் நாட்கள் வந்துவிட்டது.

- சபையின் பிரசங்க மேடைகள் பாழும், அவரது ஜனத்தின் பரிசுத்த ஸ்தலங்கள் ஆளின்றி விடப்பட்டு அவாந்தரமாக்கப்படும் நாட்கள் இதோ!

- 'நான், நானே என் ஜனத்துக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே வருவேன்' என்று எழும்பி தேவன் சபைக்கு விரோதமாய் வரப்போகும் நாட்கள் எண்ணப்படுகின்றன..

- அவர் இனி அவர்களது அக்கிரமங்களைப் பொறுப்பதில்லை.. (ஆமோஸ் 7 : 7 - 9)

# ஆமோசே நீ என்னத்தைக் காண்கிறாய் ?

## 5. ‘இதோ வெட்டுக் கிளிகளைக் காண்கிறேன்’

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, ராஜாவினுடைய புல்லறுப்புக்குப்பின்பு இரண்டாம் கந்தாயத்துப் புல் முளைக்கத் தொடங்குகையில் அவர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கினார்.

அவைகள் தேசத்தின் புல்லைத்தின்று தீர்ந்தபோது, நான்: கர்த்தராகிய ஆண்டவரே மன்னித்தருளும்; யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப்போனான் என்றேன். (ஆமோஸ் 7:1, 2)

- இதோ இந்த நவீன வெட்டுக்கிளிகள் தேசத்தின் புல்லை மட்டுமல்ல, சபையின் விளைச்சலையும் தின்று தீர்க்கும் காலம் இதோ !

- எண்ணிமுடியாத ஒரு பலத்த ஜாதி சபையின் மேல் வரும். அதின் பற்கள் சிங்கத்தின் பற்கள். துஷ்ட சிங்கத்தின் கடைவாய்ப்பற்கள் அதற்கு உண்டு. அது சபையாம் திராட்சச் செடியை அரித்து, அத்திமரமாம் சபையை உரித்து, அதின் பட்டையான வெளிப்புறத்தைத் தின்றுபோடும்.

- அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்; விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த அந்த ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன்னொரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித்தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டானதுமில்லை.



- அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும், அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும்; அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப்போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப்போலவும் இருக்கும்; அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை.

- அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது; அவைகள் குதிரை வீரரைப்போல ஓடும்.



- அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல்போலவும், செத்தைகளை எரிக்கிற அக்கினிஜுவாலையின் இரைச்சல்போலவும், யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல் போலவும், பர்வதங்களுடைய சிகரங்களின்மேல் குதிக்கும்.



- அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள்; எல்லா முகங்களும் கருகிப்போகும்.
- அவைகள் பராக்கிரமசாலிகளைப்போல ஓடும்; யுத்தவீரரைப்போல மதிலேறும்; வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும். ஒன்றை ஒன்று நெருக்காது; ஒவ்வொன்றும் தன் தன் பாதையிலே செல்லும்; அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற்போகும்.
- அவைகள் பட்டணம் எங்கும் செல்லும்; மதிலின்மேல் ஓடும், வீடுகளின்மேல் ஏறும்; பலகணிவழியாய்த் திருடனைப்போல உள்ளே நுழையும்.
- அவைகளுக்கு முன்பாகப் பூமி (சபை) அதிரும்... (யோவேல் 2:2-10)

## ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 6. ‘அக்கினியைக் காண்கிறேன்’

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, அக்கினியாலே நியாயம் விசாரிப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் ஏற்பட்டார்; அது மகா ஆழியைப் பட்சித்தது, அதில் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்ந்தது. (ஆமோஸ் 7:4)

- இதோ கர்த்தர் சபையை உபத்திரவம் என்னும் அக்கினியினாலே நியாயம் விசாரிக்கும் நாட்கள் வந்துவிட்டது.
- அது மகா ஆழியாகிய பெருங் கூட்டமாகிய சபையின் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்க்கும்.
- அப்போது, ‘கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும், நாங்கள் திரும்ப யாராலே எழுந்திருப்போம்! ஆண்டவரே நிறுத்துமே, நாங்கள் யாராலே எழுந்திருப்போம்? நாங்கள் சிறுத்துப் போனோமே!’ என்னும் கூக்குரல் ஆங்காங்கே ஒலிக்கும். (ஆமோஸ் 7:2, 5)

# ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

## 7. 'பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்கிறேன்'

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை இருந்தது.

அவர்: ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்? பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்' என்றார்... (ஆமோஸ் 8 :1,2)

அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி, 'என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது' என்றார்...

- பழுத்த பழங்கள் முற்றிப்போன நிலையைக் குறிக்கிறது அல்லவோ?
- இதோ தேசத்தின் சபைகளுக்கு முடிவு காலம் வந்ததோ?
- தேவாலயப் பாட்டுகள் அலறுதலாக மாறும் காலமோ இது?
- எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பல் இல்லாமல் எறிந்துவிடப்படும் காலமோ இது?
- அந்த நாள் வெளிச்சமாயிராமல் இருளும் பிரகாசமும் அற்ற அந்தகாரமாயிருக்குமென்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறதே!
- பண்டிகைகள் கர்த்தரால் பகைத்து வெறுக்கப்பட்டதாயிருக்கும்.
- நமது ஆசரிப்புகளில் அவருக்குப் பிரியமில்லையே!
- உங்கள் தகன பலிகளையும் போஜன பலிகளையும் நான் அங்கீகரிக்க மாட்டேன், அவற்றை நோக்கிப்பார்க்கவும் மாட்டேன்' என்கிறாரே அவர்!
- 'உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று; உன் ஆராதனையின் சத்தத்தையும், இசைக்கருவிகளின் ஓசையையும் நான் கேட்கமாட்டேன்' என்கிறாரே அவர்!
- நமது பண்டிகைகள் துக்கிப்பாகவும், பாடல்கள் புலம்பல்களாகவும் மாறிப்போகும் நாட்கள் இது!
- சகல அரைகளிலும் இரட்டு.. சகல தலைகளிலும் மொட்டை - சபையின் துக்கிப்பு ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்கு சமானமாக்கப்பட்டு, சபைகளின் முடிவைக் கர்த்தர் கசப்பான நாட்களாக்கும் நாட்கள் இது ! (ஆமோஸ் 8:9, 10)



## சகரியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 8. ‘குத்துவிளக்கைக் காண்கிறேன்’

‘இதோ பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்...’ (சக 4:2)

- ஓ! குத்துவிளக்கு சபைக்கு அடையாளம் அல்லவோ?
- நமது சபைகளாம் பொன் குத்துவிளக்குகளுக்கு நடுவே அவர் உலாவி வர வேண்டாமோ ?
- சபை நடுவே அபிஷேகம் ஊற்றாய்ப் பெருக்கெடுத்து ஓட வேண்டாமோ?
- அதினாலே குத்துவிளக்குகளாம் சபைகள் எரிந்து பிரகாசிக்க வேண்டாமோ?
- ஐயோ! இன்றைய சபைகள் குத்துவிளக்குகளாம் தங்கள் சபை நடுவிலிருந்து ராஜாவாகிய ஆண்டவரை வெளியே தள்ளிவிடவில்லையோ? ராஜா இன்று வெறுங்காலாய்த் தன் முகத்தை மூடிக்கொண்டு அழுதுகொண்டு போகிறாரே!
- ஆவியின் அபிஷேக எண்ணெய் சபை நடுவிலிருந்து இன்று வறண்டுபோய், குத்துவிளக்குகள் எண்ணையின்றி அணைந்துபோவதென்ன? (சகரியா 4:2 - 5 , 11 - 14 )
- ஓ! ஆதியில் கொண்டிருந்த அன்பை சபை விட்டுவிட்டதென்ன?
- ஆதியில் செய்து வந்த கிரியைகள் இன்று எங்கே?
- விளக்குத்தண்டை அதினிடத்தினின்று அவர் நீக்கிப்போடும் நாட்கள் இதோ வந்துவிட்டதே! (வெளி 2 : 4, 5)



## 9. ‘ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறேன்..’

நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், இதோ, பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் கண்டேன்.

தூதன் : நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறேன் என்றேன்.

நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், இதோ, பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் கண்டேன்.

தூதன்; நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறேன், அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்துமுழமுமாயிருக்கிறது என்றேன்.

அப்பொழுது அவர்: இது பூமியின்மீதெங்கும் புறப்பட்டுப்போகிற சாபம்; எந்தத் திருடனும் அதின் ஒரு புறத்திலிருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப்போவான்; ஆணையிடுகிற எவனும், அதின் மறுபுறத்தில் இருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப்போவான்.

அது திருடன் வீட்டிலும், என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறவன் வீட்டிலும் வந்து, அவனவன்வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்படி அதைப் புறப்பட்டுப்போகப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (சக 5 : 1 - 4)



- இது உள்ளும் புறம்பும் எழுதப்பட்ட வேதமாகிய புஸ்தகச்சுருள்.
- இது 39 பழைய நியமங்களாலும், 27 புதிய நியமங்களாலும் ஆன புஸ்தகச்சுருள்.
- இது சபையெங்கும் புறப்பட்டுப்போய் அதை நியாயம் விசாரிக்கும் புஸ்தகச்சுருள்.
- இதின் ஆசீர்வாதம் ஒருபுறமிருக்க, மறுபக்கம் காணப்படும் சாபத்தினால் திருடர்களாகிய மக்கள் அழிக்கப்பட்டுப் போவார்களே!
- இதின் பழைய, புதிய ஏற்பாடுகளின்படியே சபைகள் நியாயம் விசாரிக்கப்படுமே!
- அது களவும் திருடும் செய்த தேவ ஜனத்தின் வீடுகளிலும், கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு பொய்யாணையிட்ட ஊழியர்கள் வீடுகளிலும் வந்து அவனவன் வீட்டின் நடுவே தங்கி அந்த வீடுகளையும் சபைகளையும் அதின் கட்டிடங்களோடே கூட நிர்மூலமாக்கிப் போடும்படி, இதோ தேவ வார்த்தையாகிய புத்தகச்சுருள் சபை நடுவே புறப்பட்டுப் போகும் காலத்தின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது.
(சகரி 5: 1-4)

## சகரியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 10. ‘புறப்பட்டு வருகிற ஒரு மரக்காலைக் காண்கிறேன்’

என்னோடே பேசின தூதன் வெளியே வந்து என்னை நோக்கி: நீ உன் கண்களை ஏறெடுத்து புறப்பட்டுவருகிறதை என்னவென்று பார் என்றார்.

அது என்னவென்று கேட்டேன்; அதற்கு அவர்: அது புறப்பட்டுவருகிறதாகிய ஒரு மரக்கால் என்றார்.

இதோ ஒரு தாலந்து நிறையான ஈயமூடி தூக்கிவரப்பட்டது; மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள்.

அப்பொழுது அவர்: இவள் அக்கிரமக்காரி என்று சொல்லி, அவளை மரக்காலுக்குள்ளே தள்ளி ஈயக்கட்டியை அதின் வாயிலே போட்டார்.
(சகரியா 5 : 6 - 8)

மரக்கால் அளக்கும் ஒரு அளவையைக் குறிக்கிறதல்லவோ?




- இதோ தேவனின் அளவையான மரக்கால் சபையெங்கும் புறப்பட்டுப் போய் சபையின் காரியங்களை அணு அணுவாய் அளக்கப்போகும் காலமிது!
- தேவன் தமது சபையைத் தமது அளவையால் அளந்து, தமது தராசினால் நிறுத்துப்பார்க்கும் நேரமிது!
- மரக்காலாம் அளவைக்குள்ளே அக்கிரமக்காரர்கள் முடக்கப்பட்டு, புடைக்கப்பட்டு, தள்ளப்பட்டு அடைக்கப்படப்போகும் காலமிது!
- தேவனின் மரக்காலுக்கும் அளவுகோலுக்கும் தராசுக்கும் எவரும் தப்பிப்போக இயலாத காலமிது!
- தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்படப்போகும் சபையின் காலமிது!

## சகரியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 11. ‘புறப்பட்டு வருகிற இரண்டு ஸ்திரீகளைக் காண்கிறேன்’

நான் என் கண்களை ஏறெடுத்து, இதோ, புறப்பட்டுவருகிற இரண்டு ஸ்திரீகளைக் கண்டேன்; அவர்களுக்கு நாரையின் செட்டைகளுக்கொத்த செட்டைகள் இருந்தது; அவர்கள் செட்டைகளில் காற்றிருந்தது; இவர்கள் மரக்காலை பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள்.

நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: இவர்கள் மரக்காலை எங்கே கொண்டுபோகிறார்கள் என்று கேட்டேன்.

அதற்கு அவர் சிநெயார் தேசத்திலே அதற்கு ஒரு வீட்டைக் கட்டும்படிக்கு அதைக் கொண்டுபோகிறார்கள்; அங்கே அது ஸ்தாபிக்கப்பட்டு, தன் நிலையிலே வைக்கப்படும் என்றார்.
(சகரியா 5 : 9-11)

- நாரையின் செட்டைகளுள்ள ஸ்திரீகள் அருவருப்புக்கும் அசுத்தத்துக்கும் பாவத்துக்கும் அடையாளம் அல்லவோ?

- அவர்களின் செட்டைகளின் காற்று - பாவக்காற்று, விபச்சாரக்காற்று !

- வேத வசனமாம் மரக்காலைத் தங்கள் வாழ்வின் அளவாய்க் கொண்ட பரிசுத்த ஜனத்தை இது, சிநேயார் தேசமாம் பாபிலோனின் பாழான ஸ்தலங்களுக்கும், தங்களுக்குப் பேர் உண்டாகக் கட்டப்படும் பெருமையின் உயரங்களுக்கும் கொண்டுபோகிறதோ?

- இன்றைய சபை எப்படிப்பட்ட காற்றினால் அடித்துக் கொண்டு செல்லப்படுகிறது? பெருமையின் காற்றோ? வேசித்தனக் காற்றோ? அசுத்தமும் பெருமையும் பாவமும் நிறைந்த கீழ்க்காற்றோ?

## சகரியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் ?

### 12. 'நாலு இரதங்களையும் நாலு குதிரைகளையும் காண்கிறேன்'

(சகரியா 6: 1-8)

இவைகள் தேவ சமூகத்திலிருந்து புறப்படுகிற நாலு ஆவிகளாம்.

இவைகள் சபைகளின் நான்கு திசைகளுக்கும் புறப்பட்டுச் செல்லும்படி கர்த்தர் அனுப்பும் அழிவுக்கு அடையாளமான நான்கு குதிரைகளாம்.



## (A) வெள்ளைக் குதிரை :

'இதோ ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான். (வெளி 6.2)

வெளிப்படுத்தின விசேஷத்தின்படி, இந்த வெள்ளைக்குதிரையில் ஏறியிருப்பவன் அந்திக்கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும், வெள்ளைக்குதிரையோ சமாதானத்துக்கும், சமாதான ஒப்பந்தங்களுக்கும் அடையாளமாகவே இருக்கிறதென்பது பல வேதவல்லுநர்களின் கருத்து.

உபத்திரவக்காலத் துவக்கத்திலே அந்திக்கிறிஸ்து உலகின் பல நாடுகளோடு சமாதான உடன்படிக்கை செய்து, தன்னை ஒரு சமாதானத் தூதுவனாகவே காட்டிக்கொண்டு, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நல்ல உலகத்தலைவனாகவே வலம் வருவான் என்பது நாம் அறிந்ததே!

- அந்திக்கிறிஸ்து - அதாவது **Anti-Christ** - அதாவது, இவன் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரான ஒருவன்!

- இதோ இங்கே, கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும், கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கும் எதிரான ஒரு தேசத் தலைவர் ! இவர் **Anti-Conversion Law** கொண்டுவரப்போகும் **Anti-Christ** ன் இந்திய முன்னோடி!

- தன்னை ஒரு சமாதானத் தூதுவராகவே காட்டிக்கொண்டு, உலக நாடுகளின் உறவையும் இணக்கத்தையும் சம்பாதித்தவராய், வணிக ரீதியிலும் ஒப்பந்தங்கள் பல செய்து, ஏறக்குறைய உலக நாடுகள் அனைத்தையுமே பறந்து பறந்து சென்று பார்த்து வந்தவர் இவர் !

- உள்நாட்டிலும் 'நல்லகாலம் பொறக்குது...நல்லகாலம் பொறக்குது...(**Achche Dhin Aanewale hain**) என்று சொல்லிச் சொல்லியே உடுக்கு அடித்து வருபவர் இவர் !

- உள்நாட்டில் இரண்டாம் முறையாக ஜெயித்து, ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலுமே ஜெயிக்கிறவராகவும், ஜெயிப்பவராகவுமே தன் வெள்ளைக்காரில் வலம்வந்து கொண்டிருக்கிறவர் இவர் !



- என்ன தான் தன்னை மக்களின் (மன் கீ பாத்) மனங்கவர் நண்பனாகவும், சமாதானப்புறாவாகவும் காட்டிக்கொண்டாலும், இவரது கையில் இருப்பதென்னவோ அயோத்தி ராமரின் வில் தான் அல்லவோ ? 'அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப் போல மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம்; அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்...' (சங் 55:21)

## (B) சிவப்புக்குதிரை :

‘அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி 6:4)

- சிவப்பு, இரத்தத்தைக் குறிப்பதல்லவோ?

- இவர் கை வைக்கும் காஷ்மீரின் ஹஜுரிபாகோ, டெல்லியின் ஷாஹீன்பாகோ, இவர் கால் வைக்கும் ஸ்ரீ நகரின் செஞ்சதுக்கமோ, டெல்லியின் செங்கோட்டையோ, அங்கே குருதி உறுதி!

- ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடோ, தெலுங்கானா பிளவோ, குஜராத் ஃபைல்களோ, மாலே காங்வ் இரயில் எரிப்போ, மேற்குவங்கத் தேர்தல் கலவரமோ, காஷ்மீரின் மண்டை உடைப்போ, டெல்லியின் CAA தீவைப்புகளோ, உபியின் புல்டோசர் அரசியலோ, இவர் திரும்பும் திக்கெங்கும் இரத்தம் உறையும் !

- இப்போது என்னவாம்? ‘அக்னி பாத்’ திட்டமாம்..! 17 வயதிலேயே இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பாம் ! நாலு வருட வேலையும் 11 லட்ச டெபாசிட்டும் உத்தரவாதமாம்! இது, ஹிட்லர் யூத்தின் SS மற்றும் ஹிட்லர் பாய்ஸின் SA படைகள், இரண்டாம் உலகப்போரின் முடிவிலே சிறுவர்களை கூழிந்துழிஜ ரீஜுஷ்ளயி- ஆகப் பயன்படுத்திய நாட்களை நினைவூட்டும் நாட்களோ? இப்போது 17 வயதுப் பையன்களில் தொடங்கும் இது, இன்னும் சில வருடங்களில் 13,14 வயதிலேயே இராணுவத்தின் கட்டாய ஆள்சேர்ப்பாய் மாறும் ! பொறுத்திருந்து பாருங்கள் ! ஏற்கனவே இதனால் வட இந்தியா பற்றியெரியத் தொடங்கிவிட்டது!

- எத்தனை இரத்தக்களறியானாலும் அவைகளெல்லாம் அவருக்குத் தற்செயலாய், தவறுதலாய்க் காருக்கு அடியில் மாட்டி அடிபட்டு செத்துப்போகும் நாய்க்குட்டி தானாம்! ‘இதற்கெல்லாம் கவலைப்படலாமா ?’ என்பார்!



- இரத்தம்! இரத்தம்! , தேசத்தின் நிலமெங்கும் இரத்தம்! இதோ, சிவப்புக்குதிரையில் உலா வருகிறார்!

(C) கறுப்புக்குதிரை :

'இதோ ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைக் கையில் பிடித்திருந்தான். அப்பொழுது ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் உண்டான சத்தத்தைக் கேட்டேன்..' (வெளி 6:5, 6)

- இந்தக் கறுப்புக்குதிரை தேசத்தில் பஞ்சத்தைக் குறிக்கிறதல்லவோ? மேற்சொன்ன வசனத்தின்படி, வழக்கமான அன்றாட விலைக்கு இது பத்து மடங்கு அதிகமாம்!

- இவர் வரி மேல் வரி போட்டு வறுத்தெடுப்பார்!

- சமையல் வாயுவிலிருந்து, பெட்ரோல் டீசலிலிருந்து டீக்கடை பிஸ்கட் முதல் காய்கறி வரை விலை தலையிலிருந்து மலைக்கு ஏறும்!

- அரிசி முதல் அரைக்கோதுமை வரை காண்ட்ராக்ட் என்னவோ அதானிகளுக்கும் அம்பானிகளுக்குமே !

- அரைலிட்டர் தண்ணீர் பாட்டில் 'அக்குவா ஜெயின்' பெயரில் தாம்பரத்தில் அமோக விற்பனையாக, 'அம்பானி வாட்டர் சப்ளையர்ஸ்' என்று தமிழில் பெயரெழுதப்பட்ட தண்ணீர் லாரிக்குத் தண்டையார் பேட்டையில் என்ன வேலையென்று தலையில் இடிக்கிறது!



- விமானக் கட்டணம் தான் நாளுக்கு நாள், நிமிஷத்துக்கு நிமிஷம் விஷமாய் ஏறுகிறதென்றால், குறிப்பிட்ட இரயில்களின் பயணக் கட்டணமும் மனம் போல் மாறிமாறி, இப்போது அந்தந்த இரயில்களைக் கண்டாலே அவைகளை விட வேகமாய் ஓட்டம் எடுப்பதாய் உள்ளது. பாக்கெட்டிலுள்ள கடைசிப் பத்து ரூபாயையும் பிடுங்குவார்களாம் ! இதற்குப் பெயர் **Dynamic firing** ஆம்! கடைசியாக இரயில் சேவையும் தனியார் வசமாகிறது!

- இவ்வளவு விலையேற்றத்துக்கும் தட்டுப்பாடுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் மத்தியிலும், ‘எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே!’ என்று, ‘வளமையான ஜட்டங்களெல்லாம் வறியவர்களுக்கல்ல’ என்று சொல்லி, அவைகளை வளமான கைகளுக்கு ஒதுக்கிவிட்டு, கடனான பெருந்தொகைகளை அவர்களுக்குத் தள்ளுபடியும் செய்து, அந்தத் தொகைகளைப் பொதுஜனத் தலையிலே பொதியாய்க் கட்டிவிட்டு, இவர் இமயமலையின் பத்ரிநாத் கேதார்நாத் குகைகளுக்குச் சென்று தவம் பூண்டுவிடுவார்! (பாவம் போக்கிப் பரிகாரம் தேடவோ???) இவர் போய் வந்தபின், ‘ இன்னார் தவமிருந்த தெய்வீகக்குகை’ என்று போர்டு போடப்பட்டு, அதின் கட்டண வசூல் எவரெஸ்ட்டைத் தொட்டுவரும்!

  இவைகளெல்லாம் வரப்போகும் பஞ்சங்களுக்கு ஆரம்பமே!

## (D) மங்கின நிறமுள்ள அல்லது புள்ளி புள்ளியான குதிரை :

‘இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்..அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன் பின்சென்றது. பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது..’ (வெளி 6:8)

இவைகள் தான் வரப்போகும் நாட்களில் சர்வசாதாரணமாக தேசத்தில் நடக்கப்போகிறவை. இப்போது மங்கலாகத் தெரியும் இந்த மங்கின நிறக்குதிரை, வரும் நாட்களில் தெளிவாகவே தெரிய ஆரம்பிக்கும். பட்டயமும் பஞ்சமும் சாவும், கொல்லும் கொடிய மனித மிருகங்களும் நிறைந்த மரண மண்ணாய், இந்த இந்திய மண்ணில் மரணநெடி நெடுகவே வீசும்!



தேசத்தின் பாழும் சுட்டெரிக்கப்பட்டதுமான இந்தக் குதிரைவாசல் வழியே இந்நால்வகைக் குதிரைகளும் ஏற்கனவே நுழைய ஆரம்பித்துவிட்டனவே!

கர்த்தர் எரேமியாவுக்குக் காண்பித்ததையும், ஆமோசுக்குக் காண்பித்ததையும், சகரியாவுக்குக் காண்பித்ததையும் திருஷ்டாந்தங்களாய் இன்றைய சபைக்கு இன்னொரு முறை திரைவிலக்கிக் காண்பித்து, இவைகள் திருஷ்டாந்தங்களாய் அல்ல, மெய்யாகவே சம்பவிக்கப்போகிறவைகள் என்று சொல்லி, ‘இதோ நாட்கள் எண்ணப்படுகிறது !’ என்று சொல்லுகிறார்..

**"COUNTDOWN- had already begun...**



# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER

# 03

இன்று நமக்கு வேண்டியது எழுப்புதல் அல்ல..
சீர்திருத்தத்தையும் தாண்டிய
ஒரு மா மகா ஆவிக்குரிய புரட்சி !

# இன்று நமக்கு வேண்டியது எழுப்புதல் அல்ல.. சீர்திருத்தத்தையும் தாண்டிய ஒரு மா மகா ஆவிக்குரிய புரட்சி !

03



Today the need of the Church is NOT A REVIVAL..
NOT JUST A REFORMATION..
But A TOTAL SPIRITUAL REVOLUTION !!

'பிசாசுகளையும் பிரிவினைகளையும் மாய்மாலங்களையும் எதிர்த்துப் போராடப் பிறந்தவன் நான்.. தடைகளையும் வேலிகளையும் உடைத்தெறிந்து முட்புதர்களையும் நெருஞ்சில்களையும் வெட்டி எறிந்து பள்ளங்களையும் குழிகளையும் நிரப்பி பாதையை நேராக்கத் தெரிந்து கொள்ளப்பட்டவன்..அதற்காவே அழைக்கப்பட்டேன்..'

....இதுவே அன்று மார்ட்டின் லூத்தரின் இடிமுழக்கமாய் இருந்தது.

ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து சீர்திருத்தம் தோன்றி இன்று 500 ஆண்டுகளுக்கு மேலான நிலையில், தேசமெங்குமுள்ள சபைகளில் எழுப்புதல் என்ற குரல் ஓங்கி ஒலிக்கும் இந்த வேளையில், சீர்திருத்தம் இல்லாமல் எழுப்புதல் என்ற ஒன்று இல்லவே இல்லை என்ற அப்பட்டமான உண்மையை உரக்கக் கூறி, லூத்தரின் நாட்களில் விட்டன்பர்க் ஆலய வாசலில் 95 குறிப்புகளை ஆணி அடித்தது போல, இன்றைய சோஷியல் மீடியாக்களிலும் பிரிண்ட் மீடியாக்களிலும் நிரந்தரமாய் ஆணியடித்து எழுதப்பட வேண்டிய வார்த்தைகள் இவை!

இன்று நமக்குத் தேவை எழுப்புதல் அல்லவே அல்ல.. சீர்திருத்தத்தையும் தாண்டி, இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தையே உயிரோடு தோலுரித்துத் தலைகீழாய்ப் புரட்டிப்போடும் வரலாறு காணா ஆவிக்குரிய புரட்சி ஒன்றே !

1. சபையின் அந்தரங்கப் பாவங்களும், அருவருப்புகளும், அழுக்கும் அசுத்தமும், தேவனுக்குப் பிரியமில்லாத யாவும் வெளியேற்றப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு, கழுவி எடுக்கப்படாதவரை 'எழுப்புதலுக்காக' ஜெபிக்கப்படும் ஜெபங்கள் யாவும் அபத்தமானவை. நமது முழு இரவு முழுப்பகல் ஜெபங்கள் நம் நடுவே ஒரு மிகப்பெரிய சீர்திருத்தத்துக்கும் புரட்சிக்குமான ஜெபங்களாகவே மாறுவதாக !

ஏசாயா 1:11 - 17 ன் வார்த்தைகளே நமது சட்டவாக்கியங்களாய் மாறுவதாக!

2. கர்த்தருடைய பணிவிடைக்காரராகிய ஆசாரியர்களும் தொண்டர்களும் தங்கள் அக்கிரமங்களுக்காகவும், சபையாரின் மீறுதலுக்காகவும் தங்கள் இருதயங்களைக் கிழித்து தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி மண்டபத்துக்கும் பலி பீடத்துக்கும் நடுவே கதறி அழுவார்களாக!

3. அப்சலோம் ராஜாவை சிங்காசனத்திலிருந்து துரத்திவிட்டது போல, இன்றைய சபைகள் சிங்காசனத்திலிருந்து கர்த்தரைத் துரத்திவிட்டு, தாங்களே எல்லாம் என்று அமர்ந்து கொண்டிருக்கவில்லையோ? ஐயோ! ராஜாவை வெறுங்காலாய்த் துரத்தி விட்டோமே! தமது முகத்தை மூடிக்கொண்டு அவர் புலம்பி அழுது மீண்டும் மலையேறும் சத்தம் நமக்குக் கேட்கவில்லையோ? அவரைத் திரும்ப அழைத்து வந்து சபைகள் தங்கள் முந்தின சீருக்குத் திரும்பட்டும் !

4. ஞாயிற்றுக்கிழமைகளில் வெறும் 2 மணி நேரம் சபையில் உட்கார்ந்துவிட்டு, மீதி நாள் முழுவதும் மால்களிலும், நண்பர்களுடனும், beach லும், பார்க்கிலும், ரெஸ்ட்டாரன்ட்டுகளிலும், இன்ட்டர்நெட்டிலும், உலகத்தாரோடு சேட்டிங்கிலும் டேட்டிங்கிலும் பொழுதுபோக்கும் விசுவாசி என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்பவர்களை விட்டு விலகாமலும் அவர்களைக் கைவிடாமலுமிருந்து அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்க, பரிசுத்த தேவனாகிய அவர், இப்படிப்பட்ட நமது சபைகளுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

5. தங்கள் சிஸ்டம் முழுவதிலும், லேப்டாப்பிலும் செல் போனிலும் கண்ட கண்ட இமேஜ்களையும் ஸ்டேட்டஸ்களையும் போட்டு, அவைகளை அரை நிர்வாண, முழு நிர்வாணப் படங்களால் நிறைத்து வைத்துக் கொண்டு, யூ-ட்யூபிலும்,ட்விட்டரிலும்,facebook லும் வாட்ஸப்பிலுமே வாழ்ந்து கொண்டு,'எங்கள் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நாங்கள் தடைசெய்யவில்லை' என்று தங்களைத் தாங்களே Gen next பிலீவர்ஸ் என்று அழைத்துக் கொள்ளும் இன்றைய இளைய தலைமுறையாகிய இளவட்டங்கள் கேட்பதையெல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொடுத்து அவர்களுக்காக யாவையும் செய்து முடிக்க, வைராக்கியமுள்ள மகா பரிசுத்த தேவனாகிய அவர், இவர்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

**6.** ஆராதனை என்ற பெயரில் இங்கு இவர்கள் போடும் ஆட்டபாட்ட குத்தாட்டக் குதியாட்டக் கும்மாளங்களைக் கண்டும் காணாதவர் போலிருந்து, தீர்க்கதரிசனம் என்ற பெயரில் ஜனத்தை வஞ்சித்து, தங்கள் வயிறு வளர்த்து, சபையாகிய ஆசரிப்புக்கூடார வாசலிலேயே சகல அக்கிரமங்களையும் சகஜமாய் நடப்பிக்கும் ஆசாரிய போதகர்களின் மக்களாகிய நவீன ஓப்னி பினெகாஸ்களை, இன்னும் அவர்களது ஊழியங்களிலே உயர்த்தி உயர்த்தி ஆசீர்வதித்துப் பெருக்கிக் கொண்டே போக, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சபையை சம்பாதித்த இரட்சகராகிய அவருக்கு, இப்படிப்பட்ட இன்றைய நவீன கிறிஸ்தவ சமுதாயத்துக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன அவருக்கு ?

(தங்கள் மேல் கற்பழிப்பு வழக்கும் கொலை வழக்கும், ஊழல் வழக்கும் உள்ளவர்கள் மட்டுமல்ல, உண்மையாகவே இப்படிச் செய்தவர்களும் கூட இன்று பாஸ்டர்கள், ரெவரண்டுகள் மற்றும் பிஷப் பட்டங்களோடு வலம் வரவில்லையோ ? )

**7.** ஆசீர்வாதம், அரவணைப்பு, பாதுகாப்பு, பரிபூரணம், செழிப்பு கொழிப்பு, வாக்குத்தத்தம் வல்லமை, எழுப்புதல், அக்கினி என்று ஆனந்த மழையிலும் அபிஷேக அருவியிலுமே மக்களைக் குளிப்பாட்டி திக்குமுக்காடச் செய்து, தேவனாகிய கர்த்தரின் சித்தத்தை அறிவதிலும், நித்தியத்தின் கண்ணோட்டத்திலும் வாழ்ந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு வாழும் வாழ்விலிருந்து தமது ஜனத்தை வழி தப்பப்பண்ணி, அவர்களை ஆவிக்குரிய இருளிலும், குருட்டாட்டத்திலுமே வைத்திருக்கும் நூதன அப்போஸ்தலராகிய இன்றைய கூட்டத்தோடு, கூட இருந்து கிரியை நடப்பித்து, எழுப்புதலை அனுப்பி, அவருடைய வல்லமையுள்ள வசனத்தை உறுதிப்படுத்த ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தராகிய அவருக்கு, இவர்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன அவருக்கு ?

**8.** எளிய பாமர மக்கள் கொடுக்கும் காணிக்கைகளையும், அனாதைகளையும் விதவைகளையும் பராமரிக்க வெளிநாடுகளில் உள்ளவர்கள் தாங்கள் உபவாசம் செய்து மிச்சம் பண்ணி சேர்த்து வைத்து அனுப்பும் டாலர்களையும், பைபிள் காலேஜ் நடத்தவும் ஆலயங்கள் கட்டவும் கொடுக்கப்படும் நன்கொடைகளையும் வைத்துத் தங்களுக்கு நிலபுலன்களை வாங்கி, வீடுவாசல்களைக் கட்டிக்கொண்டு, வசதியும் சுகபோகமுமாய் வாழ்ந்து, தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்கவைத்து, கோடிக்கணக்கான செலவில் அவர்களுக்குத் திருமண வைபவங்கள் நடத்தி அழகு பார்க்கும் இன்றைய சுவிசேஷகர்களும் பாஸ்டர்களுமாகிய இவர்களுடன் இருந்து, இவர்கள் வாஞ்சித்த காரியங்களையெல்லாம் தப்பாமல் வாய்க்கப்பண்ண, ஐசுவரிய சம்பன்னராயிருந்தும், தம்மையே தரித்திரராக்கிக் கொண்ட தயாபர தேவனாகிய இவர்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன கர்த்தருக்கு ?

9. நட்சத்திர ஊழியர்களும், போதகர்களும் ஜனங்களுக்கு விக்கிரகங்களாகிப் போன இன்றைய நவீன ஆவிக்குரிய விக்கிரக ஆராதனைகளும் கட்டோடு ஒழிந்து, பிரசங்க பீடங்கள் என்ற தேவனற்ற மகா அசுத்தமான பலிபீடங்கள் தகர்க்கப்பட்டே ஆக வேண்டாமோ? 'ரெகோபாத்' என்ற பெயர் கொண்ட அநேக சபைகளின் மேல் தேவனுடைய விரல் 'இக்கபோத்' என்று எழுதி வெகுகாலமாகி விட்டதை சபை அறியவில்லையோ?

10. 'ஆசீர்வாதம்' ஆசீர்வாதம் என்று சொல்லிச்சொல்லி செழிப்பையே மையமாக வைத்து ஜனத்தைத் திசை தப்பிச் செல்ல வைத்துவிட்ட உபதேசங்களுக்கு ஒரு முடிவு வராதோ?

11. ஜெப எண்ணெயும், ஜெபத் தண்ணீரும், ஜெப கைக்குட்டையும், ஜெப செங்கல், ஜெப CD, ஜெபப் புத்தகம், ஜெபப் பர்ஸ், ஜெபப் பேனா, ஜெப சேலை சட்டை வியாபாரங்களால், வியாபாரிகளால் கள்ளர் குகையாக்கப்பட்ட சபைகளை சுத்திகரிக்க, என் ஆண்டவரே, இன்னொரு முறை சவுக்கெடுத்து வரமாட்டீரோ?

12. தங்கக் காணிக்கைகள், வெள்ளிக் கொலுசுக் காணிக்கைகள், பங்காளர் திட்டங்கள், ஐந்து அப்ப இரண்டு மீன் சித்து வேலைகள், கர்த்தர் தந்த திட்டங்கள் என்ற வஞ்சகங்கள் நிரந்தரமாய் நிறுத்தப்படுவது எப்போது? இன்று வேண்டியது எழுப்புதலே அல்ல, ஒரு அப்பழுக்கற்ற சீர்திருத்தமும் ஆவிக்குரிய புரட்சியுமே!

13. அடிக்கடி பரமேறித் திரும்பும் நம்மவர்களும், தூதர்களோடு ஆப்பமும் தோசையும் சாப்பிடும் நம்மூர் மாயவித்தைக்காரர்களும், பிதாவுக்கே DVD கொடுத்து வந்த நம் இறைத்தூதுவர்களும் மாயவித்தை சீமோனையே தோற்கடித்து வெற்றி கண்டவர்கள் அல்லவா?

14. ஆராதனை என்ற பெயரில், சபையின் நட்சத்திரங்களாய் ஜொலித்த விசுவாசிகளில் மூன்றில் ஒரு பங்கைத் தங்கள் வாலால் கீழே இழுத்துப் போட்டிருக்கும் ஆராதனைக் கூட்டத் தலைவன் லூசிபரின் வழித்தோன்றல்களே, திரும்ப மாட்டீர்களோ ? திருந்த மாட்டீர்களோ? இவர்களைப் பின்பற்றும் Gen Next வாலிபச் செல்வங்களே, உங்கள் கண்கள் திறக்கப்படாதோ? 'எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்' என்று பாடுவதை நிறுத்திவிட்டு முழுச்சீர்திருத்தம் ஒன்றுக்காகவும், புரட்டிப்போடும் ஆவிக்குரிய புரட்சி ஒன்றுக்காகவும் மட்டுமே சபை கதறுவதாக!

15. எழுப்புதல் என்ற ஒற்றை வார்த்தையை வைத்து கூட்டம் சேர்த்துப் பணம் பார்க்கும் இன்றைய ஊழியர்களை மனதில் வைத்தே, 'நாம் எழுப்புதல் என்ற வார்த்தையின் கற்பையும் கருத்தையுமே அழித்து அதைச் சிதைத்துச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கிவிட்டோம்! (We had prostituted the word revival )' என்றார் லியோனார்ட் ரேவன்ஹில். இன்றைய சபைக்குத் தேவை எழுப்புதல் அல்லவே அல்ல, ஒரு தலைகீழ் மாற்றமான சீர்திருத்தமும், அதை நடைமுறையில் ஏற்படுத்தும் மகா புரட்சி ஒன்றும் மட்டுமே!

16. எழுப்புதல் தீர்க்கதரிசனப் பெருவிழாக்கள், இன்னிசையில் எழுப்புதல் திருவிழாக்கள், எருசலேம் எழுப்புதல் பயணங்கள், எழுப்புதல் நடனங்கள் அடியோடு நின்று போகாதோ?

17. சமூக வலை தளங்களில் சிக்கிச் சீரழியும் போதகர்களே, விசுவாசிகளே, வாலிபர்களே, உங்கள் கட்டுகளை அறுத்து வெளிவரமாட்டீர்களோ?

18. ரியல் எஸ்டேட் பிஸினஸ் செய்யும் ஊழியர்களே, கலியாண புரோக்கர்களே, பேங்க் லோன் இடைத்தரகர்களே, கிறிஸ்தவக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் சீட் வாங்கித் தருகிறோம் என்று வஞ்சிக்கும் கூட்டங்களே, அரசியலில் ஐக்கியமாகிவிட்ட பிஷப்புகளே, கிறிஸ்தவர்களின் ஓட்டுகளுக்காக அரசியல் கட்சிகளிடம் கோடிக்கணக்கில் பணம் வாங்கிய பினாமிகளே, மனந்திரும்ப மாட்டீர்களோ?

19. ஜாதிப் பெயர்களில் சபையும் ஊழியமும் நடத்தி, இந்த ‘ஜாதிப் பிசாசு’ இருக்கும் வரை எழுப்புதல் எந்த வழியாக வருமென்று யாரேனும் இங்கு சொல்லக்கூடுமோ?

20. மஞ்சள் நீராட்டு விழாவிலும், சீமந்தத்திலும் பாஸ்டருக்கு என்ன வேலை? ஒரு ஊழியன் செய்ய வேண்டியதெல்லாம் ரெண்டே ரெண்டு வேலை தான் இல்லையோ ? ஜெபத்திலும் வேத வசன உபதேச ஊழியத்திலும் தரித்திருப்பதேயன்றி மற்றதை மற்றவர்கள் பார்க்கட்டுமே! ஐயோ, கர்த்தாவே, எங்கள் சபைகளைப் புரட்டிப்போட மாட்டீரோ ?

21. பில்லி சூனியமும் கேரள மாந்திரீகமும் செய்து பேயைக் கொண்டு பேயோட்டும் மந்திர தந்திர ஊழியர்களே, உங்களுக்கு ஐயோ!

22. ‘உமது அடியாரோடே ஐம்பது அடியாட்கள் இருக்கிறார்கள்’ என்று கட்டைப்பஞ்சாயத்து நடத்தும் ஊழியர்களே! ஊழியர்கள் கூடுகைகள் கைகலப்பில் முடியும் கூட்டங்களே, எழுப்புதலையெல்லாம் மறந்து விடுங்கள்!

23. போதகர் வீட்டு பிரதிஷ்டையில் மாட்டைக் கொண்டு வீட்டுக்குள் விட்டு பூஜை செய்து, சாயங்காலத்தில் ஸ்தோத்திரக் கூட்டமும் நடத்தும் போதகரல்லாப் பாதகர்களே! ஐயோ! ஐயோ! ஐயோ!

24. ஊழியர்கள் கூடுகையில் இலவசங்களும், பிரியாணியும் தவிர வேறென்ன இங்கே? ( ‘நூறு - சோறு ’ என்றார் ஒருவர் - நூறு ரூபாய் கையில் கொடுத்து, சோறு போட்டு அனுப்புவதால் இந்தப் பெயராம்!)

25. பல தாரப் பாஸ்டர்களே, விதவைகள் வீடுகளைப் பட்சிப்பவர்களே, இன்னொருவரின் மனைவியோடும் கணவனோடும் வெளிப்படையாகவே, அணுவளவும் பயமே இன்றிக் குடும்பம் நடத்தும் விசுவாசிகளே, போதகர்களே உங்களுக்கு ஐயோ!

26. கிறிஸ்தவ வாலிபப் பிள்ளைகள், போதகர்களின் மனைவிகள் மற்றும் விசுவாசிகளின் ஆடை அலங்காரங்கள், அலங்கோலங்கள் ! முக்காடெல்லாம் காற்றிலே பறந்து, துண்டு துப்பட்டா இல்லா ஒப்பன் கலாச்சாரங்களே ! ஐயோ! ஐயோ!

27. கிறிஸ்தவத் திருமணங்களில் காணப்படும் ஒழுங்கீனங்கள்.. நவநாகரீக பாலிவுட் கலாச்சாரங்கள்.. உலகமயமாக்கல்கள்.. 'பரிசுத்த விவாகம்' அல்லது 'மெய் விவாகம்' என்ற வார்த்தையே அழிக்கப்பட்டு, திருமணத்துக்கு முன்பே **photo shoot** என்ற மாயத்தில் திருமணம் செய்யப்போகிறவர்கள் தங்களையே மறந்து வீடியோ எடுத்து டூயட் பாடி வரும் சினிமாவையே மிஞ்சின காட்சிகள், அவைகள் வரவேற்பிலும் வாட்ஸப்பிலும் சோஷியல் மீடியாவில் பதிவிடப்பட்டு மற்றவர்களுக்கு துர்மாதிரியாகவும் இருப்பது மட்டுமன்றி, கல்யாணம் முடிந்ததுமே ரிசப்ஷனிலேயே விருந்தினர்கள் முன் பையன் பெண்ணை இரண்டு கைகளிலும் ஏந்தித் தலைக்கு மேலே தூக்கிச் சுற்றுவது.. இது அநேகக் கிறிஸ்தவத் திருமணங்களில் பின்பற்றப்பட்டு, வரும் தலைமுறைக்கு இடறலாய் இல்லையோ? கானாவூர்க் கலியாணத்தில் வந்திருந்தவர், இப்படிப்பட்ட திருமண வைபவங்கள் நடுவிலிருந்து வெளியேறி பல காலமாயிற்று.

28. எளிமை என்ற எண்ணமே எடுபட்டுப் போய், குடும்ப நிகழ்வுகளிலும், சபை நிகழ்ச்சிகளிலும் காணப்படும் ஆடம்பரங்கள். வசதியான விசுவாசிகள், தங்களிடம் பணம் இருக்கிற ஒரே காரணத்தினாலேயே தங்கள் பிள்ளைகளுக்கு யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்து ஃபேஸ்புக்கில் போட்டு உலகத்துக்குக் காட்டி உளமாறும் காட்சிகள்!

29. கிறிஸ்மஸ் காலங்களில் தங்கள் மேலும் தங்கள் பிள்ளைகள் மேலும் பணத்தைத் பச்சைத் தண்ணீராய் வாரியிறைத்துச் செய்யப்படும் விரயங்கள்!

30. நட்சத்திர ஊழியர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் டாம்பீக வாழ்க்கை முறைகள்! 'எங்கள் பாஸ்டர் பென்ஸ் கார்ல தான் போவாரு தெரியுமா? அவரு பயங்கர பிஸி! டைமே கிடையாது அவருக்கு !' என்று பாஸ்டர் புகழ்பாடும் சுய விளம்பர விசுவாசக் கூட்டம்!தங்கள் வழுக்கை மண்டையை முடியால் நிறைக்கும் **Hair Transplanting** க்கு இலட்சக் கணக்கில் செலவு செய்யும் போதகர்கள் கதையைக் கேட்டால் தலை சுற்றும்!

31. 'நீ உன் மட்டிலிரு, என் சமீபத்தில் வராதே, உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன்' என்ற தலைக்கேறிய பணப்பெருமை ! வரப்பெருமை ! சபைப் பெருமை ! ஜாதிப்பெருமை! ஜனக்கூட்டப் பெருமை ! அறிவுப்பெருமை ! ஆங்கிலப் பெருமை! வெளிநாட்டுப் பெருமை! வெளிப்படுத்தல்களின் பெருமை! கார் பங்களா பெருமை! டாக்டர், ரெவரன்ட், பிஷப் பெருமை!

32. விசுவாசிகளுக்கு விக்கிரகங்களாகிப் போன நட்சத்திர ஊழியர்கள்! மலர் மாரி பொழியப்பட்டு, குருத்தோலை ஏந்தி, தேரில் அமர்த்தப்பட்டு, தேருக்கு முன்னால் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டு ஊர்வலமாய் பவனி வரும் ஊழியர்கள் ! ஐயோ! ஐயோ! ஐயோ!

33. வாரிசு அரசியல் போன்று, அழைப்பே இல்லாவிட்டாலும், தாலந்தும் வரங்களும் இல்லாவிட்டாலும் சபையையும், சொத்துக்களையும் தக்க வைத்துப் பராமரித்து, ஊழியத்தை அடுத்த லெவலுக்குக் கொண்டு செல்ல உட்கார வைக்கப்படும் போதகர்களின் வாரிசுகள். (உண்மையில் அழைப்புப் பெற்று ஊழியம் செய்யும் பிள்ளைகள் - விதிவிலக்கு)

34. சமயத்துக்கும், இடத்துக்கும், கூட்டத்துக்கும் ஏற்ப தங்கள் பிரசங்கங்களை மாற்றும் பச்சோந்திப் பிரசங்கிகள்! எத்தனை கலப்படக் கலர்ப் படங்கள்! மாய்மாலங்கள்! ஜம்பன வித்தைகள்! அத்தனைக்கும் முடிவு கட்டப்படும் நாட்கள் இதோ!

35. 'வெண் வஸ்திரம்' என்ற பேச்சுக்கே இடமின்றி, போதகர்களும் விசுவாசிகளும் என்ன கலரில் வேண்டுமானாலும், டிசைனில் வேண்டுமானாலும் கலர் கலராய், பளபளப்பாய் உடுத்திக்கொள்ளலாம் என்று உலா வரும் விசுவாசக் கூட்டம் ! White & White எல்லாம் போய், இப்போதெல்லாம் Black & Black தான் ட்ரெண்டே! பிதாக்களின் எல்லைக் குறிகளையெல்லாம் பிடுங்கியெறிந்து பல காலமாகிப் போனது!

36. 'ஆண்டவர் அழைக்கிறார்' என்ற பெயரில் ஆண்டவரிடமோ, சிலுவையிடமோ ஜனங்களை அழைக்காமல் தங்கள் கோபுரங்களையும், கூடாரங்களையும், தோட்டங்களையும் ஊருக்கு ஊர் எழுப்பி, ஒரே நகரத்தின் நாலு திசைகளிலும் நாலு மையங்களைத் திறந்து, ஒவ்வொன்றையும் கலெக்ஷன் சென்ட்டர்களாக்கி விட்ட கொடுமைகள் !

37. இன்று போல் என்றாவது கர்த்தர் கனவீனப்படுத்தப்பட்டதும், தமது சிநேகிதர் வீட்டிலே காயப்பட்டதும் உண்டோ? எவ்வளவு உதாசீனம்! எவ்வளவு அசட்டை! எவ்வளவு கனவீனம்! தேவனுடைய குமாரன் காலின் கீழ் மிதிக்கப்பட்டு, பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தம் அசுத்தம் என்று எண்ணப்பட்டு, கிருபையின் ஆவியானவர் இன்று நிந்திக்கப்பட்டுக் கொண்டே இருக்கவில்லையோ?

38. தீர்க்கதரிசனம் மிகப்பெரிய ஒரு வஞ்சக வியாபாரம். ஓ! இதனால் வஞ்சிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் வாலிபரும், உடைந்த குடும்பங்களும் எத்தனை எத்தனை! இந்தத் தீர்க்கதரிசன மவுசுகள் ஓய்ந்து ஒழியாதோ?

39. ‘நான் ஆண்டவருடைய பிள்ளை, எனக்கு இப்படி நடக்கக்கூடாது’ என்று விசுவாச அறிக்கை என்ற பெயரில் எதை எதையோ பிதற்றி, எல்லாப் பிரச்சனைக்கும் பிசாசையே காரணம் காட்டி தங்களைத் தாங்களே வஞ்சித்து, அறிவில்லாமையினால் சங்காரமாகும் ஒரு கூட்டம் இங்கே ! ‘பயப்படாதே பயப்படாதே..’ என்றும், ‘பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்’ என்றும் சொல்லிச் சொல்லியே தெய்வபயமே அற்றுப்போன ஒரு கூட்டம்!

40. வரங்களையும் வளங்களையும் தன்னத்தே ஒரு சேரக் கொண்ட தேவஜனம் ஒன்று இன்று போல் என்றும் சபை சரித்திரத்தில் உண்டோ? வேத புத்தகத்தின் பல்வேறு மொழி பெயர்ப்புகள் என்ன, விளக்கவுரைகள் என்ன, கணக்கற்ற ஆவிக்குரிய புத்தகங்களும் செய்திகளும் என்ன, விரல் நுனியில் அத்தனையும் வைத்திருக்கும் இன்றைய தலைமுறை! இவைகளில் ஒன்றைக்கூட தன்னிடம் பெற்றிருந்திராத ஏனோக்கு இன்னும் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தானாம்! நமது வீட்டின் புத்தக அலமாரிகளில் தூசிபடிந்து கிடக்கும் வேத புத்தகங்களும், ஆவிக்குரிய நூல்களும், CD DVD க்களும் நியாயத்தீர்ப்பின் நாளிலே நமக்கு விரோதமாய் சாட்சியிடாதோ?

41. தேர்தலுக்கு முன் களைகட்டி, கல்லா கட்டும் தீர்க்கதரிசன வியாபாரிகளே, உங்கள் தீர்க்கதரிசனங்கள் பொய்த்துப் போய், சமூக வலைதளங்களில் சரமாரியாக வசை வாங்கினாலும் அடுத்த தேர்தலுக்கு முன்னால் மைக் பிடிக்க உங்களுக்கு வெட்கமில்லையோ? தேவனே எங்களுக்கு நாத்தான்களையும், எரேமியாக்களையும், யோவான் ஸ்நாகன்களையும் மீண்டும் ஒரு முறை அனுப்பித்தரமாட்டீரோ?

42. தாங்கள் ஏன் இரட்சிக்கப்பட்டோம், இதுவரை என்ன செய்து வந்தோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம், என்ன செய்யப் போகிறோம் என்ற தரிசனமே இல்லாத ஊழியர்கள்! விசுவாசிகள்! சபைகள்!

43. இக்காலத்துக்குத் தேவையான தேவ திட்டம் என்ன, தேவனுடைய மனதின் காரியம் என்ன, அவருடைய இருதயத்தின் பாரம், வேதனை என்னவென்று அறியாமலேயே, அறியவும் விரும்பாமலேயே ஊழியத்திலும் வேலைகளிலும் 24 மணி நேரமும் ஓடிக்கொண்டே இருக்கும் பரிதாபம் ! ‘ஓவர் ஓட்டம், ஓட்டம் ஓவர்!’ ஜாக்கிரதை !!

44. ‘கர்த்தர் காட்டினார், கர்த்தர் சொன்னார், கர்த்தரே அனுப்பினார்’ என்று காண்பித்து ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டங்கள்!

45. ‘இஸ்ரவேல் பயணங்கள்’ சுற்றுலாக்களின் உள்நோக்கங்கள் என்ன?

**46.** மற்ற சபைகளை, மற்ற ஊழியர்களை, பிரபலங்களைக் காப்பியடிக்கும் அவலம்! அப்படி காப்பியடிக்க வேண்டுமானால் சபை இயேசு கிறிஸ்துவையும், அப்போஸ்தலர்களையும் மட்டுமே காப்பியடிக்கட்டுமே!

**47.** வஞ்சிக்கப்பட்ட கூட்டத்தோடு கூட்டமாய், தானும் வஞ்சிக்கப்பட்டது அறியாமல் சிக்கிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய ஒரு விசுவாசக் கூட்டம் இங்கே !

**48.** கள்ள உபதேசங்கள் என்னும் பேய்க்கொம்மட்டிக் காய்களை மடிநிறைய அறுத்து வந்து, யூ-ட்யூபிலும், சோஷியல் மீடியாவிலும் போட்டு சமைத்து, போனுக்கு போன் ஃபார்வர்ட் பண்ணிப் பரிமாறி, சபைக்குள் சாவைக் கொண்டு வரும் கலாச்சாரத்துக்கு சாவு மணியடிக்கும் நாட்கள் இதோ!

**49.** ஆவியில் சிரித்தல், அழுதல், விழுதல், கொர்ஜித்தல் எல்லாம் போய், ஆவியில் பரிசுத்த முத்தத்தோடு கட்டிப்பிடித்து ஆடி ஆராதித்து ஆனந்திக்கும் கூட்டங்கள்!

**50.** ஒரே ஆராதனை காலை எட்டு மணி முதல் மதியம் பன்னிரண்டு, ஒரு மணி வரை நடந்த காலமெல்லாம் மலையேறி, இப்போது வெறும் ஒண்ணேகால் மணி நேர, ஒன்றரை மணி நேர ஆராதனைகள்.. அதிலும் சரியான நேரத்துக்கு வராத விசுவாசிகள் ! ஆராதனைக்குள் வந்து உட்கார்ந்து சினிமா டவுன்லோட் செய்பவனுக்கும், வாட்ஸப் Facebook சேட்டிங்கில் இருப்பவனுக்கும், காமெடி ஷோவும் கிரிக்கெட்டும் பார்ப்பவனுக்கும் பரலோக டிக்கட் already reserved. இது தான் பரிசுத்த ஓய்வுநாள் ஆசரிப்போ?

**51.** சபையில் தேவ பிரசன்னமும் தேவ மகிமையும் இல்லாத குறையை மறைக்க வண்ண விளக்குகளும், ஏசி குளுகுளுப்பும், செயற்கைப் புகை மண்டலமும், பின்னணி மெல்லிசையும் ! ஓ! தேவனே, பரலோகத்துக்கு ஒத்த ஆராதனைகளை மீண்டும் இந்தப் பூமியில் பார்க்க இயலுமோ?

**52.** கடந்த 30 ஆண்டுகளில் எழுதப்பட்டு பாடப்பட்டு வரும் பாடல்களை சீர்தூக்கிப்பார்க்கும் காலம் இது.. 'ஆழமாம் பிரதிஷ்டை செய்து கொண்டு தோழராம் இயேசுவில் சார்ந்து கொண்டு.. பாழான லோகத்தைத் தள்ளிவிட்டு வாழவே செல்கின்றேன் மோட்ச வீட்டில்... என்றும், 'கூடாரவாசிகளாகும் நமக்கிங்கு வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ? கைவேலையல்லாத வீடொன்றை மேலேதான் செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ?' என்ற அர்ப்பணப் பாடல்கள், தரிசனப் பாடல்கள், சிலுவைப் பாடல்கள் பாடியதும் எழுதி வந்ததுமான காலம் பறந்து மறந்து போய், 'நாங்க வேற லெவல் ப்ரோ' என்று பாடும் சீர்கெட்ட நாட்களுக்குள் வந்து கிடக்கிறோம்.

53. ‘பயப்படாதே, திகையாதே, கலங்காதே, கண்ணீர் துடைப்பார், ஆற்றுவார், தேற்றுவார் என்று பாடிப் பாடியே எத்தனைக்காலம் மக்களைத் தாலாட்டி சீராட்டி ஏமாற்றிக்கொண்டிருக்கும் நமது சபைகள்?

‘இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன் நிச்சயம் நிச்சயமே’ என்ற பாடல் வரிகள் மிகச் சாதுரியமாக நீக்கப்பட்டு, ‘சித்தமே செய்து சாட்சியாய் வாழ்வேன் நிச்சயம் நிச்சயமே’ என்று பாடுகிறான் நம்மாள். பாடலின் மூல வார்த்தைகளை மாற்றிப்பாட இவர்களுக்கு அதிகாரம் தந்தது யார்? ’ இந்தப் பாட்டே தங்களுக்கு விரோதமான சாட்சி பகரும்’ என்ற பயமோ? (உபா 31:21)

54. சினிமாப் பாடல்களை சபை மேடையில் தெய்வ பயமே இல்லாமல் துணிகரமாய்ப் பாட இவர்கள் துணிகரம் கொண்டது எப்படி? இவர்களது ‘துர்க்கிரியைக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் அல்லவோ, இவர்களுடைய இருதயம் பொல்லாப்பைச் செய்ய இவர்களுக்குள் துணிகரம் கொண்டிருக்கிறது ? (பிர 8:11)

55. யூ- ட்யூபின் கிறிஸ்தவப் பாடல்களின் வீடியோக்களின் இன்றைய தரம் என்ன ? ஒரு வீடியோ பாடல் ஷூட் பண்ணப்படச் செலவு செய்யப்படும் இலட்சங்கள் எத்தனை? இதில் வரும் போதர்கள் மனைவிகள், விசுவாசிகளின் காஸ்ட்யூம் இலட்சணங்களை சந்தி சிரிக்கிறதே ! இந்தப் பாடல்களால் இங்கு யாருக்கும் பக்திவிருத்தி உண்டாகிறது என்று சொல்ல இங்கே யாருக்காவது தைரியம் உண்டோ? ஆண்டவரும் சீஷர்களும் கெத்சமனேக்குப் போகும்போது கூட ஸ்தோத்திரப் பாட்டைப் பாடிக் கொண்டே சென்றார்களே! ஐயோ! ஐயோ! ஐயோ!

கிறிஸ்தவப் பாடல்களின் பிதாக்களான **Ira D.Sankey, Fanny Crosby, Ridley Havergal** மற்றும் அருமை அண்ணன் எமில் ஜெபசிங், சாராள் நௌரோஜி மற்றும் மேய்ப்பர் சுந்தரம் போன்றவர்களும் அவர்களது வசனச் செறிவும் ஆவியின் நிறைவுமான பாடல்களும் முழுவதும் மறக்கப்பட்டுப்போன காலமிது!

சீன இரகசிய சபைகளில் ஒவ்வொரு வாரமும் பாடப்படும் இந்தப் பாடலை இன்றைய இந்திய சபைகள் குறித்துக் கொள்ளட்டும். வரும் நாட்களில் உதவலாம் !! இரத்தசாட்சிகளாய் மடிவோம் - நல் கோதுமை மணியாய் மடிவோம் - மடிவோம் !!’

கல்லெறியப்பட்ட ஸ்தேவான்
நாடு கடத்தப்பட்ட யோவான்
கத்தியாலே குத்தப்பட்ட மத்தேயு
கால்கள் கிழியுண்ட மாற்கு

56. போதகப் பிதாக்களும், மிஷினரிகளும், இரத்தசாட்சிகளும் மறக்கப்பட்டுப்போன காலம் இது! சபை தன் அஸ்திபார உபதேசங்களுக்கும் ஆதி நாட்களுக்கும் திரும்பட்டும்! உண்டாகட்டும் ஒரு சீர்திருத்தம் !

57. ஒரு கூட்டம், மிஷினரிகளைக் காட்டி, சபைகளுக்குக் கூட்டிச்சென்று சாட்சி சொல்ல வைத்து, தரிசனக் கூட்டங்கள் நடத்தி பணம் வசூலித்து, பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, அதே மிஷினரிக்கு நூறு இருநூறு கொடுத்தனுப்பி விட்டு, பெருந்தொகையை சுருட்டி நடக்கும் நூதன பகல்கொள்ளை ஒன்று பயமின்றி நடக்கிறதே! ஐயோ, தேவனே! இவர்களை வழிக்குக் கொண்டு வர என்ன வேண்டுமானாலும் செய்வீராக!

58. ‘செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும்’ என்ற வார்த்தையெல்லாம் காற்றோடே போய், எல்லாவற்றையும் இலவசமாகவே வாங்கி வாங்கிப் பழக்கப்பட்டுப்போன மா மகாக் கஞ்சப் பிரபுக்களே, மனந்திரும்ப மாட்டீர்களோ?

59. ‘திறப்பின் வாசல் ஜெபம்’ நடத்தும் அருகிலேயே காணப்படும் ‘திறப்பின் வாசல் கேன்டீன்.’ சகல திறந்தவாசல்களும் மூடப்பட்டுப்போகும் காலம் வந்தாகிவிட்டது!

60. கிறிஸ்தவ சமூகத்துக்குள்ளேயே காணப்படும் ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் என்ற Gay, Lesbian மோவாபிய, அம்மோனிய, கானானிய அருவருப்புக்கள் இன்று பரம கானான் செல்லும் சபைக்குள்ளே !

61. கூட்டத்தை எழுப்புதல் என்றும், கூச்சலை அபிஷேகம் என்றும், கட்டுக்கதைகளைக் கர்த்தருடைய வார்த்தை என்றும் மாற்றிப் போட்டோமே! ஓ! தேவரீர், எங்களுக்குள் மாபெரும் மாற்றமொன்றைத் தர மாட்டீரோ?

62. புத்தாண்டு, புதிய மாத, புதிய வார வாக்குத்தத்தங்கள், கிளி ஜோசிய வாக்குத்தத்த அட்டைகள் - யாருடைய கண்டுபிடிப்பு? வாக்குத்தத்தமானது எல்லாக் காலத்துக்கும் எல்லா சூழ்நிலைக்கும் தரப்பட்ட ஒன்று இல்லையோ?

63. ஜெபம் நன்றாய் நடத்துவோம் ஆனால் தனி ஜெபநேரமும், தேவனோடு தனிப்பட்ட உறவும் ஐக்கியமும் ஒழுங்கும் உண்டா? வசனம் நன்றாய்ப் பிரசங்கம் பண்ணுவோம் ஆவியில் தனி வேதவசன தியானம் உண்டா? வெளிப்பாடுகள் உண்டா?

64. ஜனங்களை திருப்திப்படுத்தி குஷிப்படுத்தும் ‘ஜனதா பிரசங்கங்கள்’ ஒழிந்து போகாதோ?

65. வாரம் முழுவதும் ஊழியமே செய்யாத ஊழியர்கள், பத்து ஸ்தாபனங்களில் சப்போர்ட் வாங்கும் ஊழியர்கள், தரிசனமற்ற ஊழியர்கள், போட்டி போடும் ஊழியர்கள் - நிலைமை மாறியே ஆக வேண்டுமே, ஆண்டவரே!

66. சுவிசேஷ ஊழியமே இல்லாத சபைகள்! ஆத்தும பாரமற்ற ஊழியர்கள்! விசுவாசிகள்!

67. பிதாக்களின் தியாகங்கள் மறக்கப்பட்டு, பிதாக்களின் பூர்வ எல்லைக்குறிகள் பிடுங்கி எறியப்பட்டு, பிதாக்களின் சுதந்திர ஆசீர்வாதங்கள் சமரசம் செய்து விற்றுப்போடப்பட்டு, பிதாக்களின் நாட்களுக்கு வந்து எட்டவே எட்டாத இன்றைய கோரநிலை மாறாதோ?

68. சினாட் மேடைகளே, அரசியல்வாதிகளை அரங்கில் ஏற்றும் பெரியோரே, தேவன் உங்கள் கூடுகளில் வந்து எழுந்தருளி இருக்கிறாரோ?

69. பிசாசின் பிடியிலும், கட்டுகளிலுமிருந்து கிறிஸ்து இயேசுவினால் விடுதலை பெற்று வந்தவர்களை, ஊழியர்களுக்கு விரோதமாய், சபைக்கு விரோதமாய்ப் பேசினால் கர்த்தர் அடிப்பார் என்று சொல்லிச் சொல்லியே பயமுறுத்தி நடுங்க வைத்திருப்பவர்களே, சபையை விட்டுப் போய்விட்டால் சாபம் பின்தொடரும் என்று சபித்து சபித்தே சபையோடு சபையாய் விசுவாசிகளைக் கட்டி வைத்திருப்பவர்களே! ஐயோ!

70. மிஷினரி தரிசனம் பெற்ற வாலிபர்களை ஜெபித்து மிஷினரித் தளங்களுக்கு அனுப்பிவிடாமலும், பெண் பிள்ளைகள் திருமணமாகி வேறு சபைக்குச் சென்றுவிட்டால், வரும் தசமபாகம் வராமலே போய்விடும் என்பதால் கல்யாணமே செய்து கொடுக்காமலும் அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் பார்வோனின் வம்சாவளிகளே, இதோ நாட்கள் எண்ணப்படடுக்கொண்டிருக்கிறது !

71. இன்றைய கிறிஸ்தவ மேல்மட்டத் தலைவர்களும், ஸ்தாபனத் தலைவர்களும் தங்களைச் செக் பண்ணிக்கொள்ளும் காலமிது! எங்கும் மூளைகளே நிறைந்து இருதயங்கள் மங்கி மறைந்து காண்பதற்கரியவைகளான இயந்திரங்களாய் மாறிவிட்ட நிறுவனங்கள், மிஷினரி ஸ்தாபனங்கள் உயிரோடு உலாவி வருவது அதிசயத்திலும் அதிசயம் !

72. சபைகளில் ஊழியர்களில், ஊழியர் கூடுகைகளில், ஊழியர்களின் வீடுகளில் காணப்படும் பெருந்தீனி! கர்மேலிலே தன் முகம் முழங்காலில் படக் குனிந்தானாம் எலியா ! அதாவது அடி வயிறு தொந்தி விடாத ஆள் அவன் !

'நீ போஜனப் பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை!'

73. மறக்கப்பட்டுப்போன, மறைக்கப்பட்டுப்போன பாடு, துக்கம் அனுபவித்தல், சிலுவை சுமத்தல், சுயத்துக்கு மரித்தல் !

74. பரியாசம், கேலி, கிண்டல், கேளிக்கைகள், உல்லாச ஊர்சுற்றல்கள், பொழுது போக்குகள்.. ஐயோ! நியாயாதிபதி வாசலில் நிற்கிறார்!

75. தன் பாலைத் தானே குடித்துக் கொள்ளும் சில பசு எருமை மாடுகளைப் போல, தங்கள் சபையின் வருமானங்களை வெளியிலே இம்மி விடாமல் தங்களுக்கே செலவு பண்ணிக் கொள்ளும் சபைகள்!

76. அவசியமே இன்றி இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் PA சிஸ்டத்துக்கும், வீடியோ கேமராக்களுக்கும், மீடியாவுக்கும் பணத்தைத் தண்ணீராய் வாரியிறைத்து, சுவிசேஷ ஊழியத்துக்கும் மிஷினரி ஊழியங்களுக்கும் சல்லிக்காசு செலவழிக்காத சபைகள் !

77. தேவை உள்ள ஊழியர்களும், ஊழியங்களும் எவ்வளவோ இருக்க, பல கோடிக்கணக்கில் கட்டப்படும் கார்ப்பரேட் சபைக் கட்டிடங்கள் !

78. பெயர்க்கிறிஸ்தவ சபைகளில் காணப்படும் வேத வசனத்துக்கு ஒவ்வாத பாரம்பரியங்கள்.

79. கிறிஸ்தவ நிறுவனங்களில், ஸ்தாபனங்களில், சபைகளில், பள்ளிகளில், கல்லூரிகளில் காணப்படும் முறைகேடுகள், பணக் கையாடல்கள், பதவிச் சண்டைகள், தேர்தல் தில்லுமுல்லுகள், ஊழல்கள்.

80. பேராயங்களில் காணப்படும் சீர்கேடுகள் ! மண்ணாசை, பொன்னாசை பேராசை கொண்ட கேயாசிக்களை பாவ சாபக் குஷ்டரோகங்கள் தலைமுறையாய்த்தொடரப்போவது நிச்சயம் !

81. பணம் சம்பாதிப்பதற்கும், உலகப் பிரகாரமான பொருட்களையும், கார் பங்களா, வெளிநாட்டு வேலைகளையும் தேடித் தேடி அவற்றிற்குப் பின்னாலேயே ஓடும் விசுவாசிகள்!

82. இன்றைய கிறிஸ்தவ வாலிபர்கள், வாலிபப் பிள்ளைகள் மத்தியில் காணப்படும் சகஜமான காதல் திருமணங்கள், திருமணத்துக்கு முன்னான தகாத உறவுகள்.

83. என்றும் இல்லாத வகையில் நமது கிறிஸ்தவக் குடும்பங்களில் இன்று காணப்படும் சண்டை சச்சரவுகளும், பிரிவுகளும், விவாகரத்துகளும்..

**84.** ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையையும், காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறிந்திருக்க, கர்த்தருடைய ஜனங்களோ இன்றைய இடுக்கணும், இக்கட்டுமான காலத்தையும், கர்த்தர் தமது சபை நடுவிலே செய்யப்போகிற காரியங்களையும் அறியாதபடி கண்சொருகிப் போயிருக்கும் வேதனையும் பரிதாபமுமான நிலை!

**85.** தங்கள் வாழ்வின் நோக்கமோ, தேவ தரிசனமோ, சுவிசேஷ தரிசனமோ, மிஷினரி தரிசனமோ, ஆத்தும பாரமோ கொஞ்சமும் இல்லாத இன்றைய கிறிஸ்தவ வாலிப சமுதாயம்!

**86.** சபையின் பரிசுத்த வித்து அந்நிய ஜாதியோடு கலந்து போன வேதனை! சாபம்! ஞானஸ்நானம் பெற்ற எத்தனை பிள்ளைகள் காதல் வலையில் விழுந்தோ, பணத்துக்கும் அழகுக்கும் ஆசைப்பட்டோ, பெற்றோரின் விருப்பத்தினாலோ புறஜாதிகளோடு கலந்துவிட்ட வேதனை!

**87.** தாய் தகப்பன் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவரை ருசிக்காமல், இரட்சிப்பின் அனுபவமே இல்லாத இரண்டாம் தலைமுறை!

**88.** ஆலய பலிபீடங்கள் அக்கினியின்றி அணைந்து, பிரசங்க பீடங்கள் அனலின்றிக் கிடக்கும் கொடுமை!

**89.** தங்களைச் சுற்றி சபையிலும் சமுதாயத்திலும் தேசத்தின் பல பகுதிகளிலும் வேதனையான எவ்வளவோ காரியங்கள் நடந்து கொண்டிருக்கும்போது தங்களுக்கும் அவற்றுக்கும் எந்தவித சம்பந்தமுமே இல்லாதது போல, தங்களையும் தங்கள் மனைவி பிள்ளைகளைப் பற்றி மட்டுமே கவலை கொண்டிருக்கும் ஒரு மிகப்பெரிய விசுவாச கூட்டம் !

**90.** நரகம், நித்தியம், நியாயத்தீர்ப்பு என்ற வார்த்தைகள் கேட்பதற்கு அரிதிலும் அரிதாகி அப்படிப்பட்ட சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டு பல காலங்களாகி, அப்படி எண்ணங்களே சபையார் மனதில் தோன்றாத கொடுமையான காலம் !

**91.** போர்வீரர்களைப் பயிற்சியளிக்கும் போர்ப் பாசறையாக செயல்பட வேண்டிய சபைகள், ஆவிக்குரிய பாலகர் பராமரிப்புப் பள்ளிகளாகவும், வாரம் ஒருமுறை செயல்படும் சுகமளிக்கும் மருத்துவமனைகளாகவும், விடுதலை பெற்று வந்தவர்கள் மீண்டும் கட்டுக்குள் விழும் காவல் கூடங்களாகவும் மாறிப்போனதென்ன?

92. உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் விளங்க வேண்டிய சபை, தனது சாரத்தை இழந்து மனிதரால் மிதிக்கப்படுவதற்கு ஏதுவாக, இன்று தனது ஒளியை இழந்து இருளுக்குள் தட்டுத்தடுமாறி நடப்பதென்ன?

93. எப்படிப்பட்ட நோ்மறைத் தாக்கத்தை இன்றைய சபை சமுதாயத்தில் ஏற்படுத்தியிருக்கிறது? கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவர்களைப் பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றியும் கிறிஸ்தவரல்லாதோரின் பார்வை இன்று எப்படியிருக்கிறது ?

94. ஆண்டவர் அழும் காரியங்களைக் கண்டு தானும் அழுது, அவர் வேதனையடையும் காரியங்களைக் கண்டு தானும் வேதனைப்பட்டு, கர்த்தர் வைராக்கியம் கொள்ளும் காரியங்களைக் கண்டு தானும் வைராக்கியம் கொண்டு, கர்த்தர் கோபம் கொள்ளும் காரியங்களைக் கண்டு தானும் ஆவியில் பரிசுத்த கோபம் கொள்ளாமல், இதைப் பற்றிய எதுவும் தன்னிடம் காணப்படவில்லையே என்ற வேதனையின்றி, தன்னுடையதும் தன் பிள்ளைகளுடையதுமான பாவ அசுத்தங்களைக் குறித்த எந்த வெட்கமும் இல்லாத இந்த சந்ததி மாறாதோ?

95. மன்றாட்டு ஜெபம் ஒரு மறக்கப்பட்டுப்போன கலையாயிற்று!

96. இக்கட்டான இந்தக் காலத்திலும் நவீன இறையியல் வாத விவாதங்கள், பிரிவினைக் கோட்பாடுகள், உயர்வு தாழ்வுகள் !

97. வீடியோக்களைப் பார்க்கவும், ஆடியோக்களைக் கேட்கவும் மட்டுமே விரும்பி, வேத புத்தகமோ, வேறு ஆவிக்குரிய புத்தகங்களோ வாசிக்கவே விரும்பாத, வாசிக்கவே வாசிக்காத ஒரு சந்ததி!

98. கர்த்தருடைய வார்த்தை கிடைக்காத, கட்டுக்கதைகள் மட்டுமே கிடைக்கும் ஒரு பஞ்சக்காலம் இது !

99. சுயலாபங்களுக்காக ஆவியின் வரங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்பட்டு, ஆவியின் கனிகள் காணப்படாத, கேட்கப்படாத, அறியப்படாத ஒரு காலம்!

100. தேவனே, நீர் எங்களுக்காக இன்னொரு சவனரோலாவையும், ஜான் ஹஸ்ஸையும், ஜான் விக்ளிஃபையும், ஜான் கெல்வினையும், மார்ட்டின் லூத்தரையும், அல்ரிச் ஸ்விங்லியையும், யோவான் ஸ்நானகனையும் எழுப்ப மாட்டீரோ?

இவைகள் சமுத்திரத்திலுள்ள பனிமலையின் சிறுமுகடே! ஆயினும் இவைகளில் அதிரடியான ஒரு மாறுதலும் சீர்திருத்தமும் ஏற்படாத வரையில் எழுப்புதல் வெறும் கானல் நீரே!

# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER 04

# வரப்போகும் சிறையிருப்பு எப்படியிருக்கும்?

# வரப்போகும் சிறையிருப்பு எப்படியிருக்கும்? 04



பைபிள் காலேஜ் ஒன்றின் பட்டமளிப்பு விழாவில், 'உன்னதப்பாடலின் புத்தகத்தை உளமாறப்பாட உங்கள் மாணவர்களுக்கு உற்சாகமாய்ச் சொல்லிக்கொடுத்த நீங்கள், 'புலம்பலின் புத்தகத்தைப்' புலம்பலோடு படிக்கச் சொல்லிக் கொடுத்தீர்களோ ?' என்று கேட்டார் எழுப்புதலாளர் லியோனார்ட் ரேவன்ஹில்.

புலம்பலின் புத்தகம் புரியாத புத்தகமா அல்லது புரியவைக்கப்படாத புத்தகமா அல்லது புரியவும் படிக்கவும் விரும்பப்படாத புத்தகமா என்பது தனிப்பட்டவர்களைப் பொறுத்ததே என்பதே கணிப்பு.

ஆனால் அப்புத்தகம் சொல்வது ஒன்றே! 70 வருட பாபிலோனிய சிறையிருப்பில் இஸ்ரவேலர் அனுபவித்த கொடுமையையே புலம்பலாய்ப் புலம்பி எழுதி வைத்தார் எரேமியா!

நூற்றாண்டுகள் கடந்து இன்று 21ம் நூற்றாண்டு. ஆகாயின் பிந்திய ஆலயத்தின் மகிமையைக் காணுமுன் முரட்டாட்ட இஸ்ரவேலருக்கு சிறையிருப்பு ஒன்று அனுமதிக்கப்பட்டது போல, இறுதி எழுப்புதலாம் பிந்தின ஆலயத்தின் மகிமையைக் காணுமுன் இன்றைய இந்தியக் கிறிஸ்தவம் கடந்து போகப்போவது இன்னொரு சிறையிருப்பு!

**அன்று பாபிலோனிய சிறையிருப்பைப் புலம்பலில் புலம்பினார் எரேமியா. வரப்போகும் நாட்களின் இன்றைய தமது ஜனம் அனுபவிக்கப்போகும் சிறையிருப்பின் கொடுமைகளை முன் கண்டு இன்று இதே புலம்பலின் புத்தகத்தின் ஐந்து அதிகாரங்களும் இயேசு கிறிஸ்துவின் புலம்பலாய்...**

**புலம்பலின் ஐந்து அதிகாரங்களும்
இன்றைய கண்ணோட்டத்தில்...**

இந்த அத்தியாயத்தை வாசிப்பவர்கள், கூடவே, வேதத்திலுள்ள புலம்பல் முதல் அதிகாரத்தை திறந்து வைத்துக் கொள்ளும்படியாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

# புலம்பல் முதல் அதிகாரம்

**1:1 - ஐயோ ! ஜனம் பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே!**

“ஐயோ! கிறிஸ்தவ ஜனம் பெருத்த என் நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! கணவனும் பிள்ளைகளும் குடும்ப சகிதமாய் ஆனந்தமாய்க் களித்தவள், இதோ ! இன்று சகலத்தையும் பறிகொடுத்தவளாய், கைவிடப்பட்ட விதவைக்கு ஒப்பாகிப் போனாளே!”

**1:1- ஜாதிகளில் பெரியவளும் சீமைகளில் நாயகியுமாய் இருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே!**

“கிறிஸ்தவ ஜனங்களில் பெரியவளும், சபைகளில் பெரியவளும், தன் ஜனங்களுக்குள் பெரியவள் என்று பேர் பெற்றவளும், இரத்தாம்பரமும் பட்டாடைகளும் உடுத்தி, சீமைகளில் (வெளிநாடுகளில்) நாயகியுமாய் இருந்தவளும், பெரிய பெரிய சபைகளையும், வானளாவிய கோபுரங்களையும், தோட்டங்களையும் கட்டி வாழ்ந்தவனும், வாழ்ந்தவளும் சீமானாய், சீமாட்டியாய் சீமைக்குப் பறந்து பறந்து ஊழியம் செய்து கொண்டிருந்தவனும், செய்து கொண்டிருந்தவளும் இன்று புறஜாதிக்குக் கப்பங்கட்டுவனும் கப்பங்கட்டுகிறவளும் ஆகி, அந்நிய ஜாதிக்கு அடிமையாகிப் போனார்களே !”

**1:2 - இராக்காலத்திலே அழுது கொண்டிருக்கிறாள்.. அவளுடைய கண்ணீர் அவள் கன்னங்களில் வடிகிறது. அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை.. அவளுடைய சிநேகிதர் எல்லாரும் அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள்...**

“ஐயோ! என் சபையாகிய குமாரத்தி இராக்காலத்தில் அழுது கொண்டிருக்கிறாளே! தன் தேசத்துக்காகவும் சபைக்காகவும் அழ வேண்டிய இராக்காலங்களில் அவள் அழுதிருந்தால், ஓ! ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இந்த இராக்காலத்தில் இப்படி இவள் அழ வேண்டிய நிர்ப்பாக்கிய நிலை இருந்திராதே!”

"சீயோன் குமாரத்தியின் மதிலே ! இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு..ஓய்ந்திராதே ! எழுந்திரு! இராத்திரியிலே முதற் சாமத்திலே கூப்பிடு..ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு.. எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு!' என்று என் சபையே ! உன்னைப் பார்த்துக் காலமெல்லாம் கை விரித்து நின்றேனே! ஓ! என் குமாரத்தியே ! அந்த உன் இரவுகளில் நீ நதியவ்வளவு கண்ணீர் விட்டிருந்தாயானால் இன்று உனக்கு இந்நிலை இல்லையே!"

"ஐயோ! இதோ உன்னுடைய கன்னங்களில் கண்ணீர் வடிகிறது.. உன்னுடைய நேசர் எல்லாருக்குள்ளும் உன்னைத் தேற்றுவார் ஒருவருமில்லையே! இதோ! என் சபையே ! நீ யார் யாரையெல்லாம் சிநேகிதர் என்று நினைத்திருந்தாயோ, அவர்களே உன்னைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளும் சத்துருக்களுமானார்களே!"

**1:3 -** யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமை வேலை செய்யவும் சிறைப்பட்டுப்போனார்கள். அவள் புறஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள். இளைப்பாறுதல் அடையாள்.. அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்து பிடித்தார்கள்..

" ஐயோ! என் ஜனமாகிய விசுவாச ஜனம் சத்துருக்களின் கையிலே கொடுமையாய் உபத்திரவப்படவும் இதோ! அவர்களுக்காகவே கட்டப்பட்ட **concentration Camp, detention camp** களில் அடிமை வேலை செய்யவும் சிறைப்பட்டுப் போகிறதே!"

"இதோ! அவள் தன் புறஜாதிகளுக்குள் தங்குகிறாள்! அவளுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லையே! அவளது சரீரம் கொடுமையாய் வேலை வாங்கப்படுகிறதே! அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடத்திலே தொடர்ந்து பிடித்தார்களே! அவள் தப்பிப் போகவும் இடமில்லாமல் போனதே !"

"ஐயோ! என் சபையே உன்னை நான் எதற்கு ஒப்பாக்குவேன் ? ஓ ! உனக்காக நான் பரிதபிக்கிறேன் ! "

"அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்து பிடித்தார்கள்.."

1:4 - பண்டிகைக்கு வருவார் இல்லாததினால், சீயோனுக்குப் போகிற வழிகள் புலம்புகிறது.. அவள் வாசல்கள் எல்லாம் பாழாய்க் கிடக்கிறது.. அவள் ஆசாரியர்கள் தவிக்கிறார்கள்.. அவள் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள்.. அவளுக்குக் கசப்பே உண்டாயிருக்கிறது...

"உன் பண்டிகைகளின் கொண்டாட்டங்கள் நின்று போனதே! ஐயோ! என் ஜனமே! உன் பண்டிகைகளின் கொண்டாட்டங்கள் நின்று போனதினால், பண்டிகைக்கு வருவார் இல்லாமல், உன் ஆலயங்களுக்குப் போகிற வழிகள் புலம்புகிறதே! உன் ஆலய வாசல்கள் எல்லாம் பாழாய்க் கிடக்கிறதே ! "

"ஓ ! உன் ஆசாரியர்களாகிய ஊழியர்களும் போதகர்களும் தவிக்கிறார்களே! உன் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்களே! என் சபையாகிய ஜனத்துக்கு கசப்பின் மேல் கசப்பே உண்டாயிருக்கிறதே!"

1:5 - அவள் சத்துருக்கள் தலைமையானார்கள்.. அவள் பகைஞர் சுகித்திருக்கிறார்கள்.. அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளை சஞ்சலப்படுத்தினார்.. அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப்போனார்கள்..

"ஓ ! என் ஜனமே ! உன் சத்துருக்கள் உனக்குத் தலைமையானார்களே! உன் பகைஞர் சுகித்திருக்கவில்லையோ? என் ஜனமாகிய சபையே ! உன் பாதகங்களினிமித்தமே நான் உன்னை சஞ்சலப்படுத்தினேன் அல்லவோ?"

'உன் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப் போனார்களே! ஐயோ என் ஜனமே ! நான் உனக்கு எதினால் ஒப்புமை செய்வேன்?"

1:6 - சீயோன் குமாரத்தியின் அழகெல்லாம் அவளை விட்டுப்போயிற்று..அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி தொடருகிறவனுக்கு முன்பாகச் சத்துவமில்லாமல் நடந்து போனார்கள் !

"சீயோன் குமாரத்தியாகிய என் சபையே ! உன் முக அழகும், புற அழகும், அக அழகும், சபை அழகும், ஆராதனை அழகும், கட்டிட அழகும், கோபுர அழகும் முற்றிலும் உன்னை விட்டுப் போயிற்றே !"

"உன் பிரபுக்களும், ஊழியரும், மூப்பரும், முதன்மையானவர்களும் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, பசி மயக்கத்தோடும், கிரக்கத்தோடும் உன்னைத் தொடருகிற உன் கொடுமையான சத்துருவுக்கு முன்பாக சரீர பெலனோ, ஆவிக்குரிய பெலனோ, சத்துவமோ இன்றி தள்ளாடித் தள்ளாடி நடந்து போவதைக் காண்கிறேனே!"

1:7- தனக்குச் சிறுமையும் தவிப்பும் உண்டாகிய நாட்களிலே எருசலேம் பூர்வ நாட்கள் முதற்கொண்டு தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைக்கிறாள்.. அவளுக்கு உதவி செய்வார் இல்லாமல் அவளுடைய ஜனங்கள் சத்துருவின் கையிலே விழுகையில், பகைஞர் அவளைப் பார்த்து அவளுடைய ஓய்வு நாட்களைக் குறித்துப் பரியாசம் பண்ணினார்கள்..

“ஓ ! என் ஜனமே உனக்கு சிறுமையும் தவிப்பும் உண்டாகியிருக்கும் இந்த நாளிலே நீ உன் பூர்வ நாட்கள் முதற்கொண்டு உனக்கு உண்டாயிருந்த இன்பமான யாவற்றையும் நினைத்து நினைத்து அழுது புலம்புவதைக் காண்கிறேன்! ”

“நீ என் ஓய்வு நாட்களை எண்ணாமல் போய், என் பரிசுத்த ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்து, உன் கால் போன போக்கிலே நடந்து திரிந்து, உன் வழிகளிலே சென்று, உன் சொந்தப் பேச்சையே பேசி, ஓய்வு நாளை உன் மனமகிழ்ச்சியின் நாளாய் அல்லாது, வீக்-என்டாக நீ ஆடிப்பாடி உண்டு களித்து, உனக்காகவும் உன் நண்பர்களுக்காகவுமே கழித்து, கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்று சொல்லி அதை நீ மகிமையாக எண்ணாமல் போனபடியினால் அல்லவோ இன்று உன் சத்துரு என் ஓய்வு நாளைக் குறித்து உன்னைப் பரியாசம் பண்ணுகிறான்? ”

1:8 - எருசலேம் மிகுதியாய்ப் பாவம் செய்தாள்.. ஆதலால் தூர ஸ்திரீயைப் போலானாள்.. அவளைக் கனம் பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டை பண்ணுகிறார்கள்.. அவளுடைய மானத்தைக் கண்டார்கள்.. அவளும் பெருமூச்சு விட்டுப் பின்னிட்டுத் திரும்பினாள்..

‘‘பரம எருசலேமாகிய சபையே ! நீ மிகுதியாய் பாவம் செய்யவில்லையோ ? ஆதலால் தூரஸ்திரீயைப் போல தூரம் போனாயே! உன் சத்துருக்களால் தீட்டென்று நீ புறந்தள்ளப்பட்டாயே ! அசூசி என்று அசிங்கப்பட்டுப் போனாயே! ”

“உன்னை ஒரு காலத்தில் கனம் பண்ணினவர்கள் எல்லோரும் உன்னை அசட்டை பண்ணி, உன்னை அனாதையாய் விட்டு விட்டுத் தூரம் போனார்களே ! உன்னுடைய சத்துருக்கள் உன் மானத்தைக் காணும் நிலை உனக்கு வந்ததே ! என் ஜனமே அழுது பெருமூச்சு விட்டுப் பின்னிட்டுத் திரும்பும் உன்னைக் கண்டு நான் வெகுவாய்ப் புலம்புகிறேன்! ”

“ அவளை அசட்டை பண்ணுகிறார்கள் ”

**1:9 - அவளுடைய அசுசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது.. தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள்.. ஆகையால் அதிசமாய்த் தாழ்த்தப்பட்டுப் போனாள்... தேற்றுவார் இல்லை.. கர்த்தாவே என் சிறுமையைப் பாரும்! பகைஞன் பெருமை பாராட்டினானே!**

"சபையே ! இதோ உன்னுடைய அசுசம் உன் வஸ்திரங்களின் ஓரத்தில் காணப்படவில்லையோ ? நீயோ உனக்கு வரப்போகும் முடிவை நினையாதிருந்தாயே ! உனக்குக் கிடைத்திருந்த நல்ல நாட்களிலே உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறியாமல் போனாயே ! "

"நீ முற்றிலும் எதிர்பாராவண்ணம் நீ அதிசயமாய்த் தாழ்த்தப்பட்டுப் போனாயே ! இன்றோ உன்னைத் தேற்றுவார் யாரும் இல்லையே ! உன் பகைஞன் உன் மேல் பெருமையும் கர்வமும் பாராட்டி நிற்கும் உன் சிறுமையைப் பார்த்து உன் கதறலையும் கேட்கிறேன் ! "

**1:10 - அவளுடைய இன்பமான எல்லாவற்றின் மேலும் சத்துரு தன் கையை நீட்டினான்.. உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டான்...**

"உனக்கு இன்பமான யாவற்றின் மேலும், உன் குடும்பம், உன் பிள்ளைகள், உன் சபை, உன் விசுவாசிகள் மற்றும் உனக்கு எது எதெல்லாம் இன்பமாயிருந்ததோ, அவைகள் எல்லாவற்றின் மேலும் இன்று உன் சத்துரு தன் இரும்புக்கையை நீட்டியுள்ளானே ! "

"என் சபையிலே வரலாகாது என்று நான் விலக்கிய புறஜாதியாகிய ஒரு பெரும்படை எனது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து சர்வநாசம் செய்கிறதைக் கண்டு சொல்ல வார்த்தையின்றி விக்கித்து நிற்கிறேனே!"

**1:11 - அவளுடைய ஜனங்கள் எல்லாரும் அப்பந்தேடித் தவிக்கிறார்கள்.. தங்கள் உயிரைக் காப்பாற்ற தங்களுடைய இன்பமானவைகளை ஆகாரத்துக்கென்று கொடுத்துவிட்டார்கள்.. கர்த்தாவே, நோக்கிப் பாரும்.. எண்ணமற்றவளானேனே !**

"ஓ ! என் ஜனமெல்லாம் அப்பம் தேடித் தவிக்கிறதே ! தங்கள் உயிரைக் காப்பாற்ற தங்களுடைய இன்பமான யாவற்றையும், தன் ஒரு நேர ஆகாரத்துக்கென்று கொடுத்துவிடும் நிர்க்கதியும் நிர்ப்பந்தமும் நிர்ப்பாக்கியமுமான நிலையில் கர்த்தராகிய நான் உன்னைக் காண்கிறேனே ! ஓ என் ஜனமே ! நீ எண்ணமற்றுப் போனாயே !"

1:12 - வழியில் நடந்து போகிற சகல ஜனங்களே ! இதைக் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னை சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள் !

"இப்படி ஒரு நாளும் காலமும் வரப்போகிறதென்றும், வழி நடக்கிற என் ஜனமே! இதைக் குறித்து உனக்குக் கவலையில்லையா?' என்றும் உன்னை நோக்கி நான் என் மார்பில் அடித்துப் புலம்பி நின்ற நாட்களை இன்று நினைத்துப் பார் ! இதோ ! உன்னை நான் சஞ்சலப்படுத்தின இந்த நாளிலே உனக்கு உண்டான இந்த துக்கத்துக்கு சரியான துக்கமும் நெருக்கமும் சஞ்சலமும் தவிப்பும் இது வரை எப்போதாகிலும் உனக்கு உண்டாயிருந்ததோ ? நினைத்துப் பார் ! "

1 : 13,14,15 - உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினார், அது அவைகளில் பற்றி எரிகிறது .. என் கால்களுக்கு வலையை வீசினார்.. என்னைப் பின்னிட்டு விழப் பண்ணினார்.. என்னைப் பாழாக்கினார்.. நான் பலட்சயப்பட்டுப் போகிறேன்..

என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக் கிறது.. அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக் கொண்டது என் பெலனை விழப் பண்ணினார்.. நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்..

என்னுடைய பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்கள் எல்லாரையும் ஆண்டவர் மிதித்துப்போட்டார்.. என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தார்.. திராட்சத்தோட்டத்தை ஆலையில் மிதிக்கிறது போல ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தார்..

"உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினாரே, அது அவைகளில் பற்றியெரிகிறதே, ஐயோ என் கால்களுக்கு வலையை வீசினாரே, என்னைப் பின்னிட்டு விழப் பண்ணினாரே, நித்தமும் நான் பலட்சயப்பட்டுப் போகிறேனே என்றும்,'

'..என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறதே, அவைகள் இறுக்கப்பட்டு என் கழுத்தை சுற்றிக் கொண்டதே! என் பெலனை விழப் பண்ணினாரே! நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக் கொடுத்தாரே' என்றும்..

..என்னிலுள்ள என்னுடைய பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்கள் எல்லாரையும் ஆண்டவர் மிதித்துப் போட்டாரே..!"

“..என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தாரே !திராட்சப் பழத்தை ஆலையில் மிதிக்கிறது போல ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தாரே..!’ என்று நீ கண்ணீர் விட்டுப் புலம்பி அழுவதைக் கேட்கிறேன்..”

1:16 - இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்.. என் கண், என் கண்ணே, நீராய்ச் சொரிகிறது.. என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்.. பகைஞன் மேற்கொண்டதினால் என் பிள்ளைகள் பாழாய்ப்போனார்கள்..

‘ஓ! என் ஜனமே ! கொடுமையான உன் நிலை கண்டு ஆண்டவராகிய நான் அழுகிறேன்! என் கண், என் கண்ணே நீராய் சொரிகிறது. உன் உயிரைக் காப்பாற்றித் தேற்றும் என்னை விட்டு நீ தூரம் போனதால், இன்று நானும் உனக்குத் தூரமானேன்! உன் பகைஞன் மேற்கொண்டதினால் நீ பாழாய்ப் போனாயே!”

1:17 - சீயோன் தன் கைகளை விரிக்கிறாள்.. அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை.. கர்த்தர் யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவளுக்கு சத்துருக்களாகக் கட்டளையிட்டார்.. அவர்களுக்குள்ளே எருசலேம் தூரஸ்திரீக்கு ஒப்பானாள்!

‘ஓ ! சீயோனாகிய என் சபை தன் கைகளை விரிக்கிறாள்.. அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை.. அவளுடைய சத்துருக்களாகிய சுற்றுப்புறத்தாருக்குள்ளே என் குமாரத்தி தூர ஸ்திரீக்கு ஒப்பாகிப் போனாளே!”

1:18 - கர்த்தர் நீதிபரர்.. அவருடைய வாக்குக்கு விரோதமாய் நான் எழும்பினேன்..ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேட்டு என் துக்கத்தைப்பாருங்கள்.. என் கன்னிகைகளும் என் வாலிபரும் சிறைப்பட்டுப்போனார்கள்..

‘ஐயோ! நீதிபரராகிய கர்த்தராகிய என் வாக்குக்கு விரோதமாய் நீ எழும்பினாயே! உன் ஜனங்கள் எல்லாரும் இன்று உன் துக்கத்தைக் காண்கிறார்கள்... இதினிமித்தமே உன் கன்னிகைகளும் உன் வாலிபரும் சிறைப்பட்டுப் போனார்கள் அல்லவோ?”

1:19 - என்னை சிநேகிக்கிறவர்களைக் கூப்பிட்டேன்.. அவர்களோ என்னை மோசம் போக்கினார்கள்.. என் ஆசாரியர்களும் என் மூப்பர்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றத் தங்களுக்கு அப்பம் தேடுகையில் நகரத்தில் மூச்சொடுங்கி மாண்டார்கள்..

‘உன்னை சிநேகித்தவர்களை நீ கூப்பிட்டாய்..அவர்களோ உன்னை மோசம் போக்கினார்களே! உன் ஆசாரியர்களும் உன் மூப்பர், ஊழியர்களும் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தங்களுக்கு அப்பம் தேடுகையில் அவர்களும் நகரத்தில் மூச்சொடுங்கி மாண்டு போனார்களே!”

**1:20 - கர்த்தாவே பாரும்! நான் நெருக்கப்படுகிறேன்! என் குடல் கொதிக்கிறது... நான் கடுந்துரோகம் பண்ணினபடியால் என் இருதயம் வியாகுலப்படுகிறது.. வெளியிலே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று..வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது...**

“கர்த்தாவே பாரும் ! நான் நெருக்கப்படுகிறேன்.. என் குடல் கொதிக்கிறது.. நான் கடுந்துரோகம் பண்ணினபடியால் என் இருதயம் வியாகுலப்படுகிறது.. வெளியே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று.. வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது..’ என்று நீ ஓலமிட்டு ஒப்பாரி வைக்கிறதைக் கேட்டு நான் எனக்குள்ளே கலங்குகிறேன்! ”

**1:21 - நான் தவிக்கிறதை அவர்கள் கேட்டாலும் என்னைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை.. என் பகைஞர் எல்லாரும் எனக்கு வந்த ஆபத்தைக்கேட்டு, தேவரீர் அதைச் செய்தபடியால் சந்தோஷமாயிருக்கிறார்கள்.. நீர் கூறின நாளை வரப்பண்ணுவீர்.. அப்பொழுது அவர்களும் என்னைப் போலாவார்கள்..**

“நீ தவிக்கிறதை உன் சத்துருக்கள் கேட்டாலும் உன்னைத் தேற்றுவார் ஒருவருமில்லையே! உன் பகைஞர் எல்லாரும் உனக்கு வந்த ஆபத்தைக் கேட்டு கைகொட்டி மகிழ்கிறார்களே !”

“இதற்கு முந்திய நாட்களிலும் வருஷங்களிலும் நீர் எங்களைத் திரும்பத் திரும்ப எச்சரித்துக் கூறின அந்த நாளை வரப்பண்ணினீர்’ என்று நீ மார்பில் அடித்து அங்கலாய்த்து அழுவதை நான் கேட்கிறேன்..”

**1:22- அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் முகத்துக்கு முன்பாக வரக்கடவது.. என் சகல பாதகங்களினிமித்தமும் நீர் எனக்குச் செய்தது போல அவர்களுக்குச் செய்யும்.. என் பெருமூச்சுகள் மிகுதியாயின.. என் இருதயம் பலட்சியமாய் இருக்கிறது...**

“அவர்கள் பொல்லாப்பெல்லாம் உமது முகத்துக்கு முன்பாக வரக்கடவது.. என்றும், என் சகல பாதகங்களினிமித்தம் நீர் எனக்குச் செய்தது போல அவர்களுக்கும் செய்யும் என்றும் நீ கதறி அழுவதையும், உன் பெருமூச்சுகள் மிகுதியாவதையும், உன் இருதயம் பலட்சயமாவதையும் நான் பார்க்கிறேன்..!”

> “வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது”

# புலம்பல் 2ம் அதிகாரம்

கர்த்தர் தமது சபையைப் புறஜாதிகள் கைகளில் ஒப்புக்கொடுக்கும் நாளிலே, அந்த நாளுக்கும் உபத்திரவத்துக்கும் சற்றும் ஆயத்தமில்லா தமது ஜனம், அவர்களது கையில் படும்பாட்டைப் பார்த்து அழும் கர்த்தரின் புலம்பல் ஒரு புறமிருக்க குரங்கு கை பூவாய்ப் போன ஜனம், தன் நிலையைக் கண்டு, தானும் வைக்கும் ஓலம் இது!

**2 : 1**

'ஐயோ! ஆண்டவர் தமது கோபத்தினால் தமது சபையாகிய சீயோன் குமாரத்தியை மந்தாரத்தினால் மூடினாரோ? அவர் இந்த, தமது கோபத்தின் நாளிலே தமது பாதபீடமாகிய தமது ஆலயத்தை நினையாமல் தமது ஜனமாகிய எங்கள் மகிமையை வானத்திலிருந்து தரையிலே விழத்தள்ளினாரோ?"

**2 : 2**

"ஓ! ஆண்டவர் நம்மைத் தப்பவிடாமல் யாக்கோபின் வாசஸ்தலங்களாகிய நமது வாசஸ்தலங்களை விழுங்கினாரோ? அவரே தமது குமாரர் குமாரத்திகளாகிய நமது அரண்களையெல்லாம் நமது மேலிருந்த தமது சினத்தினாலே இடித்துத் தரையோடே தரையாக்கிப் போட்டாரோ? தமது ராஜ்யமாகிய விசுவாச சமூகத்தையும் அதின் போதகர்களையும் மூப்பர்களையும் பிரபுக்களையும் பரிசுத்தக்குலைச்சலாக்கினாரோ?"

**2 : 3**

" ஆ! நம்மால் அவருக்கு ஏற்பட்ட தமது உக்கிர கோபத்திலே தமது ஜனமாகிய நமது கொம்பு முழுவதையும் வெட்டிப்போட்டாரே! நமது சத்துருவுக்கு முன்பாக அவர் தமது கரத்தைப் பின்னாகத் திருப்பி சுற்றிலும் இருப்பதைப் பட்சிக்கிற அக்கினி ஜுவாலையைப் போல நமக்கு விரோதமாய் எரித்தாரே! "

**2 : 4**

" நமது ஆண்டவர் பகைஞனைப் போல தம்முடைய வில்லை நாணேற்றினாரோ? சத்துருவைப் போலத் தம்முடைய வலது கரத்தை நீட்டி நின்று, நமது கண்களுக்கு இன்பமானதையெல்லாம் அழித்துப்போட்டாரோ? ஓ! இன்று நமது கூடாரங்களிலே தம்முடைய உக்கிரத்தை அக்கினியாக சொரியப்பண்ணினாரோ? "

**2 : 5**

“ ஆண்டவர் மெய்யாகவே பகைஞனைப் போல் ஆனாரோ? ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய நம்மை அவரே விழுங்கும் அளவுக்கு ஆனாரோ? தமது அரண்மனையான சபைகளையெல்லாம் தாமே விழுங்கிப்போட்டாரோ? அவரே நமது அரண்களை அழித்து நமக்கு மிகுந்த துக்கிப்பையும் சலிப்பையும் உண்டாக்கினாரோ? ”

**2 : 6**

‘அடைக்கப்பட்ட தோட்டமாகிய நமது பாதுகாப்பின் வேலியாய் இருந்த தமது வேலியை அவரே பலவந்தமாய்ப் பிடுங்காதது போலப் பிடுங்கிப் போட்டாரோ? சபை கூடுகிற தமது ஸ்தலங்களை அவரே அழித்து மிதித்துப்போட்டாரோ? அவரே நமது பண்டிகைகளையும், ஓய்வு நாட்களையும் மறக்கப்பண்ணி, தமது உக்கிர கோபத்திலே நமது போதகர்களையும் பாஸ்டர்களையும், பிஷப்புகளையும் புறக்கணித்து விட்டாரோ? ”

**2 : 7**

“ஆண்டவர் தாமே தமது பலிபீடத்தை ஒழித்து விட்டாரோ? அவரே தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்துவிட்டாரோ? ஓ! அவரே நமது மதில்களை சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தாரே! பண்டிகை நாளில் நாம் ஆரவாரம் பண்ணுகிறது போல கர்த்தருடைய ஆலயத்தில் நமது சத்துருக்கள் ஆரவாரம் பண்ணுகிறார்களே!”

**2 : 8**

‘ கர்த்தர் தமது ஜனமாகிய நமது அலங்கத்தை நிர்மூலமாக்க நினைத்து நம் மேல் நூல் போட்டாரோ? அவர் நம்மை அழிக்காதபடி தம்முடைய கையை முடக்கிக்கொள்ளவில்லையே? நமக்கு அரணாய், அலங்கமாய், அலங்காரமாய், பாதுகாப்பாய் இருந்த யாவும் பெலனற்றுப் போயிற்றே? நம்மோடு சேர்ந்து அவைகளும் புலம்புகிறதே! ”

**2 : 9**

“ ஐயோ! நமது வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு தரையோடு தரையாய் சாம்பலாய்க் கிடக்கிறதே! அவர் நமது தாழ்ப்பாள்களை முதலாய் முறித்து உடைத்துப் போட்டாரே? நமது பாஸ்டர்களும், ஊழியர்களும் பிஷப்புகளும் புறஜாதிகளுக்குள் சிறைப்பட்டுப்போனார்களே! நமக்கு வேதமுமில்லை, நமது தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறதில்லையே! ஐயோ! ”

**2 : 10**

“ நமது மூப்பர்கள் தரையில் உட்கார வைக்கப்பட்டு மௌனமாய் வாய்கட்டப்பட்டிருக்கிறார்களே ! ஓ, எங்கும் ஓலம்! அவர்கள் தங்கள் அரையில் இரட்டு உடுத்திக்கொண்டு, தங்கள் தலைகளின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு புலம்பித் திரிகிறார்களே! நமது கன்னிகைகள் இதோ, வெட்கத்தால் கூனிக்குறுகி தலைகுனிந்து நிற்கிறார்களே! ”

“ அந்த நாட்களில் தமது ஜனத்தின் புலம்பலைக் கேட்கும் ஆண்டவர் தாமே ஜனத்தைக் கண்டு புலம்புகிறதை தேவ ஜனமே சற்று நோக்கமாட்டாயோ? ”

**2 : 11**

‘ ஓ! என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலினாலே கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறதே! என் குடலெல்லாம் கொதிக்கிறதே! என் ஈரல் இளகித் தரையில் வடிகிறதே? இதோ குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக் கிடக்கிறதை நான், நானே காண்கிறேனே! ”

**2 : 12**

“என் ஜனத்தின் குழந்தைகளும் பாலகரும் குத்துண்டவர்களாய் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக் கிடக்கும் போதும், தங்கள் தாய்களின் மடியிலே தங்கள் உயிரை விடும்போதும், தங்கள் தாய்களை நோக்கி, ‘பசிக்கிறதே! தவிக்கிறதே!’ என்று அழும் குரல்கள் கேட்கப்படுகிறதே!”

**2 : 13**

‘என் குமாரரே, என் குமாரத்திகளே! உங்களை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியின் கன்னிகையே, நான் உன்னை எதினால் தேற்றுவேன்? ஓ, உன் காயம் கடலைப் போலப் பெரிதாயிருக்கிறதே! உன்னைக் குணமாக்குகிறவன் யார்? ”

**2 : 14**

‘இப்போதும் சில காலத்துக்கு முன்பு கூட உன் தீர்க்கதரிசிகள் அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை உன் விருப்பத்திற்கேற்ப, உன்னைப் பிரியப்படுத்தும்படிக்கே தரிசித்தார்களே! நீ சிறைப்பட்டுப் போகப்போவதை அறிந்தும் கூட, உன் அக்கிரமத்தை உனக்கு எடுத்துக்காட்டி, உன்னை மனந்திரும்பப்பண்ணும்படி உன்னை உன் பாவ வழியிலிருந்து விலக்காமல் அபத்தமானவைகளையும் கேடானவைகளையும் உனக்காகத் தரிசித்தார்களே ”

**2 : 15**

“இதோ, கிறிஸ்தவ சபையே! உன்னைக் கடந்து போகும் யாவரும் உன் பேரில் கை கொட்டுகிறார்கள் பார்! உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் கண்டு உன் மேல் ஈசல் போட்டு, தங்கள் தலைகளைத் துலுக்கி, ‘பூரண வடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான சபையும் நகரமும் கிறிஸ்தவனும் நீ தானா?’ என்கிறார்களே!”

**2 : 16**

‘ஓ ! உன் பகைஞர் யாவரும் உன் பேரில் தங்கள் வாயைத் திறந்து ஈசல் போட்டு பற்கடிக்கிறார்கள் பார்! ‘உன் பகைஞர், நாம் அதை விழுங்கினோம், நாம் காத்திருந்த நாள் இதுவே! இப்பொழுது நமக்கு இது கிடைத்தது, அதைக் கண்டுவிட்டோம்..’ என்கிறார்களே! ”

**2 : 17**

“ ஆம், நான் நினைத்ததைச் செய்தேன்! பூர்வ நாட்கள் முதற்கொண்டு நான் கட்டளையிட்ட எனது வார்த்தையை நிறைவேற்றினேன். நான் உன்னைத் தப்பவிடாமல் உன் மேல் உன் பகைஞன் சந்தோஷிக்கும்படி செய்தேன், உன் சத்துருக்களின் கொம்பை நானே உயர்த்தினேன்..”

**2 : 18**

“ ஓ! சீயோன் குமாரத்தியின் மதிலே, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர்விடு, ஓய்ந்திராதே! உன் கண்ணின் கருவிழி ஓய்ந்திர விடாதே! உன் கண்களின் கறுப்பு விழி சும்மாயிரவொட்டாதே! ”

**2 : 19**

“ இப்படி நாள் ஒன்று வரும்! எழுந்திரு இராத்திரியிலே முதற் சாமத்திலே கூப்பிடு, உன் ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு. எல்லாத் தெருக்களின் முனையிலும் மூர்ச்சித்துப் போகப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு!’ என்று எத்தனை தரமோ உன்னைக் கெஞ்சாமல் கெஞ்சினேனே!”

**2 : 20**

‘ஓ, கர்த்தராகிய நான் உனக்கு இந்தப் பிரகாரமாக செய்ய வேண்டுமோ? ஸ்திரீகளாகிய நீங்கள் உங்கள் கைக்குழந்தைகளாகிய உங்கள் கர்ப்பக்கனிகளைத் தின்னும் நிலை உனக்கு வந்ததென்ன? என் பரிசுத்த ஸ்தலத்திலே என் ஆசாரியனும் போதகனும் ஊழியனும் தீர்க்கதரிசியும் இப்படி நிர்ப்பாக்கியமாய்க் கொல்லப்பட வேண்டுமோ? ”

**2 : 21** “ஓ ! இளைஞனும் முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் தரையில் வீசப்பட்டுக் கிடக்கிறார்களே! என் கன்னிகைகளும் வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்களே! என் கோபத்தின் நாளிலே என் உக்கிரத்தை நான் இப்படி உங்கள் மேல் ஊற்ற வேண்டியதென்ன? ”

**2 : 22** “பண்டிகை நாளிலே கும்புகளை வரவழைப்பது போல, சுற்றிலுமிருந்து உனக்குத் திகில்களை வரவழைக்க நீ என்னை நிர்ப்பந்தித்தது என்ன? என் கோபத்தின் நாளிலே தப்பினவனும், மீதியானவனும் ஒருவனையும் காணவில்லையே? ஓ! ஒரு காலத்தில் நான் என் கைகளில் ஏந்தி வளர்த்தவர்களை பகைஞன் நாசம் பண்ணினானே !”

## புலம்பல் 3ம் அதிகாரம்

தமது ஜனத்தைப் புறஜாதிகள் கையில் ஒப்புக்கொடுத்து, தன் ஜனம் கடந்து போன சிறுமையின் பாதையைக் கண்டு, தனது ஜனத்தின் மேலுள்ள வேதனையில் ஆண்டவர் தாமே புலம்பும் புலம்பலின் அதிகாரம் இது.

**3 : 1** ‘ஆண்டவராகிய எனது சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்டவன் நீ..’

**3 : 2** ‘நான் உன்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து வந்தேன்..’

**3 : 3** ‘நான் எனது கையை உனக்கு விரோதமாகவே நித்தமும் திருப்பினேன்..’

**3 : 4** ‘நான் உன் சதையையும் உன் தோலையும் முற்றலாக்கி உன் எலும்புகளை நொறுக்கினேன்..’

**3:5** ‘நான் உனக்கு விரோதமாய்க் கொத்தளம் கட்டி, கசப்பினாலும் வருத்தத்தினாலும் உன்னை வளைந்து கொண்டேன்..’

**3:6** ‘பூர்வகாலத்தில் செத்துக் கிடக்கிறவர்களைப் போல இருளான இடங்களில் உன்னைக் கிடக்கப் பண்ணினேன்..’

**3:7** ‘நீ புறப்படக்கூடாதபடி உன்னைச் சூழ வேலியடைத்தேன். உன் விலங்கைப் பாரமாக்கினேன்..’

**3:8** ‘நீ சத்தமிட்டுக் கூப்பிட்டாலும் உன் ஜெபத்துக்கு வழியை அடைத்துப் போட்டேன்..’

**3:9** ‘வெட்டின கற்களின் சுவரால் உன் வழிகளை அடைத்துப்போட்டு உன் வழிகளைத் தாறுமாறாக்கினேன்..’

**3:10** ‘நான் உனக்குப் பதிவிருக்கிற கரடியும், மறைவிடங்களில் தங்குகிற சிங்கமுமானேன்!’

**3:11** ‘உன் வழிகளை அப்புறப்படுத்தி, உன்னைத் துண்டித்து பாழாக்கிப் போட்டேன்..’

**3:12** ‘எனது வில்லை நாணேற்றி உன்னை என் அம்புக்கு இலக்காக வைத்தேன்..’

**3:13** ‘என்னுடைய அம்பறாத்தூணியின் அம்புகளை உன் உள்ளிந்திரியங்களில் படப் பண்ணினேன்..’

**3:14** ‘நீ உன் ஜனத்தார் யாவருக்கும் பரியாசமும், நித்தமும் அவர்களது கின்னரப் பாடலுமானாய்..’

**3:15** ‘கசப்பினால் உன்னை நிரப்பி, எட்டியினால் உன்னை வெறிக்கச் செய்தேன்..’

**3:16** ‘பருக்கைக் கற்களால் உன் பற்களை நான் நொறுக்கி, உன்னை சாம்பலில் புரளப் பண்ணினேன்..’

**3:17** ‘நான் உன் ஆத்துமாவை சமாதானத்துக்குத் தூரமாக்கினதால் நீ உன் சுகத்தை மறந்தாய்..’

**3:18** ‘உன் பெலனும், நீ எனக்குக் காத்திருந்த நம்பிக்கையும் அழிந்து போயிற்று என்று சொல்வேன்..’

**3:19** ‘ஆயினும் எட்டியும் பிச்சுமாகிய உன் சிறுமையையும் உன் தவிப்பையும் நான் நினைத்தருளுவேன்..’

**3:20** ‘என் ஆத்துமா உன்னை நினைத்து நினைத்து எனக்குள் முறிந்து போகிறது..’

**3:21** ‘இதை உன் மனதிலே வைத்து நீ நம்பிக்கை கொள்..’

**3:22** ‘நீ நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தராகிய எனது கிருபையே! என்னுடைய இரக்கங்களுக்கு முடிவில்லை..’

**3:23** ‘அவைகள் காலைதோறும் புதிதாய் இருக்கிறது. எனது உண்மை பெரிதாயிருக்கிறது..’

**3:24** ‘கர்த்தர் என் பங்கு’ என்று உன் ஆத்துமா சொல்லட்டும். ஆகையால் என்னிடத்தில் நம்பிக்கை கொண்டிரு!’

**3:25** ‘எனக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் என்னைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தராகிய நான் நல்லவராகவே இருக்கிறேன்..’

**3:26** ‘கர்த்தராகிய எனது இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருப்பது உனக்கு நல்லது..’

**3:27** ‘உனது இப்படிப்பட்ட காலத்தில் என் நுகத்தை சுமக்கிறது உனக்கு நல்லது..’

**3:28** ‘நானே அதை உன் மேல் வைத்தேன் என்று நீ தனித்திருந்து மௌனமாய் இருக்கக்கடவாய்..’

**3:29** ‘நம்பிக்கைக்கு இடமுண்டோ என்று உன் வாயைத் தூளில் நுழுந்தக்கடவாய்!’

**3:30** ‘உன்னை அடிக்கிறவனுக்கு உன் கன்னத்தைக் காட்டி நிந்தையால் நிறைந்திருப்பாயாக!’

**3:31** ‘ஆனாலும் ஆண்டவராகிய நான் என்றென்றைக்கும் கைவிடமாட்டேன்..’

**3:32** ‘நான் சஞ்சலப்படுத்தினாலும் மிகுந்த கிருபையுடன் இரங்குவேன்..’

**3:33** ‘நான் மனப்பூர்வமாய் மனுபுத்திரரை சிறுமைப்படுத்தி சஞ்சலப்படுத்துகிறதில்லை..’

**3:34-36** ‘ஒருவன் பூமியில் சிறைப்பட்டவர்கள் யாவரையும் தன் கால்களின் கீழ் நசுக்குகிறதையும், உன்னதமானவரின் சமூகத்தில் மனுஷருடைய நியாயத்தைப் புரட்டுகிறதையும், மனுஷனை அவனுடைய வழக்கிலே மாறுபாடாக்குகிறதையும் ஆண்டவராகிய நான் காணாதிருப்பேனோ?’

**3:37** ‘ஆண்டவராகிய நான் கட்டளையிடாதிருக்க காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?’

**3:38** ‘உன்னதமானவராகிய என் வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ?’

**3:39** ‘உயிருள்ள மனுஷனாகிய நீ முறையிடுவானேன் ? நீ உன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன ?’

**3:40** ‘நீங்கள் உங்கள் வழிகளை சோதித்து ஆராய்ந்து கர்த்தராகிய என்னிடம் திரும்பக்கடவீர்கள் !’

**3:41** ‘நீங்கள் உங்கள் கைகளோடு கூட உங்களுடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுங்கள்!’

**3:42** ‘நீங்கள் துரோகம் செய்து கலகம் பண்ணினீர்கள். ஆகையால் தேவனாகிய நான் மன்னியாதிருந்தேன்..’

**3:43** ‘தேவனாகிய நான் கோபத்தால் மூடிக்கொண்டு உங்களைத் தப்பவிடாமல் பின்தொடர்ந்து கொன்றேன்..’

**3:44** ‘ஜெபம் உட்பிரவேசிக்கக் கூடாதபடிக்கு என்னையே மேகத்தால் மூடிக்கொண்டேன்..’

**3:45** ‘ஜனங்களுக்குள்ளே உங்களைக் குப்பையும் அருவருப்புமாக்கினேன்..’

**3:46** ‘உங்கள் பகைஞர் எல்லாரும் உங்களுக்கு விரோதமாய்த் தங்கள் வாயைத் திறந்தனர்..’

**3:47** ‘திகிலும் படுகுழியும் பாழ்க்கடிப்பும் சங்காரமும் உங்களுக்கு நேரிட்டது..’

**3 : 48** ‘ஓ! என் ஜனமாகிய குமாரத்தியாகிய நீ அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது..’

**3 :49,50** ‘கர்த்தராகிய நான் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்குமட்டும் உன் கண் இடைவிடாமல் ஓய்வின்றி சொரிகிறதைக் காண்கிறேன்..’

**3 : 51** ‘என் நகரத்தின் குமாரத்திகள் அனைவரினிமித்தமும் என் கண் என் ஆத்துமாவுக்கு நோவுண்டாக்குகிறது..’

**3 : 52** ‘முகாந்தரம் இல்லாமல் உன்னைப் பகைக்கிறவர்கள் உன்னை ஒரு பட்சியைப் போல வேட்டையாடினார்களே!’

**3 : 53** ‘காவல் கிடங்கிலே உன் பிராணனை ஒடுக்கி, உன் மீதில் கல்லை வைத்தார்களே!’

**3 : 54** ‘தண்ணீர் உன் தலையின் மேல் புரண்டது, ‘நாசமானேன்’ என்றாய்...’

**3 : 55** ‘மகா ஆழமான கிடங்கிலிருந்து கர்த்தராகிய என்னுடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிட்டாய்..’

**3 : 56** ‘உன் சத்தத்தைக் கேட்டேன். உன் பெருமூச்சுக்கும் உன் கூப்பிடுதலுக்கும் எனது செவியை நான் அடைத்துக்கொள்வதில்லை..’

**3 : 57** ‘நீ என்னைக் கூப்பிட்ட நாளிலே நான் உன்னை அணுகி,’ பயப்படாதே’ என்றேன்..’

**3 : 58** ‘ஆண்டவராகிய நான் உன் வழக்கை நடத்தி, உன் பிராணனை மீட்டுக்கொள்வேன்..’

**3:59** 'கர்த்தராகிய நான் உனக்கு உண்டான அநியாயத்தைக் கண்டு உன் நியாயத்தைத் தீர்ப்பேன்..'

**3:60** 'அவர்களுடைய எல்லா குரோதத்தையும் அவர்கள் உனக்கு விரோதமாக நினைத்த எல்லா நினைவுகளையும் கண்டேன்..'

**3:61,62** 'கர்த்தராகிய நான் அவர்கள் நிந்திக்கும் நிந்தையையும், அவர்கள் உனக்கு விரோதமாய் நினைத்த எல்லா நினைவுகளையும், உனக்கு விரோதமாய் எழும்பின அவர்களின் வாய்மொழிகளையும், அவர்கள் நாள் முழுவதும் உனக்கு விரோதமாய் யோசிக்கும் யோசனைகளையும் கேட்டேன்..'

**3:63** 'அவர்கள் உட்காருவதையும் எழுந்திருப்பதையும், நீ அவர்களுடைய பாடலாய்ப் போனதையும் நோக்கிப் பார்க்கிறேன்..'

**3:64** 'கர்த்தராகிய நான், அவர்கள் கைகள் செய்த கிரியைகளுக்குத் தக்கதாக அவர்களுக்குப் பலனளிப்பேன்..'

**3:65** 'அவர்களுக்கு இருதய வேதனையைக் கொடுப்பேன். என்னுடைய சாபம் அவர்கள் மேலிருக்கும்..'

**3:66** 'கோபமாய் அவர்களைப் பின்தொடர்ந்து, வானங்களின் கீழ் இராதபடிக்கு அவர்களை அழித்துவிடுவேன்..'

"என் ஆண்டவன்(ர்) அழுகிறது என்ன ?"

2 இராஜாக்கள் 8:12

# புலம்பல் 4ம் அதிகாரம்

ஆண்டவரின் புலம்பல் தொடருகிறது..

**4:1**

‘ஐயோ! பொன்னாய் ஜொலித்த என் ஜனம் மங்கி, பசும்பொன்னாய்ப் பளிச்சிட்டிருந்த நிறம் மாறி, என் பரிசுத்த ஸ்தலத்தின் விலையேறப்பெற்ற கற்களாய்ப் பதிந்திருந்த என் பிள்ளைகள் சகல வீதிகளின் முனைகளிலும் கேட்பாரின்றிக் கொட்டுண்டு கிடக்கிறார்களே!’

**4:2**

‘ஐயோ, தங்கத்துக்கு ஒப்பான விலையேறப்பெற்ற என் சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் மண்ணோடு மண்ணாய்ப் போனார்களே!’

**4:3**

‘திமிங்கிலங்கள் முதலாய்க் கொங்கைகளை நீட்டி தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்குமே! என் ஜனமாகிய குமாரத்தியோ வனாந்தரத்திலுள்ள தீக்குருவியைப் போல குரூரமாய்ப் போனாளே!’

**4:4**

‘ஐயோ! என் குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல் வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறதே! பிள்ளைகள் அப்பம் கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லையே!’

**4:5**

‘ஒரு காலத்தில் ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் இதோ வீதிகளில் பாழாய்க் கிடக்கிறார்களே! இரத்தாம்பரமும் பட்டுப் பட்டாடைகளும் உடுத்தித் தங்களைத் தங்கத்தால் மூடிக்கொண்டவர்கள், இதோ! குப்பை மேடுகளை அணைத்துக் கொண்டிருக்கிறார்களே!’

**4:6**

‘கைச்செய்கை இல்லாமல் ஒரு நிமிஷத்திலே கவிழ்க்கப்பட்டுப்போன சோதோமின் பாவத்துக்கு வந்த தண்டனையைப் பார்க்கிலும் என் சபையாகிய குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வந்த பெரிதான தண்டனையை என்னவென்று சொல்வேன்?’

**4:7,8**

‘உறைந்த மழையைப் பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப் பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப் பார்க்கிலும் அழகும் மேனியுமாயிருந்த என்னுடைய நசரேயர் இப்பொழுது கரியிலும் கறுத்த முகத்தோடு, தோல் எலும்போடு எலும்பாய் ஒட்டிக்கொண்டு காய்ந்த மரத்தைப் போன்று அறியப்படாதவர்களாய் வீதியில் திரிகிறார்களே!’

**4:9** ‘பசியினால் கொலையுண்டவர்களைப் பார்க்கிலும் பட்டயத்தால் கொலையுண்டவர்கள் பாக்கியவான்களோ? அவர்களது வயலின் வரத்தில்லாமையால் குத்துண்டு கரைந்து போனதே என் ஜனம்?’

**4:10** ‘இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளையே சமைக்கும் கோரமோ? என் ஜனமாகிய அழிவில் அவரவரது பிள்ளைகளே அவர்களுக்கு ஆகாரம் ஆயிற்றோ?’

**4:11** ‘கர்த்தராகிய நான் என் கோபத்தை நிறைவேற்றி, என் உக்கிர கோபத்தை ஊற்றி என் சபையாகிய சீயோனிலே அக்கினியைக் கொளுத்தினேன். அது அதினுடைய அஸ்திபாரங்களையும் பட்சித்துப்போட்டதே!’

**4:12** ‘சத்துருவும் பகைஞனும் என் சபையின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான் என்று நான் ஏற்கனவே என் ஊழியரைக் கொண்டு திரும்பத் திரும்ப எச்சரித்து வந்ததை சபையின் மூப்பர்களும் போதகர்களும் இந்திய சபையின் ஜனமும் நம்பாமல் போயிற்றே!’

**4:13** ‘என் சபையின் நடுவிலே நீதிமான்கள் அநேகரின் இரத்தத்தைச் சிந்தின அதின் கள்ளத்தீர்க்கதரிசிகளின் பாவங்களினாலும், அதின் போதகர்களாகிய ஆசாரியர்களின் அக்கிரமங்களினாலும் இப்படி ஆயிற்றே!’

**4:14** ‘இப்பொழுதோ குருடரைப் போல வீதிகளில் அலைந்து, ஒருவரும் தங்கள் வஸ்திரங்களைத் தொடக்கூடாதபடி இரத்தத்தினால் கறைபட்டுக் கிடக்கிறார்களே!’

**4:15** ‘விலகுங்கள், தொடாமல் விலகுங்கள், தீட்டுப்பட்டவர்களே விலகுங்கள்’ என்று என் ஜனத்தை விட்டு விலகி, அவர்களைக் கண்டு, ’இதோ, இந்த ஜனத்தைப் பாருங்கள்! இது பறந்தோடி அலைந்து போனது, இனி இது இங்கே தங்கித் தரிக்கமாட்டாது’ என்று புறஜாதிகளுக்குள் உங்களைக் குறித்துச் சொல்லப்படுகிறதே!’

**4:16** ‘கர்த்தராகிய எனது கோபம் அவர்களை சிதறடித்தது. அவர்களது சத்துருக்களாகிய புறஜாதியார், ஆசாரியரென்று ஆசாரியருடைய முகம் பாராமலும், முதியோரென்று முதியோரை மதியாமலும் போனார்களே!’

**4:17** ‘என் ஜனம், தங்களுக்கு சகாயம் வருமென்று இன்னும் வீணாய் எதிர்பார்த்து எதிர்பார்த்து அவர்கள் கண்கள் பூத்துப் போயின. இரட்சிக்கமாட்டாத ஜாதிக்கு எதிர்பார்த்திருக்கிறது என் ஜனம்!’

**4:18** ‘தங்கள் வீதிகளில் நடக்காதபடிக்கு அவர்கள் அடிச்சுவடுகளை புறஜாதிகள் வேட்டையாடினார்கள். இதோ அவர்கள் முடிவு சமீபித்தது. அவர்கள் நாட்கள் நிறைவேறிப்போயின. அவர்கள் முடிவு வந்துவிட்டது..’

**4:19** ‘என் ஜனத்தைப் பின்தொடர்ந்தவர்கள் ஆகாயத்துக் கழுகுகளைப் பார்க்கிலும் வேகமாயிருந்து, பர்வதங்கள் மேல் எல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து, வனாந்தரமெங்கும் அவர்களுக்குப் பதிவிருந்தார்கள்.. ’

**4:20** ‘என்னால் அபிஷேகிக்கப்பட்டவனும், என் நாசியின் சுவாசமாயிருந்தவனும், அவனுடைய நிழலிலே ஜாதிகளுக்குள் பிழைத்திருப்போம் என்று என் ஜனத்திற்குள்ளே யாரைக் குறித்துச் சொல்லப்பட்டிருந்ததோ, அவனும் கூட அவர்களை வேட்டையாடினவர்களின் படுகுழியில் அகப்பட்டானே!’

**4:21** ‘இப்போது என் ஜனத்தின் துக்கத்தால் சந்தோஷித்துக் களிகூரும் ஊத்ஸ் தேசவாசியாகிய ஏதோம் குமாரத்தி போன்றவளே, இதோ தத்தளிப்பின் பாத்திரம் உன்னிடத்துக்குத் தாண்டி வரும், அப்பொழுது நீ வெறித்து மானபங்கமாய்க் கிடப்பாய்!’

**4:22** ‘சீயோன் குமாரத்தியே! உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை தீர்ந்துபோகும்! அவர் இனி உன்னை அப்புறம் சிறைப்பட்டுப் போக விடமாட்டார். புறஜாதியாகிய ஏதோம் குமாரத்தியே, உன் அக்கிரமத்தை அவர் விசாரிப்பார்! உன் பாவங்களை அவர் வெளிப்படுத்துவார்!’

“ **இது இயேசுவின் புலம்பல் !** ”

# புலம்பல் 5ம் அதிகாரம்

தமது ஜனத்தின் நிலை கண்டு கர்த்தராகிய ஆண்டவரின் புலம்பல் தொடருகிறது...

5:1 'கர்த்தராகிய நான் உங்களுக்கு நேரிட்டதை நினைக்கிறேன்.. உங்கள் நிந்தையை நோக்கிப் பார்க்கிறேன்..'

5:2 'உங்கள் சுதந்தரம் அந்நியர் வசமாகவும், உங்கள் வீடுகள் புறதேசத்தார் வசமாகவும் தாண்டிப்போயிற்றே!'

5:3 'திக்கற்றவர்களாய்த் தகப்பனில்லாமல் போனீர்களே! உங்கள் தாய்கள் விதவைகளைப் போலிருக்கிறார்களே!'

5:4 'உங்கள் தண்ணீரைப் பணத்துக்கு வாங்கிக் குடிக்கும் நிலையோ? உங்கள் விறகு விலைக்கிரயமாய் வருகிறதோ?'

5:5 'பாரஞ்சுமந்து கழுத்து நோகிப்போய் உழைத்து இளைத்து இளைப்பாறுதலின்றி நிற்கும் உங்களைப் பார்க்கிறேன்..'

5:6 'அப்பத்தால் திருப்தியாகும்படி இந்தியரும் இந்துத்துவாவாதிகளுமான இந்தப் புறஜாதிகளுக்கு உங்களையே கையளித்தீர்களோ? '

5:7 ' உங்கள் பிதாக்கள் அக்கிரமம் செய்து மாண்டு போனார்கள். அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறீர்களே! '

5:8 'பாவ அடிமைகள் அல்லவோ உங்களை ஆளுகிறார்கள்? உங்களை அவர்கள் கைகளிலிருந்து விடுவிப்பாரில்லையோ?'

5:9 'வனாந்தரத்திலிருக்கிற பட்டயத்தினால் பிராண மோசத்துக்கு ஏதுவானவர்களாய் உங்கள் அப்பத்தைத் தேடிக்கொண்டிருக்கிறீர்களோ?'

5:10 'என் ஜனமே ! பஞ்சத்தின் கொடுமையினால் உங்கள் தோல் முதற்கொண்டு அடுப்பங்கரையைப் போலக் கறுத்துப் போயிற்றே!'

**5:11** ‘சீயோனாகிய உங்கள் சபைகளிலிருந்த ஸ்திரீகளையும் யூதா பட்டணங்களிலிருந்த கன்னிகைகளையும் அவர்கள் அவமானப்படுத்தினார்களே !’

**5:12** ‘என் சபையின் மூப்பர்களின், போதகர்களின், பிரபுக்களின் கைகளை அவர்கள் கட்டி ஏறத் தூக்குகிறார்களே! முதியவர்கள், மூத்த போதகர்களின் முகங்கள் மதிக்கப்படவில்லையே?’

**5:13** ‘என் சபையின் வாலிபரை இதோ ஏந்திரம் அரைக்கக் கொண்டு போகிறார்களே! என் இளைஞர் விறகு சுமந்து இடறி விழுகிறார்களே!’

**5:14** ‘முதியோர் ஆலய வாசல்களில் உட்காருவதும், வாலிபர்கள் கிட்டார்களையும் கீ - போர்டுகளையும் வாசிக்கிறதும் நின்று போயிற்றோ?’

**5:15** ‘உங்கள் இருதயத்தின் களிகூறுதல் ஒழிந்துபோயிற்றோ ? உங்கள் சந்தோஷம் துக்கமாய் மாறிப்போயிற்றோ?’

**5:16,17** ‘உங்கள் தலையிலிருந்த கிரீடம் விழுந்துபோயிற்றோ? ஐயோ, என் ஜனமே! நீ பாவம் செய்தாய் அல்லவோ? அதினால் உன் இருதயம் பலட்சயமாகி உன் கண்கள் இருண்டு போயிற்றே!’

**5:18** ‘பாழாய்க் கிடக்கிற என் சீயோனின் சபைகளிலெல்லாம் நரிகளாகிய மனிதர் ஓடித்திரிகிறார்களே!’

**5:19** ‘கர்த்தராகிய நான் என்றென்றைக்கும் இருக்கிறவரல்லவோ? என்னுடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாய் நிற்குமல்லவோ?’

**5:20** ‘என் ஜனமே! தேவனாகிய நான் என்றைக்கும் உன்னை மறந்து நெடுங்காலமாய் உன்னைக் கைவிடுவேனோ?’

**5:21** ‘கர்த்தராகிய என்னிடம் திரும்பு ! அப்பொழுது நான் உன்னிடம் திரும்புவேன். பூர்வகாலத்தில் இருந்தது போல உங்கள் நாட்களைப் புதியவைகளாக்குவேன்!’

**5:22** ‘உங்களை முற்றிலும் வெறுத்துவிடுவேனோ? உங்கள் பேரில் என்றென்றைக்கும் கடுங்கோபமாய் இருப்பேனோ?’

# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER 05

ஆதிசபையின் வழிமுறைகளுக்குத்
திரும்பட்டும் இன்றைய சபை!
ஆதிசபையின் எழுப்புதல் இங்கே காத்திருக்கிறது!

# ஆதிசபையின் வழிமுறைகளுக்குத் திரும்பட்டும் இன்றைய சபை! ஆதிசபையின் எழுப்புதல் இங்கே காத்திருக்கிறது!

05

ஆதிசபையின் எழுப்புதலை நாம் வாஞ்சிக்கிறோம், கேட்கிறோம். அதே ஆவலிலேயே 'அப்போஸ்தல கிறிஸ்தவ சபை,' 'அப்போஸ்தல எழுப்புதல் சபை' 'அப்போஸ்தல ஆசீர்வாத சபை' என்ற பெயர்களையும் நமது சபைகளுக்கு வைத்து மகிழ்கிறோம். ஆனால் நமது சபைகள் இன்று அதே ஆதிசபைகளின் வழிமுறைகளுக்குத் (Strategy) திரும்பட்டும். எழுப்புதல் தானாகவே வரும்!

## ஆதிசபை கடைப்பிடித்த வழிமுறைகள் :

1. ஊழியத்திலும் உலக அலுவல்களிலும் ஓட்டம் ஓட்டமென்று தலைதெறிக்க ஊழியர்களும் விசுவாசிகளும் ஓடிக்கொண்டேயிராமல், ஆதிசபையின் 'காத்திருத்தலின்' இரகசியத்துக்கும் கீழ்ப்படிதலுக்கும் திரும்பட்டும்! இன்னொரு பெந்தெகொஸ்தே நாள் ஒன்று இங்கே நமக்காகக் காத்திருக்கிறது ! (அப் 1:5)

2. இன்றைய விசுவாசிகளும் ஊழியர்களும் சீடர்களாய் மாறி ஒருமன ஒற்றுமையோடு ஜெபத்திலும் வேண்டுதலிலும் ஊக்கமாய்த் தரித்திருக்கட்டும்! அப்பொழுது அருள்மாரியாய் ஊற்றப்படுவார் ஆவியானவர் ! (அப் 1 : 14)

3. அப் 2 : 17-21 ல் காணப்படும் யோவேலின் வாக்குத்தத்தங்களைத் திரும்பக் கேட்குமுன், அதே யோவேல் இரண்டில் உள்ள எழுப்புதலுக்கான பத்து கட்டளைகளை (யோவேல் 2: 15-17) சபை இன்று கடைப்பிடிக்கட்டும். அப்போது அப்போஸ்தலர் இரண்டு தானாகவே நிறைவேறும்!

4. சபை இன்று அதே ஆதி அப்போஸ்தலரின் உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் அவர்களைப் போலவே அச்சுபிசகாமல் உறுதியாய்த் தரித்திருக்கட்டும்! அப்பொழுது ஆயிரமாயிரமான ஆத்துமாக்களை அனுதினமும் சபையில் கொண்டு சேர்க்கக் கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார்!

5. அப்போஸ்தலருக்கு சகலமும் பொதுவாய் இருந்த காலம் போய், அவரவருக்குத் தேவையானதையாவது இன்றைய சபை பகிர்ந்து கொடுக்கட்டும் - கபடமில்லாத இருதயத்தோடு! - அதே ஆதிசபை எழுப்புதல் இங்கேயும் வெடிக்க வெகுகாலமில்லை !

6. வீடுகள்தோறும் சபை நடக்கும் காலமோ, முழுவதுமாகவே ஆன்லைனில் நடக்கும் காலமோ இங்கு வெகு தொலைவில் இல்லை. ஒவ்வொரு விசுவாசியின் வீடும் ஜெபவீடாய் மாறட்டும் ! (அப் 1:46)

7. 'ஜெப வேளையாகிய' ஒன்பதாம் மணி நேரத்திலே..' 'ஜெபம்பண்ணும்படி ஆறாம் மணி நேரத்திலே' (அப் 3:1 அப் 10: 9) - ஆதி அப்போஸ்தலர்களைப் போலவே குறிப்பிட்ட நமது 'ஜெப வேளைகள்' குறிக்கப்பட்டு ஜெப ஒழுங்குகளும், குடும்ப ஜெப நேர ஒழுங்குகளும் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்கப்பட்டும்! ஆலய வாசல்களில் அற்புதங்கள் தானாய் நடக்கும்!

8. அப்போஸ்தலர் இரண்டில் ஊற்றப்பட்ட அபிஷேக வாங்கிகளாய், அபிஷேக வங்கிகளாய் சபைகள் மாறட்டும்! அலங்கார வாசல் சப்பாணிகள் அழகாய்க் குதித்து தேவனைத் துதிப்பார்கள்!

9. வெள்ளியையும் பொன்னையும் மறந்து தேவையான ஆவிக்குரியவைகளையும் அபிஷேகத்தையுமே சபை தன்னகத்தே கொண்டிருக்கட்டும்! சபையின் நிழல்பட்டு வியாதியஸ்தர்கள் தானாகவே சுகமாவார்கள். விடுதலைப் பெருவிழாக்களுக்கும், சுகமளிக்கும் திருவிழாக்களுக்கும் இங்கே அவசியமே இராது!

10. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கும்போது சபையானது அவர் ஒருவருக்கு மாத்திரமே மகிமையையும் கனத்தையும் செலுத்தட்டும்! தேவன் நமது சபைகள் நடுவிலே மகிமையாய் எழுந்தருளியிருப்பார்!

11. 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவராலேயன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை' என்று தைரியமாய் நின்று இன்றைய சபை சொல்லட்டும்! ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் வாய்பொத்தி வசனம் கேட்பார்கள்! (4:12)

12. 'தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாக இருக்குமோ?' என்று கமிட்டி மீட்டிங்குகளிலும் உயர்மட்ட குழுவின் கூடுகைகளிலும் சபையின் முக்கியஸ்தர்கள் கேட்கட்டும்! (அப் 4:19)

13. 'நாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே' என்று தைரியமாய் சபை இன்று சொல்லட்டும்!

14. நாம் மேடைகள் 'அதிரத்தக்கதாக' ஜெபம் பண்ணுகிறோம். ஆனால் அவர்கள் ஜெபம்பண்ணினபோதும் சிறையில் பாடித் துதித்தபோதும் பூமியதிர்ச்சியே வந்தது. நமது ஆவியில் ஜெபிக்கும்

15. ஆதி சபையின் எழுப்புதலை வாஞ்சிக்கும் நமது மத்தியில் அனனியா சப்பீராக்களுக்கு நேர்ந்த நிலை பொதுவெளியில் நேராமலிருப்பது உச்சகட்ட தேவ தயவே !

16. 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது' என்ற வார்த்தைகள் சொல்லிலும் செயலிலும் உண்டாகட்டும்!

17. 'அவரது நாமத்துக்காக அவமானமடைவதற்குப்' பாத்திரராக தேவனால் நாம் எண்ணப்படுவோமானால் அது மிகப்பெரிய ஆசீர்வாதமே!

18. ஊழியர்கள் தங்களுக்கு அடாத அந்நிய அலுவல்களில் சிக்கிக்கொள்ளாமல், ஜெபம் பண்ணுவதும், தேவவசனத்தைப் போதிக்கிறதுமான இந்த இரண்டே வேலைகளை மட்டுமே செய்வார்களாக! அப்பொழுது விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்த ஸ்தேவான்களும் பிலிப்புகளும் சபையில் பெருகிக் கொண்டே போவார்கள்!

19. நவீன வலைத்தளங்களின் சிக்குகளிலிருந்து நமது வாலிபர்கள் தங்களை விடுவித்துக்கொண்டு ஸ்தேவானைப் போன்று தேவ வசனத்தால் நிரம்பியிருக்கட்டும். ஒருவனும் எதிர்பேசவும் எதிர்கிற்கவும் கூடாத ஞானத்தை அவர்கள் பெற்றுக்கொள்வதோடு அவர்கள் முகங்கள் தேவதூதன் முகங்கள் போலப் பிரகாசிப்பது உறுதி. அவர்கள் விதையாய் விழுந்து மரித்தாலும் அந்த விதையிலிருந்து பவுல் என்னும் எழுப்புதல்கள் எழும்புவதைத் யாரும் தடுக்க இயலாது !

20. நாளொன்று சீக்கிரமாய் வருகிறது! வீடுகள் தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய் காவலில் போடுவார்கள். சபை பாழாக்கப்படும். ஆதிசபையின் எழுப்புதலை வாஞ்சிக்கும் இன்றைய சபை, அன்று ஆதிசபை கடந்து சென்ற இப்படிப்பட்ட நாட்களுக்கும் ஆயத்தமாயிருக்கட்டும். அப்பொழுது உபத்திரவத்தோடேகூட எழுப்புதலும் சேர்ந்தே வரும்! (8:3)

21. ஆதிசபை சிதறடிக்கப்பட்டபோது, சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தது போல வரப்போகும் நாட்களில் இன்றைய சபை சிதறடிக்கப்படும் போது, அப்படிப்பட்ட வாய்க்காத சமயத்திலும் வசனத்தைப் பகிர்ந்துகொள்ள நாம் ஆயத்தமாயிருப்போம். நமது சமாரியாக்களிலும் எழுப்புதல் வெடிக்கும் !

22. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆவியானவரின் அமர்ந்த சத்தத்தைக் கேட்க நமது செவிகள் கூர்மையாய் இருக்கட்டும்! சமாரியாவின் எழுப்புதலை எத்தியோப்பியா வரை கொண்டு செல்லலாம்!

23. பவுலை நடத்தின ஆதிசபையின் அனனியாக்கள் போன்றவர்கள் தேவ தரிசனத்தை எந்த நேரத்திலும் பெறவும், தேவசத்தத்தை எந்த நேரத்திலும் கேட்டு வழிநடத்தப்படும் அளவில் ஆயத்த நிலையிலும் இருந்தனர். நமது ஊர்களுக்கு உள்ளே ஏதோ ஒரு தெருவின் ஏதோ ஒரு மூலையில், யாரோ ஒரு பவுலிடம் தேவன் நம்மை நடத்த ஆயத்தநிலையில் இருப்போம் ! (9: 10 - 16)

24. இன்று சவுல்கள் அவசியமென்றால், அவர்களைக் கண்டுபிடித்து வழிநடத்தும் பர்னபாக்கள் அத்தியாவசியம்!

25. 'ஐனேயாவே எழுந்திரு,!' 'ஐத்திகுவே எழுந்திரு,!' 'தபீத்தாளே எழுந்திரு!' என்று கைதூக்கி எழுப்புபவர்களை, கர்த்தாவே எங்கள் நடுவிலே எழுப்புவீராக!' (அப் 9:34, 40 / 20:10)

26. தேவன் சுத்தமாக்கினவர்களைத் 'தீட்டு, அசுத்தம்' என்று வேறுபார்த்து சபை விலக்கிவைக்காதிருப்பதாக! (10 : 14, 15)

27. சபை, எருசலேமிலேயே சபைக் கட்டிடம் கட்டி இருந்து விடாதபடி வெளியிலே புறஜாதிகளிடத்தில் புறப்பட்டுச் செல்வதாக! கொர்நேலியுக்கள் போன்ற அரசு அதிகாரிகள் தேவ வார்த்தைக்காகத் காத்துக்கிடக்கிறார்கள் !

28. பேதுருவின் சிறைச்சாலை அனுபவங்களுக்கும், பவுல் - சீலாவின் சிறை அனுபவங்களுக்கும் இன்றைய சபை ஆயத்தமாகட்டும்! தேவதூதனோ பூமியதிர்ச்சியோ வந்தாலும் வரலாம், வராமலேயும் போகலாம். சபையோ ஊக்கமாய் ஜெபிக்கட்டும்! கழுத்தைத் தரவும் தயாராக இருக்கட்டும்! காலத்துக்கு முன்னால் யாரும் நம்மேல் கைபோட முடியாது என்பது உண்மை!

29. ஆண்டவர் இயேசுவைக் கைகழுவின பிலாத்து எருசலேம் குளத்தங்கரை ஒன்றின் அருகில் பைத்தியம் பிடித்து அலைந்தவனாய் செத்துக்கிடந்தான். சபையின் மீது கைவைத்த ஏரோதோ புழுப்புழுத்துச் செத்தான். சபை ஆண்டவரது மணவாட்டி. அடுத்தவரின் மனைவி மீது மட்டுமல்ல, ஆண்டவரது மணவாட்டியின் மீது கைவைக்கவும் எவருக்கும் இங்கே அதிகாரமில்லை!

30. நம்முடைய உபவாசக் கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றுவதைக் கேட்க நமது செவிகள் கூர்மையாயிருக்கட்டும்! ஆண்டவருக்குக் கழுதையும் குட்டிகளும் தேவை! அவைகளை சபைகளிலேயே கட்டிவைக்காமல் கட்டவிழ்த்து சபை அவருக்காக அனுப்பிவிடட்டும்! அடுத்த அந்தியோகியா, ஆவிக்குரிய தலைநகராக இங்கே காத்திருக்கிறது ! (13:1 - 14)

31. ‘அசட்டைகாரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்’ (13:41)

32. பவுலின் கையினாலே லிஸ்திராவின் சப்பாணி குதித்தெழுந்து நடக்கும் அற்புதத்தை இன்றும் தங்கள் கைகளால் நடக்கக் காண ஆசையாய் ஆசிக்கும் இன்றைய சபை, அதே லிஸ்திராவிலே கல்லெறியப்பட்ட பவுலைப் போன்று மரித்துப்போகத் தக்கதாய்க் கல்லெறியப்படவும் ஆயத்தமாகட்டும்! அற்புதங்கள் தானாய் நடக்கும்!

33. மந்தைவெளியோ, மார்ஸ் மேடையோ, சந்தைவெளியோ, சிறைச்சாலையோ, ஜெபஆலயமோ, வீடுகளோ, அதிகாரிகளுக்கு முன்பாகவோ, ராஜாக்களுக்கு முன்பாகவோ எங்கும் சுவிசேஷம் அறிவிப்பது என்பது ஆதிசபையின் இரத்தத்தில் ஊறின ஒன்றாயிருந்தது...

34. அவசியமானவைகளைத் தவிர பாரமான வேறொன்றையும் விசுவாசிகள் மேல் போதகர்கள் சுமத்தாதிருப்பார்களாக ! இவைகளையே ஆதிசபை தனது நியமமாய் வைத்திருந்தது.

35. அநேக அடிகள் அடித்து சிறைச்சாலையிலே காவலில் வைத்திருந்த சிறைச்சாலைக்காரனுக்கு மட்டுமல்ல, அவனது குடும்பத்துக்கே ஒரே இரவில் சுவிசேஷம் அறிவித்து ஞானஸ்நானம் கொடுத்த பவுல், வரப்போகும் நாட்களுக்கு நமக்கு முன்னுதாரணம். ஆதிசபை மட்டுமல்ல, இதையே பின்பற்றிய ஹெரலன் பாப்போவும், ரிச்சர்ட் உம்பிராண்டும், வாட்சமன் நீயும் இந்த விஷயத்தில் நமக்கு சாட்சிகள்! எப்பொழுதுமே சிறைக்கதவைத் திறந்துவிட தூதனும், பூகம்பமும் வருவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

36. குருடருக்கும் சப்பாணிகளுக்கும் சுகம் தர மட்டுமல்ல, அதிகாரிகளான கொர்நேலியுக்களுக்கும், செல்வந்தர்களான லிதியாக்களுக்கும், மார்ஸ் மேடை தியோனீசுகளுக்கும், கவர்னர்களான பேலிக்ஸ்களுக்கும், ராஜாக்களான அகிரிப்பாக்களுக்கும் முன்பாக தைரியமாய் நின்று வசனத்தை வசனமாய்ச் சொல்ல சபை தன்னைப் பயிற்றுவித்துக்கொள்ளட்டும். எழுப்புதலை கர்த்தர் பார்த்துக்கொள்வார்!

37. ‘இயேசுவையும் அறிவேன், உங்களையும் அறிவேன்’ என்று அசுத்த ஆவிகள் இன்றைய ஊழியர்களைக் குறித்து சாட்சி கொடுக்கட்டும்! அப்படிப்பட்ட சபை நரகத்திலும் அறியப்பட்டதாயிருக்கும் !

38. பவுலின் கையினாலே நடந்த விசேஷித்த அற்புதங்கள் தங்கள் கைகளினாலும் நடைபெற வேண்டுமென்று பேராசைப்படும் இன்றைய சபை, அதற்காகப் பவுல் செலுத்திய விலைக்கிரயத்தைச் செலுத்த ஆயத்தமாகட்டும்! தானாக நடக்கும் அற்புதங்கள்!

மிகுந்த பொறுமைக்கும், உபத்திரவத்துக்கும், நெருக்கங்களுக்கும், இடுக்கண்களுக்கும், அடிகளுக்கும், காவல்களுக்கும், கலகங்களுக்கும் பிரயாசங்களுக்கும், கண் விழிப்புகளுக்கும், உபவாசங்களுக்கும் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தவன் அவன்.

அவன் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன், ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்துதரம் அடிபட்டவன், மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டவன், கல்லெறியுண்டவன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தவன், கடலிலே இராப்பகல் போக்கியவன், பல மோச நாசங்களிலும் பிரயாசத்திலும், பசி தாகத்திலும், குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தவன்.. (2 கொரி 6: 4 - 10/ 11:23 - 28)

சபை இப்படியொரு விலைக்கிரயத்தைச் செலுத்த ஆயத்தமாகட்டும். இன்னொரு பெந்தெகோஸ்தேயை இன்றைய சபை காண்பது உறுதி!

39. 'தன்னுடைய ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே ஓடி முடிக்கவும், கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவே விரும்புகிறேன்' என்று சபை சொல்லி நிறைவேற்றட்டும்! நீதியின் கிரீடம் அதற்காக ஆயத்தமாயிருக்கும்!

40. 'கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்' என்று ஊழியர்களும், அப்போஸ்தலர் என்பவர்களும் இங்கே சொல்லட்டும், செய்யட்டும்! எதிர்தளத்தின் அமளிகள் அடங்கும்!

41. பவுல் கர்த்தரால் பிடிக்கப்பட்டபோது கேட்ட கேள்விகள் இரண்டு. 'ஆண்டவரே, நீர் யார் ?' 'ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?'

இந்த இரண்டு கேள்விகளும் இரட்சிக்கப்பட்ட உடனேயே ஒரு விசுவாசி கேட்க வேண்டிய கேள்விகள். இரட்சிக்கப்பட்ட நோக்கத்தையும், தனிப்பட்ட வாழ்வில் தேவன் வைத்திருப்பவைகளையும் அறிந்துகொள்ள இவை இரண்டுமே போதுமானவைகள். இன்றைய சபையின் ஒவ்வொரு விசுவாசியும் இதே கேள்வியைக் கர்த்தரிடம் கேட்கட்டும்! உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் எழும்புவார்கள்!

42. 'நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவேன்..' என்று அப்போஸ்தலர்களைத் தூர தேசங்களுக்கு மிஷினரிகளாய் அனுப்பினார் ஆண்டவர். இன்றைய சபை மிஷினரி தரிசனத்தைப் பெற்றுத் தூர இடங்களுக்குத் தங்கள் வாலிபரையும் விசுவாசிகளையும் மிஷினரிகளாய் அனுப்பட்டும். அவர்கள் கையினால் எழுப்புதல் ஏற்படுவது உறுதி!

43. பவுல் சேவித்த கர்த்தருடைய தூதனானவன் மட்டுமல்ல, அவசியம் ஏற்பட்டபோது, அந்தக் கர்த்தரே கூட பவுலின் அருகே வந்து நின்றாராம்.. ஆதிசபையில் மட்டுமல்ல, இன்றும் கூட பவுலைப் போன்றவர்கள் தேவனுக்காய் வைராக்கியம் பாராட்டி சாட்சி தரவோ, வார்த்தையைச் சொல்லவோ தேசாதிபதிகளுக்கு முன்பாக நிற்கும்போது, அவர்களைத் திடப்படுத்த ஆண்டவரே அவர்கள் அருகில் வந்து நிற்பார் !

44. ஆதிசபையின் நாட்களில் முழு உலகத்துக்குமே கொள்ளைநோயாய் இருந்தானாம் பவுல்.. 'உலகத்தைத் தங்கள் உபதேசத்தால் நிரப்புகிறவர்கள் என்றும், உலகத்தையே தலைகீழாய்த் திருப்புகிறவர்கள்' என்றும் அழைக்கப்பட்டனர் அவர்கள்.

இன்றைய சபை தங்கள் சமுதாயத்திலும் ஊரிலும் எப்படிப்பட்ட நேர்மறைத் தாக்கத்தை உண்டாக்குகிறது என்பது இரவு பகலாய்த் தூங்கவிடாமல் நம்மைத் தொந்தரவு செய்யும் கேள்வியாய் இருக்க வேண்டும். சரீப்பிரகாரமான கொள்ளைநோய் மட்டுமல்ல, ஆவிக்குரிய கொள்ளைநோயும் பரவிக்கொண்டே செல்ல வேண்டிய ஒன்று அல்லவா?

45. அகிரிப்பாக்களுக்கு முன்பாகவும், பேலிக்ஸ்களுக்கு முன்பாகவும், பெஸ்துக்களுக்கு முன்பாகவும், ஏரோதுக்களுக்கும் பிலாத்துகளுக்கும் முன்பாகவும் நின்ற பவுலைப் போலவும், கிறிஸ்து இயேசுவைப் போலவும் தேசாதிபதிகளுக்கு முன்பாக நாம் நிறுத்தப்படப்போகும் நாட்கள் வருகிறது.'சத்தியமாவது என்ன?' என்றும், 'நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்.. ' என்றும் அவர்கள் கேட்கும், சொல்லும் நேரம் வரும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு சபை ஆயத்தப்படட்டும். 'அது சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும்.'

46. எப்பேர்ப்பட்ட அப்போஸ்தலனானாலும் அவனுடைய வாழ்க்கையிலும் ஒரு யுரோக்கிலிதோன் உண்டு. ஆனாலும் அதன் பின்பு ஒரு மெலித்தாவின் எழுப்புதல் உண்டு. எல்லா எழுப்புதல்களுக்கு முன்பும் யுரோக்கிலிதோன் ஒன்று நிச்சயம்!

47. தலைவெட்டப்பட்டு மரித்தார் பவுல். தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார் பேதுரு. கொதி எண்ணெயில் போடப்பட்டார் யோவான். ஏரோதின் பட்டயத்தால் கொல்லப்பட்டார் யாக்கோபு .

48. உயிரோடு தோலுரிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் பர்த்தலோமேயு. தலைகீழாய் சிலுவையில் அறையப்பட்டார் பிலிப்பு. தலைவெட்டப்பட்டு மரித்தார் மத்தேயு. 'X' வடிவ சிலுவையில் அறையப்பட்டார் அந்திரேயா.

49. வாளால் அறுப்புண்டார் செலோத்தே எனப்பட்ட சீமோன். எருசலேம் தேவாலய உச்சியிலிருந்து தள்ளிவிடப்பட்டு கட்டையால் அடித்துக் கொல்லப்பட்டார் நீதிமான் யாக்கோபு. கோடரியால் வெட்டிக்கொல்லப்பட்டார் யூதா ததேயு. ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார் தோமா.

50. ஆதிசபை எழுப்புதலுக்கான மிகப்பெரிய விலைக்கிரயம் ஒன்றைச் செலுத்தவே செலுத்தியது. இன்றைய சபை எழுப்புதலுக்காக எப்படிப்பட்ட விலைக்கிரயமேயானாலும் அதைச் செலுத்தத் தயாராகட்டும் ! அந்த முந்தின ஆலயத்தின் மகிமையைக் காட்டிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாகவே இருக்கும்!

# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது..

# CHAPTER 06

## ‘நீர் சொன்னபடி சம்பவிக்கிறது !! ’

# 'நீர் சொன்னபடி சம்பவிக்கிறது !!' 06



நம் தேவன் நமக்கு முன்செல்லுகிறவர் மட்டுமல்ல..

முன் சொல்லுகிறவர்..

முன்மொழிகிறவர்..

முன்னெச்சரிக்கிறவர்..

'நான் அதைச் சொன்னேன்..அதை நிர்ணயம் பண்ணினேன்.. நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை..நான் அதை விட்டுத் திரும்புவதுமில்லை..' (எரே 4:28) .

..என்பதே இன்றைய ஆசீர்வாதக் கூவல் அலங்கோல சபைகளின் மேல் அவர் முடிவு செய்து விட்ட அவரது இறுதியும் அறுதியுமான தீர்மானம்..

'நீர் சொன்னபடி சம்பவிக்கிறது '

இந்தச் செய்தி சபைக்கான, தேவனின் சமீப கால எச்சரிப்புக்கள், தேசத்தில் இன்று நிகழும் நிகழ்வுகள் மூலம் வந்து பலிப்பதைத் துல்லியமாகத் தோலுரித்துக் காட்டுகிறது.. தேசத்தின் நிகழ்வுகள் - தேவ எச்சரிப்பின் நிறைவேறல்களை முகத்தில் அறைகின்றன..

சபையின் நிகழ்வுகளோ - இனி அதற்கு விமோசனம் இல்லை என்று முகமூடி கிழிக்கின்றன..

இங்கே ஒரு தீர்க்கதரிசன நிறைவேறல்..

-உண்மைத் தீர்க்கதரிதரிசிகளுக்காகவே !

# 'நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..'

- 'இதோ கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது..
- நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்..
- ..இந்த நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது..
- 'நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..'
- 'இதோ, நீர் அதைப் பார்க்கிறீர்..'

எரேமியா 32:24

## பகுதி –1

## 'இதோ கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது '

'இதோ கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது..

கிமு 588..

அங்கே..பாபிலோனிலே நேபுகாத்நேச்சாரின் 18ம் வருடம்..

இஸ்ரவேலின் யூதாவிலே சிதேக்கியாவின் 10ம் வருடம்..

எரேமியா சொன்னபடியே..

- எருசலேம் முற்றுகையிடப்பட்டு சுற்றிலும் கொத்தளங்கள்..
- நகரத்தைப் பிடிக்க நகர வாசலில் நேபுகாத்நேச்சாரின் படைகள்..
- நகரத்தில் பட்டயம்..பஞ்சம்..கொள்ளை நோய் - நகரம் கல்தேயர் வசமாகிறது..
- கர்த்தர் சொன்னபடியே நடக்கிறது..
- சகலத்தையும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார் கர்த்தர்..



இப்போது வரலாறு திரும்புகிறது..

கிபி 2024..

இங்கே மோடி & கோ வின் 2.0..

இரண்டாம் கட்ட ஆட்சியின் இறுதி ஆண்டின் இறுதி நாட்கள்..

கர்த்தர் சொன்னபடியே..

- தேசமும் சபையும் முற்றுகையிடப்பட்டு சட்டங்களால் கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று..
- இதோ நமது நகரங்களையும் சபைகளையும் பிடிக்க வருகிறார்கள்.. !
- சபைகளும் கிறிஸ்தவ நிறுவனங்களும் நமது மக்களும் ஊழியர்களும் இந்த நவீனக் கல்தேயர் வசமாகிப் போகப்போகின்றனர்..
- கர்த்தர் பல காலமாக சொல்லி வந்தபடியே இதோ சம்பவிக்கிறது..!
- நடக்கும் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார் கர்த்தர்..!

இதோ இங்கே ஒரு துல்லியமான தீர்க்கதரிசன நிறைவேறல்..!

இதை யாரால் தாங்க இயலும் ? ஆனாலும்..

அவர் சொன்னபடியே சம்பவிக்கிறது..

‘இதோ சட்டங்களால் சபைகளையும் தேசத்தையும் சுற்றி போடப்பட்டுவிட்ட கொத்தளங்கள்..

15 ஆகஸ்டு 2019.. டெல்லி செங்கோட்டையிலிருந்து பிரதமர் அறிவிக்கிறார்..

## 1. ஒரே நாடு ஒரே தேர்தல்.. ஒரே நாடு ஒரே முப்படைத் தளபதி :
One Nation..One General..

- ஜென்ரல் பிப்பின் ராவத் (Bipin Rawat) ஒரே முப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு, பிரதமரின் நேர் கீழே வருகிறார்..
- ஒரே நாடு.. ஒரே மொழி.. ஒரே மதம்.. ஒரே தேர்தல்.. ஒரே தளபதி.. ஒரே கட்சி.. ஒரே கார்டு.. ஒரே பிரதமர்.. ஒரே மக்களினம்..
- மொத்தத்தில் ஒரே பொது சிவில் கோடு.. (பொது சிவில் கோடை நிறைவேற்றிய இந்தியாவின் முதல் மாநிலமாகப் பெருமையாக தன்னை அறிவித்துக் கொள்ளுகிறது உத்தராகண்ட் மாநிலம்)
- தங்கள் கொள்கை.. தங்கள் கட்சி..தங்கள் நோக்கம்.. தங்கள் செயல்பாடுகள்..
- மற்றவர்கள் தங்களைச் சார வேண்டும் அல்லது வெளியேற வேண்டும்..அல்லது சிறைப்பட அல்லது கொல்லப்பட வேண்டும்..

## உ.புதிய கல்விக் கொள்கை : New Educational Policy

- திருத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை ஏற்கனவே அமலுக்கு வந்தாயிற்று..
- நமது பிள்ளைகளுக்கு ராமாயணமும் மகாபாரதமும் கீதையும் கட்டாயக் கல்வி..
- கிறிஸ்தவப் பள்ளிகளும் யோகாவைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும்..
- சமஸ்கிருதம் நுழைக்கப்பட்டுவிட்டது..
- திருத்தி எழுதப்பட்டுள்ள வரலாறு - இரத்தம் கலந்த காவிக்கலரில்..
- மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்ஸே, பிள்ளைகளின் புத்தகங்களிலே தேசபக்தராகி, தேசத்துக்காக உயிர் துறந்த தியாகியாகிறார்..
- உத்திரப்பிரதேசத்தின் மீரட் ஊர், பண்டிட் நாதுராம் கோட்ஸே நகர் என்று புதுப்பெயர் பெறுகிறது..
- முகலாய மன்னர்கள் இந்திய மண்ணைக் கொள்ளையடிப்பவர்களாகவும் இந்துக்களை நசுக்குபவர்களாகவுமே சித்தரிக்கப்படுகிறார்கள் பள்ளிப் புத்தகங்களில்..
- ஆங்கிலேயர்கள் அந்நிய கிறிஸ்தவத்தை இந்திய மண்ணுக்குக் கொண்டு வந்து, சோத்துக்காகவும் சோப்புக்காகவுமே மத இறக்குமதி செய்பவர்களாகக் காட்டப்படுகின்றனர்..
- இந்து மதக் கொள்கைகளும் கோட்பாடுகளுமே நமது பிள்ளைகளின் பாடத்திட்டமாகி, தேசிய கீதம் போய், 'வந்தே மாதரமும், காயத்ரி மந்திரமும்' நமது பிள்ளைகளின் அனுதின கீதமாகின்றன..
- மூன்றாவதிலும் ஐந்தாவதிலும் எட்டாவதிலும் அரசாங்கத் தேர்வுகள் - ஆரம்பத்திலேயே வடிகட்டி குறிப்பிட்ட உயர்ஜாதியை மாத்திரமே மேல் கொண்டு வர முன்னோட்டமான ஒரு புதிய காவிக் கல்விக் கொள்கை..

2023 பாராளுமன்றக் கூட்டத்தொடர்களில் சட்டத்திருத்தங்கள் என்ற பெயரில் தொடர்ந்து சத்தமின்றி நிறைவேறிவிட்ட 49 மசோதாக்கள். அவைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சபையின் மேல், சிறுபான்மையினர் மேல் கை வைக்கும் பல மசோதாக்களும் அடக்கம்.. 2024 ஜனவரி முதல் மார்ச் 10 தேதிக்குள் மட்டுமே 240 சட்டத் திருத்த மசோதாக்கள் பாராளுமன்றத்தில் நிறைவேறியுள்ளன. அதில் 2019 ல் கொண்டுவரப்பட்ட **Citizenship Amendment Act** அமலாக்கமும் அடக்கம்.

இதோ, சந்தடியின்றி தேசத்தையும் சபையையும் பிடிக்க சட்டங்களால் கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று..

## 3. தகவல் அறியும் உரிமைச் சட்டம் (திருத்தப்பட்டது):
## Right To Information (Amended) Act

- திருத்தம் என்ற பெயரில் இனி எந்தக் குடிமகனுக்கும் தன் அடிப்படை உரிமையின்படி தகவல் பெறவே முடியாது என்ற புறவாசல் சட்டம்..
- எந்த ஒரு தனி நபரோ சபையோ அரசாங்கம் என்ன செய்கிறது என்று உங்களால் சட்டபூர்வ உரிமையுடன் எந்தத் தகவலும் பெற முடியாது..

## 4. மத்திய பல்கலைக்கழக சட்டம்:
## Central Universities Act

- புதிய கல்விக் கொள்கைகளை பல்கலைக்கழக அளவில் அமலாக்கவும் ஆராய்ச்சி செய்யவும்,கொள்கைகளைக் கற்பிக்கவும் புதிய பேராசிரியர்கள் நியமனம்..
- ஏற்கனவே வெறியூட்டப்பட்ட காவிப்படையின் மாணவர் பிரிவான ABVP, கல்லூரி வளாகங்களை முற்றுகையிட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.
- கிறிஸ்தவக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இவற்றைப் பின்பற்ற நிர்ப்பந்தம்..
- மற்றவைகள் அறிந்ததே..

## 5.தேசிய உளவுத்துறைச் சட்டம்
## National Investigation Agency Bill

- சட்டத் திருத்தம் என்ற பெயரில் தங்கள் கொள்கைகளைப் புகுத்தவும், தங்கள் விருப்பத்துக்கும் தங்கள் காரியங்களை தங்கள் இஷ்டப்படி நிறைவேற்றிக் கொள்ளவுமே சத்தமின்றி அமலாக்கப்பட்ட சட்டம்..
- தாங்கள் சந்தேகிக்கும் அல்லது தாங்கள் விரும்பாத அல்லது தங்கள் கொள்கைகளுக்கு ஒத்துவராத யாரையும் தங்கள் பிடிக்குள் கொண்டு வர அவர்களை உளவு பார்க்க தங்கள் உள்துறைக்குள் வைத்திருக்கும் ஒரு உளவுத்துறை..
- தீவிரவாதிகளை உளவு பார்க்க என்று சொல்லிக் கொண்டு பக்கவழியாய் நுழைந்து சபைகளையும் ஊழியர்களையும் உளவு பார்க்கப் பயன்படப் போகும் தேசிய உளவுத் துறை..
- இந்தத் துறையின் கைவசம் இருக்கும் 'பட்டியலிடப்பட்ட குற்றங்களின்' வரிசையில் சுவிசேஷம் சொல்வதும் ஆராதனை நடத்துவதும் குற்றங்களாகவே கருதப்படும்..

## 6.சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் : The Unlawful Activities Prevention (Amendment) Bill

- தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காகவே கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டம் என்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும், அரசாங்கத்துக்கும் அதின் கொள்கைகளுக்கும் ஏற்காத எப்படிப்பட்ட செயல்களும் சட்டத்துக்குப் புறம்பானதே என்று குற்றம் சாட்டப்பட்டு தேச துரோகி முத்திரை குத்தப்பட்டு ஒருவரை உள்ளே தள்ளப் போதுமான ஒரு சட்டம்..
- சபை ஆராதனைகளும் ஆவிக்குரிய செயல்கள் யாவும் சட்டத்துக்குப் புறம்பானவை என்று முத்திரை குத்தப்படும்.

## 7.அங்கீகாரமற்ற இடங்கள் மற்றும் பொது இடங்களின் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் சட்டம் : Eviction of Unauthorized Occupants (Amendment) Act

- அதிகாரபூர்வமற்ற குடியிருப்புக்கள் அல்லது அரசாங்கத்தின் இடத்தை நீங்கள் ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டு உங்களை உங்கள் வீடுகளிலிருந்தும் சபை கட்டிடங்களிலிருந்தும் வெளியே தூக்கியெறிய தங்களுக்கு அதிகாரம் தந்து கைகொடுக்கும் ஒரு புது மசோதா..

## 8. இந்திய மருத்துவக் கழகச் சட்டம் : Indian Medical Council Bill

- மருத்துவத் துறையை முன்னேற்றவும் முன் எடுத்துச் செல்லவும் கைதேர்ந்த வல்லுநர்களை நியமிப்பது..
- உலகத்தரத்துக்கு மருத்துவ ஆராய்ச்சியை மேம்படுத்த உயர்தர ஆராய்ச்சியாளர்களை நியமிப்பது..
- ஏற்கனவே உள்ள மருத்துக் கல்லூரிகளையும் இயக்ககங்களையும் கண்காணிப்பது..
- மருத்துவத் துறையின் குறைகளை நீக்க திட்டக்குழு அமைப்பது..

மொத்தத்தில் இவர்கள் புகாத துறை எதுவுமில்லை என்பது மட்டுமல்லாது, ஆராய்ச்சி செய்கிறேன் பேர்வழி என்று மிருகங்களின் மேல் நடத்தப்படும் மருத்துவ ஆராய்ச்சிகள் அனைத்தையும் உயிரோடு வைத்து யூதர்கள் மேல் நடத்திய ஹிட்லரின் நாட்கள் இங்கே தூரமில்லை..

பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்ல பார்வோன் மருத்துவச்சிகளின் மேல் அதிகாரம் செலுத்தியது போல கிறிஸ்தவர்கள் மற்றும் சிறுபான்மையினரின் பிறக்கப் போகும் குழந்தைகளையும் குறிவைக்கப் போதுமான அதிகாரம் கொண்ட மருத்துவக் கழகம் இவர்களது கைக்கு வந்தாயிற்று..

## 9. ஜம்மு காஷ்மீர் இட ஒதுக்கீட்டு சட்டம் :
## Jammu & Kashmir Reservation Bill

- மிகவும் சாதுரியமாகவும் தந்திரமாகவும் இரகசியமாகவும் ஜம்மு காஷ்மீர் சிறப்பு சலுகை 170 நீக்கப்பட்டதும் காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டதும் போலவே மேல் சொல்லப்பட்டதும் சொல்லப்படாதவைகளுமான சட்டதிட்டங்கள் சந்தடியின்றி அமலுக்கு வந்துவிட்டன..
- தேசத்தைச் சுற்றியும் சபையை சுற்றியும் கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று யாரும் தப்பிக்க வழியின்றி..

## 10. ஆதார் மற்றும் அதற்கடுத்த சட்டங்கள் :
## Aadhar & Other Laws

- தேசமும் சபையும் ஏற்றுக்கொண்டாலும் நிராகரித்தாலும் இங்கே சகலமும் கட்டாயமயமாக்கப்பட்டு விட்டது.

## 11.குடியுரிமை சட்ட திருத்த மசோதா
## Citizenship Amendment Act

- இச்சட்டத்தைப் பற்றி நாம் அறிந்தபடியே சிறுபான்மையினர் ஒடுக்கப்படுவர். அவர்களது உரிமைகள் பறிக்கப்படும். ஏற்காதவர்களும் எதிர்ப்பவர்களும் டிட்டன்ஷன் சென்ட்டர் என்று சொல்லப்படும் திரும்பி வராத கொட்டடிகளில் அடைக்கப்படுவர். கணவனை விட்டு மனைவியும் தாய் தகப்பனை விட்டு குழந்தைகளும் நிரந்தரமாகப் பிரிக்கப்படுவார்கள். அல்லது கொல்லப்படுவார்கள். ஹிட்லர் காலத்திலும் கம்யூனிஸ நாட்களிலும் நடந்தது இதுவே..
- கடந்த சில வருடங்களாகவே கட்டிடத் தொழிலாளிகள் ரூபத்தில் வட இந்தியர்கள் தென்னிந்தியாவில் சாரை சாரையாகக் குடியேற்றப்படுவதும், தென்னிந்திய அரசாங்க வேலை முதல் வங்கி மற்றும் ஓட்டல் தொழில் வரை சகல வியாபாரத்திலும் தென்னிந்தியாவின் கடைக்கோடி வரை வட இந்தியர்களின் சர்வ வியாபம் கண்கூடு..
- ஏற்கனவே குடியுரிமை திருத்த மசோதாவால் நாடே கொந்தளித்துக் கிடக்கிறது..

இது இப்போது அமல்படுத்தப்பட்டுவிட்டது என்று அறிவிக்கப்படாயிற்று.

## 12. சகலமும் காவி மயம் :
## Jammu & Kashmir Reservation Bill

- ஏற்கனவே தேர்தல் ஆணையத்தைக் கைக்குள் போட்டு 2019 ல் ஆட்சியைப் பிடித்தார்கள்..
- தேர்தல் ஆணையத்தில் மனம்போனபடி கமிஷனர்களை நியமிப்பதும் நீக்குவதும் சகல அதிகாரம் கொண்ட பிரதமர் கையில்.. ஆட்டம் ஆரம்பித்துவிட்டது..
- ஜனாதிபதி முதல் பிரதமர் வரை ..உள்துறை அமைச்சர் முதல் உள்ளாட்சித்துறை வரை ஆர் எஸ் எஸ்..
- CBI முதல் RBI வரை ..
- சுப்ரீம் கோர்ட் முதல் கீழ்க் கோர்ட் வரை, போலீஸ் முதல் போஸ்ட் ஆபீஸ் வரை சகலமும் காவிமயம்..
- CRPF 35 வயதுக்குக் கீழ் உள்ள இள இரத்தம் பாய்ச்சப்படுகிறது.(RSS படை வந்து இறங்குகிறது)
- RSS க்கென்றே உபியின் பரேலியில் ஒரு தனி மிலிட்டரி கல்லூரி ..
- அக்னிபாத் திட்டத்தின் கீழ் 17 வயது பையன்கள் இராணுவத்தில் சேர்ப்பு. (ஹிட்லரின் SS படை ஹிட்லர் யூத் மற்றும் ஹிட்லர் பாய்ஸ் நாட்கள் திரும்புகிறது)
- 17 முதலமைச்சர்கள் ..
- 29 கவர்னர்கள்..
- 1 இலட்சம் கிளைகள்..
- 2 இலட்சம் சரஸ்வதி வித்யா மந்திர் பள்ளிகள்..
- 5 இலட்சம் RSS ஆசிரியர்கள்..
- 1 கோடி மாணவர்கள்..
- 2 கோடி பாரதிய மஜ்தூர் யூனியன் உறுப்பினர்கள்..
- 1 கோடி ABVP கல்லூரி மாணவ உறுப்பினர்கள்..
- 15 கோடி BJP உறுப்பினர்கள்..

- 1200 புத்தகப் பதிப்பாளர்கள்..
- 9000 முழு நேரஊழியர்கள்..
- 7 இலட்சம் மூத்த குழுக்கள்..
- 1 கோடி உலகளாவிய VHP உறுப்பினர்கள்..
- 30 இலட்சம் பஜ்ரங்தள் தன்னார்வத் தொண்டர்கள்..
- ஒன்றரை இலட்சம் அலுவலகங்கள்..
- 17 மாநிலங்களில் ஆட்சி..
- 303 லோக்சபா உறுப்பினர்கள்..
- 64 ராஜ்யசபா உறுப்பினர்கள்..
- 1460 க்கும் மேற்பட்ட இயக்குனர்கள்..
- பல்வேறு சமூக சேவை நிறுவனங்கள்..

(இது சில வருடங்கள் முந்தைய புள்ளிவிபரம். தற்போதைய நிலவரம் இன்னும் அதிகம்)





## 13.சகலமும் தனியார்மயம் :
## Jammu & Kashmir Reservation Bill

- BSNL ம் MTNL ம் ஏற்கனவே அடக்கம் பண்ணப்பட்டதாகி விட்டது..
- நுகர்பொருள் முதல் மென்பொருள், மின்பொருள் வரை தனியார் முதலைகளின் பிடியில்..
- இரயில்வேயும் துறைமுகங்களும் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுகின்றன..
- இராணுவத்துக்கு ஏரோப்ளேன் தயாரிப்பு தனியார் கைக்கு..
- ஏர் இந்தியாவை விற்றாகி விட்டது.
- MAKE IN INDIA திட்டமே தனியாருக்காகத் தயாரிக்கப்பட்டதே..

இதோ இவர்களது நேரடி மற்றும் மறைமுகச் சட்டங்களால் தேசத்தையும் சபையையும் சுற்றிலும் கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று...

நீர் சொன்னபடி சம்பவிக்கிறது.. (எரேமியா 32:24)











# ‘நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..’

## பகுதி -2

**‘நகரத்தை (சபைகளை) பிடிக்க வருகிறார்கள்..’**

எரேமியா 32:24

- ஹிட்லர் காலத்து நாஜி ஜெர்மனியிலும் ஸ்டாலின் காலத்து ரஷ்யாவிலும், கம்யூனிச கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ருமேனியா மற்றும் பல்கேரியா நாடுகளிலும் நடந்தது இதுவே..

- பெயர்க்கிறிஸ்தவ பெரிய சபைகளும் ஆலயங்களும் மட்டுமே கண்துடைப்புக்காக விடப்பட்டு, அவைகளிலும் கம்யூனிசவாதிகள் பொம்மைப் போதகர்களாக அமர்த்தப்பட்டு, அந்த ஆலய பீடங்களிலுமிருந்தும் கம்யூனிசத் துதியே பாடப்பட்டது..

- விசுவாசிகள் சிதறடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்..

- அவர்களது சொந்தப் போதகர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டனர்..

- விசுவாசிகளே ஒருவரை ஒருவர் உளவு பார்த்தனர்..

- விசுவாசிகள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப்பட்டு அவர்களது வீடுகளையும் கடைகளையும் சபைக் கட்டிடங்களையும் அரசாங்கமும் அரசாங்கத்தின் அடிவருடிகளும் பறித்துக் கொண்டனர்..

- கைது செய்யப்பட்ட போதகர்கள் குடும்பத்துக்கு யாராவது மறைமுகமாக பண உதவியோ, பொருளுதவியோ செய்வதாகத் தெரிந்தாலும் கூட அவர்களும் கைது செய்யப்பட்டனர்..

- அநேகர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக் கொட்டடிகளிலும், பைத்தியக்கார விடுதிகளிலும் அடைக்கப்பட்டனர். அநேகர் காணாமலே போயினர்..



## சபைகளின் செயல்பாடுகளைத் தடுக்கவும் ஒடுக்கவும் முடக்கவும் முடிக்கவும் ஹிட்லரின் நாஜி அரசாங்கம் எடுத்த அடுக்கடுக்கான நடவடிக்கைகள் :

- கிறிஸ்தவ ஊழியர்கள் கைது செய்யப்பட்டு கான்ஸன்ட்ரேஷன் கேம்ப் எனப்படும் திரும்பி வராத கொட்டடிக்கு அனுப்பப்பட்டனர்.
- ஆட்சிக்கு விரோதமாய்ப் பேசிய,எழுதிய, எழும்பிய மதத்தலைவர்கள் யாவரும்கொல்லப்பட்டனர்.
- தேவ ஊழியர்கள் நாஜிக்களால் அடித்து நொறுக்கப்பட்ட போது போலீஸ் கை கட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.
- கிறிஸ்தவ நிறுவனங்கள் நடத்தி வந்த பள்ளிகள், சமூகசேவை மையங்கள்,இளைஞர் இயக்கங்கள், லேபர் யூனியன்கள்,மாதர் சங்கங்கள், விளையாட்டு மையங்கள், அசோஸியேஷன்கள் யாவும் இழுத்து மூடப்பட்டன.
- கிறிஸ்தவப் பள்ளிகள், அனாதை ஆசிரமங்கள்,ஆஸ்பத்திரிகள், குரு மடங்கள், செமினரிகள், திருச்சபைக்கட்டிடங்கள் கோயில்கள் அனைத்திலிருந்தும் சிலுவைகள்,சுரூபங்கள், படங்கள், வசன போர்டுகள் என்று ஒரு அடையாளத்தையும் விட்டு வைக்காமல் எல்லா அசையா சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு அவைகள் நாஜி உடைமைகளாயின. பள்ளிகளிலிருந்த ஆசிரியர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.
- அரசாங்க வேலையிலிருந்த அனைத்து கத்தோலிக்கர்களும் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.
- கிறிஸ்தவப் பத்திரிக்கைகள் உளவு பார்க்கப்பட்டு சென்சார் செய்யப்பட்டு எல்லாப் பிரசுரங்களும் நிறுத்தப்பட்டன.
- ஆங்காங்கே நடந்து வந்த சபை ஆராதனைகளும் கூட்டங்களும் SA என்ற Storm Troopers நாஜி படைகளால் வலுக்கட்டாயமாக மூடப்பட்டன.
- அரசாங்க அனுமதியின்றி பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது.
- கிறிஸ்தவ மதம் சார்ந்த கட்சிகளும் அமைப்புக்களும் கலைக்கப்பட்டன.
- அனைத்து நாஜி ஊடகங்களிலும் கிறிஸ்தவம் பற்றியும் சபை நடவடிக்கைகள் பற்றியும் தவறான செய்திகள் பரப்பப்பட்டுஅவைகள் பகிரங்கமாகத் தாக்கப்பட்டன.

- ஜெர்மனியின் எல்லா சபைகளையும், அரசாங்கத்தால் நாஜி ஆட்சியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் மாஜி சபையின் கீழ் கொண்டுவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- சபையின் செயல்பாடுகளை சபையின் நான்கு சுவர்களுக்குள் வைத்துப் பூட்ட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- சபையின் ஊழியர்கள் மற்றும் சபையின் ஒவ்வொரு நடவடிக்கையும் தீவிரமாக உளவு பார்க்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.
- கோயபெல்ஸ், கோரிங் போன்ற தீவிர கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால், சபைத் தலைவர்கள் பொது மேடைகளில் தாக்கப்பட்டனர்.
- நாஜி கட்சியையோ அரசாங்கத்தையோ யாரும் விமர்சிப்பதோ விரோதமாய்ப் பேசுவதோ கடுமையாகத் தடை செய்யப்பட்டது.
- புதிய சபைகள் எழும்புவதோ கட்டுவதோ தண்டனைக்குரியதானது.
- கிறிஸ்தவ அரசாங்க உயரதிகாரிகள் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ இளைஞர் இயக்கங்களிலிருந்து வெளியேற்றாத பட்சத்தில் அவர்களது வேலை பறி போனதோடு பெரிய தொகை அபராதமாகவும் சுமத்தப்பட்டது.
- சபைகள் யாவும் அரசாங்கத்துக்கு எல்லா விதத்திலும் முழுமையாகக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.
- ‘சபைக்கும் சர்க்காருக்கும் சம்பந்தமில்லை’ என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ சபைகளுக்கு, அரசாங்கம் என்ன செய்தாலும் தட்டிக் கேட்க எப்போதும் உரிமை இல்லை என்ற நிலை ஆனது.
- உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் கிறிஸ்தவ வாலிபக் குழுக்களோடு எந்தத் தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டது.
- பாதிரியார்களும் கன்னியாஸ்திரீகளும் ஊழியர்களும்கைது செய்யப்பட்டு அவர்கள் மேல் தவறான குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டு அவர்களுக்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த கான்ஸன்ட்ரேஷன் கேம்ப் என்ற வதைக் கொட்டடிக்கு அனுப்பப்பட்டனர்.
- பள்ளி அசெம்பிகளில் ஜெபம் தடை செய்யப்பட்டது.
- கிறிஸ்தவப் பள்ளிகளிலிருந்து சிலுவை அடையாளங்களும் படங்களும் கட்டாயமாக அகற்றப்பட்டன.
- கணக்கற்ற இண்டிப்பெண்ட்டன்ட் என்ற சுயாதீன சபைகள் தடை செய்யப்பட்டன.
- கிறிஸ்தவ ஊழியர்கள் கைது செய்யப்பட்டு கான்ஸன்ட்ரேஷன்கேம்ப் எனப்படும் திரும்பி வராத கொட்டடிக்கு அனுப்பப்பட்டனர்.

ஹிட்லரின் நாட்களை இன்றைய நமது நாட்களோடு ஒப்பிட்டு, நமது சபைகள் இந்த யதார்த்தத்தை ஏற்கிறார்களோ இல்லையோ, அதுவல்ல நமது கவலை..ஏற்றுக் கொள்பவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், சபைகள் தங்கள் முழங்காலுக்கும் கண்ணீருக்கும் பூர்வ நாட்களுக்கும் திரும்பி தேவனை நோக்கி கெஞ்சாதோ என்பதே நமது இச்செய்தியின் நோக்கம் !

இங்கேயும் சட்டங்களால் கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று..

'..இதோ, நமது நகரங்களையும் (சபைகளையும்) பிடிக்க வருகிறார்கள்..

நீர் சொன்னபடி நடக்கிறது..



# கர்த்தர் சொல்லுகிறார்..

## எரேமியா 4 & 6

அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள்.. அவர்கள் கொடியர்.. இரக்கம் அறியாதவர்கள்..அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்குச் சமானமாயிருக்கும்.. சீயோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தசந்நத்தராய்க் குதிரைகள் மேலேறி அணியணியாக வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்..(எரே 6:23)

நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்..

உன் தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்.. (எரே 4:6,7)

அந்நாளிலே ஆசாரியர் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்..(எரே 4:9)

இதோ மேகங்களைப் போல எழும்பி வருகிறான்..அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலிருக்கிறது.. அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்..(4:13)

நாசத்துக்கு மேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது..தேசமெல்லாம் பாழாகிறது..அசுப்பிலே கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே திரைகளும் பாழாக்கப்படுகிறது..(எரே 9:20)

குதிரை வீரரும் வில்வீரரும் இடும் சத்தத்தினாலே சகல ஊராரும் ஓடி, அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் இருப்பார்கள்..ஒரு மனுஷனும் அவைகளிலே குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்..(எரே 4:29)

தேசமெல்லாம் பாழாய்ப்போம்..நான் அதைச் சொன்னேன்..அதை நிர்ணயம் பண்ணினேன்..நான் மனஸ்தாபப்படுவதுமில்லை..நான் அதை விட்டுத் திரும்புவதுமில்லை.. (எரே 4:27,28)

அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டோம்..இடுக்கணும் கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக்கு ஒப்பான வேதனையும் நம்மைப் பிடித்தது.. பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான்..(எரே 6:24,26)

தேவ ஜனமே, நமது வீடுகளையும், சபைகளையும் நிறுவனங்களையும் பிடிக்கவும் ஜப்தி செய்யவும், நம்மை தேச துரோகிகள் என்று பட்டம் கட்டி நமது நிலபுலன்களையும், பள்ளிகள் கல்லூரிகள் ஆஸ்பத்திரிகள், கட்டிடங்களை அபகரித்து அரசுடைமையாக்கிக் கொள்ளையடித்துத் தனதாக்கிக் கொள்ள இதோ வருகிறார்கள் !

- கிழவன் என்று முகம் பாராமலும், வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளதும்..

- உனக்குத் தெரியாத (இந்தி) பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகு தூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன் மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்..

- அந்த ஜாதியான் உன் மிருக ஜீவன்களின் பலனையும், உன் நிலத்தின் கனியையும் புசிப்பான்.அவன் உன் தானியத்திலும், உன் திராட்சரசத்திலும், எண்ணையிலும் உன் மந்தையிலுள்ள ஆடுமாடுகளிலும் உனக்கு ஒன்றும் மீதியாக வைக்கமாட்டான்..

- உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழுமளவும் அவன் உன் வாசல்களில் எங்கும் உன்னை முற்றிகை போடுவான். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் தேசம் எங்குமுள்ள உன்னுடைய வாசல்கள் தோறும் உன்னை முற்றிகை போடுவான்..

(உபா 28:49-52)

நீர் சொன்னபடி நடக்கிறது.. எரேமியா 32:24



# ‘நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..’

## பகுதி –3

### ‘இதோ நகரம் (சபை) கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது

(எரேமியா 32:24)

‘ அசட்டைக்காரரே, பாருங்கள், அழிந்துபோங்கள் ! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன்.. ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்..

..என்ற பவுல் தன் வார்த்தையின் கடைசியில் ‘அப்படி உங்களுக்கு நேரிடாதபடி எச்சரிக்கையாய் இருங்கள்..’ என்றார்.. மேலே அவர் சொன்ன வார்த்தை, அவர் ஆபகூக் 1:5-10 லிருந்து எடுத்தது..அவர் எது நேரிடக்கூடாது என்று பயந்தாரோ, அது இதோ நமது இந்தக் கடைசி நாட்களில் வந்தேறுகிறது..

### கர்த்தர் சொல்லுகிறார்..
ஆபகூக் 1:6–10

- இதோ, நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்..அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக் கொள்ளத் தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள்..

- அவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள்..

- அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகமும், சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமாயிருக்கும். அவர்களுடைய குதிரை வீரர்கள் பரவுவார்கள்..அவர்களுடைய குதிரை வீரர் தூரத்திலிருந்து வருவார்கள்..இரைக்குத் தீவிரிக்கிற கழுகுகளைப் போலப் பறந்து வருவார்கள்..

- அவர்கள் எல்லாரும் கொடுமை செய்ய வருவார்கள்..அவர்கள் முகங்கள் சுவறச் செய்யும் கீழ்க்காற்றைப் போலிருக்கும்.அவர்கள் மணலத்தனை ஜனங்களைச் சிறைபிடித்துச் சேர்ப்பார்கள்..

- அவர்கள் ராஜாக்களை ஆகடியம் பண்ணுவார்கள்..அதிபதிகள் அவர்களுக்குப் பரியாசமாய் இருப்பார்கள்..அவர்கள் அரண்களையெல்லாம் பார்த்து நகைத்து, மண்மேடுகளைக் குவித்து அவைகளைப் பிடிப்பார்கள்.

இதோ இந்த நவீனக் கல்தேயர் உங்கள் ஸ்தலங்களுக்குள் உட்பிரவேசித்து, அவைகளுக்குள் தீக்கொளுத்தி அவைகளை சுட்டெரிப்பார்கள்..

எனக்குக் கோபமுண்டாக்கும்படி எந்தெந்த விசுவாச வீடுகளிலும் ஜெப வீடுகளிலும் நான் அருவருக்கும் காரியங்களைச் செய்து, தங்களையே விக்கிரகமாக்கி, தங்களையே உயர்த்தி காணிக்கை படைத்தார்களோ அந்த சபைகளையும் ஜெப வீடுகளையும் ஆலயங்களையும் இந்த நவீனக் கல்தேயர் சுட்டெரிப்பார்கள்.. (எரே 32:28, 29)

நமது சபைகளும் நமது மக்களும் இந்த நவீனக் கல்தேயரின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய காரணம் என்ன ?

'ஆதலால்' இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப் பண்ணினீர்.. (எரே 32:23)

- நாம் அவரது சத்தத்துக்கு செவிகொடாமல் போனதாலே..
- அவரது கட்டளைகளின்படி நடவாததாலே..
- அவர் கற்பித்த ஒன்றையும் செய்யாமல் போனதாலே..

இந்த மூன்று காரணங்கள் நிமித்தம் அன்றைய இஸ்ரவேலரை கல்தேயர் கைகளில் ஒப்புக்கொடுத்தவர், இதே காரணங்களாலேயே நமது சபைகளையும் இன்று ஒப்புக்கொடுக்கிறார்..

இன்று சபைக்குள் நடக்கும் காரியங்கள் நாம் அறியாததுமல்ல.. காண்கிறதும் கேட்காததுமல்ல..நாம் எழுதாததுமல்ல..

தேவ ஜனம் ஒப்புக்கொடுக்கப்பட்ட கல்தேயர் யார் யார்?

**I.வேத காலக் கல்தேயர்..**

**2. ஹிட்லர் கால நாஜி கல்தேயர்..**

**3. இன்றைய இந்துத்துவ காவிக் கல்தேயர்..**

## 1. வேதத்தின் கல்தேயர் :

சாம்ப்பிளுக்கு ஒரு ஓலோபெர்னாஸ்..

இந்த ஓலோபெர்னாஸ் தலைமையில் அசீரியப் படைகள் ஒரு முறை இஸ்ரவேலை சூழ முற்றிகை போட்டிருந்தது..

இவன் பாபிலோன் சாம்ராஜ்யத்தின் மன்னாதி மன்னன் நேபுகாத்நேச்சாரின் தளபதி தான்..ஆனால் இவனைப்பற்றி சொல்லிக் கொள்ளப்பட்டதோ..

கடவுளையே சிறை வைக்கும் ஓலோபெர்னாஸ்.. என்றே..

ஓலோபெர்னாஸ் என்ற பெயரைக் கேட்டாலே பாபிலோனைச் சுற்றியிருந்த நாடுகளெல்லாம் கப்சிப் என்று வாயை மூடிக் கொண்டன..

சாப்பிடாமல் அழுத பிள்ளைகள் ஓலோபெர்னாஸின் பெயரைச் சொன்னால் சமர்த்தாய் சாப்பிட ஆரம்பித்தன.. ராத்திரியில் அடுப்படியில் திருட்டுப்பூனை உருட்டி பாத்திரங்கள் உருண்டால் கூட பாபிலோனியப் படைகள் வந்துவிட்டதாக நினைத்துக் கொண்டு நடுங்கினார்கள்..

பலம், பராக்கிரமம், முரட்டுத்தனம், கொடூரம்- இவைகள் எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ஒரே வார்த்தையாக சொல்லுங்கள் என்று யாராவது கேட்டால்.. அசீரியா என்று ஒற்றை வரியில் பதில் சொல்லிவிடலாம்.

எத்தனையோ ராஜாக்கள் போர் செய்திருக்கிறார்கள்..சாம்ராஜ்யங்களைக் கட்டியிருக்கிறார்கள்..ஆனால்அசீரியரின் கொடூரமான நடைமுறைகளுக்கொப்பாக யாரும் இது வரை நடந்து கொண்டதில்லை..

இந்த அசீரியர்களைத் தான் கல்தேயர் தங்கள் ரோல்மாடல்களாகக் கொண்டிருந்தார்கள் என்றும், இந்த அசீரியர்களே நாம் பார்க்கும் கல்தேயருக்கு முன்னோடிகள் என்கிறது சரித்திரம் என்றால் கல்தேயர் எப்படியிருப்பார்கள் என்று யூகித்துக் கொள்ளலாம்..



# ‘ஹிட்லர் யூத்’

‘சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்..பரலோக இராஜ்யம் அவர்களுடையது..’ என்றார் இயேசு.

இதையே தனக்கு சாதக வரிகளாக மாற்றிக்கொண்டான் ஹிட்லர்.. ‘சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்..ஜெர்மனி அவர்களுடையது..அவர்களைக் கொண்டு ஜெர்மனியின் தலைவிதியையே மாற்றிவிடுவேன்..’ என்று சவால் விட்டு, 10 வயது முதல் 14 வயது சிறுவர்களைக்கூட விடாமல், பெற்றோர்களை விட்டு அவர்களை நிரந்தரமாய்ப் பிரித்து, அவர்களைக் கொண்டே ‘சில்ரன் ஆர்மி’ மற்றும் ‘ஹிட்லர் யூத்’ என்ற படைகளை ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்தி, இரண்டாம் உலகப்போரில் பெர்லினில் அவர்களையே பாதுகாப்பு அரணாக நிறுத்தினான் ஹிட்லர்..

1945.. பெர்லின்.. ஜெர்மனி..

இரண்டாம் உலகப்போரின் இறுதி நாட்கள்..

ரஷ்யப்படை பெர்லினை சுற்றி வளைத்திருந்தது..எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற சூழ்நிலை..பெர்லினின் மெட்ரோ ரயில் நிலையம் ஒன்றின் டிக்கட் கவுண்ட்டரில் வேலை செய்யும் ‘மார்க்ரெட் கோஹென்’, தன் கவுண்ட்டரை இருந்தது இருந்தபடியே விட்டுவிட்டு, 10 மைல் தூரத்திலிருந்த தனது லியுபர் என்ற கிராமத்துக்கு கால் நடையாக உயிர்தப்ப ஓடுகிறாள்.. வழியெங்கும் தீப்பிடித்து எரியும் மிலிட்டரி வாகன்கள்,ட்ரக்குகள், தடைச்சுவர்கள்...அவைகளுக்கு நடுவே ஹிட்லரின் SS படையினால் சுடப்பட்டு இறந்து கிடக்கும் ஒரு பையன்.. ரொம்பப் போனால் 14 வயதிருக்கும்..தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிலிட்டரி போஸ்ட்டை விட்டு விலகிப்போக முயற்சித்ததற்காக அவனுக்கு தன் தலைவன் ஹிட்லரின் படையாலேயே கிடைத்த பரிசு அது !



Family removed, the State acted as a Parent, turning children into its obedient Zombies. Here's "Germany's future" with no future. Tens of thousands of these brainwashed "Hitler's children" turned into willing war criminals; tens of thousands died the violent, useless, undignified death just in the battle of Berlin.

கோஹென் பார்த்த அந்த சிறுவன், ‘ஹிட்லர் யூத்’ என்ற டீன் ஏஜர்ஸ் படையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சிறுவர்களில் ஒருவன்..

**1933 மே மாதம் ஆட்சிக்கு வந்ததும்**
**பெர்லினில் யூத் Rally ஒன்றில்**
**ஹிட்லர் பேசிய பேச்சின் தீப்பொறிகளில் சில..**



- ‘எதைக் கண்டும் கலங்காமல், சகலத்தையும் தன் காலுக்குக் கீழே நசுக்கிப் பொசுக்கும், நஞ்சும் கொடுமையும் கலந்த, சூடேற்றப்பட்ட இள இரத்தத்தால் நிறைந்த வாலிபப்படை ஒன்று எனக்குத் தேவை!

- அது எதையும் தாங்க வேண்டும் ! எதையும் செய்ய வேண்டும் !

- நோவு நொடி, ஈவு இரக்கம் என்ற சொல்லுக்கே இடமில்லாத, கண்களில் வெறி தெறிக்கும் காட்டுத்தனமான படை அது !

- இளைஞர்களைப் பயிற்றுவிக்கப் போகும் எனது பயிற்சி முறை வார்த்தையால் விவரிக்க முடியாது..சோர்வு, சோம்பல் என்ற வார்த்தையே அங்கு கேட்கப்படக் கூடாது!

- என்னுடைய பயிற்சிப்பாசறையில் பயிற்றுவிக்கப்படும் வாலிபர்களையும் சிறுவர்களையும் கண்டு உலகமே நடுங்க வேண்டும்!

- அதின் மூலம் நான் உருவாக்கப்போவது சுத்த இரத்தம் பாய்ந்த ஒரு புதிய தலைமுறை.. ஒரு புதிய உலகம் !



## பொறுத்திருந்து பார் !!!

ஹிட்லர் ஜுரம் பிடித்த, அவனுக்காக எதையும் செய்யத் துணிந்து, அவன் சொல்லைத் தட்டாத இந்த சிறுவர்கள்,நாஜிக்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கு சில ஆண்டுகள் முன்பாகப் பிறந்தவர்கள்.. பிறந்ததுமே, தாய்ப்பாலோடு ஹிட்லரிஸமும் கலந்து புகட்டப்பட்டு வளர்ந்த இவர்கள்,இரண்டாம் உலகப்போரின் இறுதி நாட்களில் தங்கள் இறுதிப்போர் புரிந்தவர்கள்..

ஏன் இந்தப் பையன்களும் டீன் ஏஜர்களும் இந்த சின்ன வயதில் துப்பாக்கி ஏந்த வேண்டும் ?

'ஹிட்லர் யூத்' சிறுவர் படையில் சேர்ந்து தங்களையே இந்த அளவுக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன மெஸ்மரிஸம் இதில் இருக்கிறது ? என்ற கேள்விக்கு 'அல்ஃபோன்ஸ் ஹெக்' என்ற 16 வயது பையன் பதில் சொல்கிறான்.. 'எங்களுக்கு அளிக்கப்பட்ட போதனையும் பயிற்சியும், எங்கள் நாடி நரம்புகளில் விஷமாய் ஏற்றப்பட்ட உபதேசமும் அப்படி ! எங்கள் தலைமுறையில் 1920, 30களில் பிறந்த எங்களுக்கு, நாங்கள் பிறந்ததே மிலிட்டரி சேவை செய்யவே என்பது தான் திரும்பத் திரும்ப சொல்லித்தரப்பட்டது. பெரியவர்களின் கடமையைப் போலவே நாங்களும் தேசத்துக்கு கடமையாற்ற முழுமூச்சோடு இருந்தோம்.

எங்கள் தேசப்பற்றை, தேசத்துக்காக இரத்தம் சிந்தி உயிர் கொடுத்து நிரூபிப்பதிலேயே முனைந்து நின்றோம்..'



## 3. நவீன இந்துத்துவக் கல்தேயர்..

நாம் இவர்களைப்பற்றி எழுத வேண்டிய அவசியமே இல்லை..இந்தப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்களே இவர்களின் கதை சொல்லும்.. (30.1.2020 அன்று பதினேழு வயதே நிரம்பிய காவிப்படை வாலிபன் ஒருவன் போலீஸ் கண்களுக்கு முன்னே டெல்லியின் ஷாகீன் பாக் இஸ்லாமிய போராட்டக்காரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதோடு இவர்களைக் கொன்று குவிப்போம் என்று கொக்கரித்தது இங்கே குறிப்பிடத்தக்கது) அந்த ஜனவரி 30 அன்று அவன் பதிவிட்ட அவனது முகநூல் பக்கப் பதிவுகளைப் பாருங்கள்..

- 'நான் அவர்களுக்கு ஒரேயடியாக 'விடுதலை !!' கொடுக்கப் போகிறேன்..
- தாண்டவம்' பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்கள்..இனிமேல் தான் உண்மையான தாண்டவத்தைப் பார்க்கப் போகிறீர்கள்..
- இங்கே ஷாகீன் பாகில் ஆட்டம் முடிந்தது..
- என் கடைசி ஊர்வலத்தில் என் உடல் காவிக்கொடியில் சுற்றப்பட்டு 'ஜெய் ஶ்ரீ ராம்' கோஷத்தோடு சுமந்து செல்லப்படட்டும்..

- ★ ஒரு காலத்தில் புராதன கல்தேயரின் கரத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட இஸ்ரவேலர்..
- ★ 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாஜி கல்தேயரின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்ட யூதர்கள்..
- ★ இன்று இந்தக் கடைசி நாட்களில் ஒரு காவிக் கல்தேயர் கூட்டம்..
- ★ சபைகளை மேய்ந்து போடக் காத்து நிற்கிறது..

### இதோ கர்த்தரின் பட்டயம் எசேக் 21: 9-11, 14,15, 29

கர்த்தருடைய பட்டயம்..

அது துலக்கப்பட்டும் இருக்கிறது.. பட்டயம் கூர்மையாக்கப்பட்டது.. மகா சங்காரம் செய்வதற்கு அது கூர்மையாக்கப்பட்டிருக்கிறது..மின்னத்தக்கதாய் அது துலக்கப்பட்டிருக்கிறது...அதைக் கையாடும்படி துலக்கக் கொடுத்தார். கொல்லுகிறவன் கையிலே கொடுக்கும்படி அந்தப் பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருக்கிறது.. அது துலக்கப்பட்டதுமாய் இருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்.. பட்டயம் மூன்றுதரம் இரட்டித்து வரும்..அது கொலையுண்ணப்போகிறவர்களின் உள்ளறைகளில் பிரவேசிக்கிற பட்டயம்..பட்டயத்தின் கூர்மையை அவர்களுடைய எல்லா வாசல்களுக்கும் நேரிடக் கட்டளையிடுவேன்.. ஆ ! அது மின்னும்படியாய்ப் பதமிடப்பட்டது. வெட்டும்படியாகத் தீட்டிவைக்கப்பட்டது.. பட்டயம் உருவப்பட்டது..வெட்டவும் சங்கரிக்கவும் அது மின்னத்தக்கதாய்த் துலக்கப்பட்டிருக்கிறது..

## இதோ பஞ்சம் ! எரே 32:24

தேசத்திலும் சபையிலும் இன்றைய நவீனக் காவிக் கல்தேயரின் முற்றுகையினால், கொத்தளம் போடப்பட்டதினால், தேவனால் உண்டாகும் பஞ்சம் வருகிறது..

வயிற்றுப் பஞ்சமும் வசனப் பஞ்சமும் சேர்ந்தே வரும். அவை வர வரக் கொடிதாய் இருக்கும்.. போதகர்கள், ஊழியர்கள் ஆயத்தமாய் இராததினால் விசுவாசிகளுக்கு சரியான ஆலோசனை கிடையாமல் சபைகள் பெருங்குழப்பத்திற்குள் போகும்..

இதோ, நான் பட்டயத்தையும் பஞ்சத்தையும் கொள்ளை நோயையும் அவர்களுக்குள்ளே அனுப்புவேன்..அவர்கள் என் வார்த்தையைக் கேளாமல் போனபடியால், நான் அவர்களைப் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் பின்தொடர்ந்து..' (எரே 28:17,18)

'அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் பட்டயத்துக்கு இரையாகி, பஞ்சத்தாலும் நிர்மூலமாவார்கள்..அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் செத்து, சாபமும் பாழும் பழிப்பும் நிந்தையுமாவார்கள்.. (எரே 44:12)



## கொள்ளை நோய்

சரீரப்பிரகாரமான கொள்ளை நோய் மட்டுமல்ல..இதுவரை இந்திய சபைகள் பார்த்தறியாத, கேள்விப்பட்டிராத கொடூர சம்பவங்கள் நடக்கப் போவதால் துர்ச்செய்திகள் கொள்ளை நோயாய்ப் பரவும்.

சபைகள் இந்த நாட்களுக்கு எவ்வளவேனும் ஆயத்தமாய் இராதபடியால் விபரீதமான செய்திகள் பரவி மக்களுக்குள் பீதியையும் கலக்கத்தையும் உண்டாக்கி கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவதையும்,சிறைப்பிடிக்கப்படுவதையும், சித்ரவதைப்படுத்தப்படுவதையும், கொள்ளையாடப்படுவதையும், கிறிஸ்தவப் பெண்களும் வாலிபப் பிள்ளைகளுக்கும் நடக்கும் கொடுமைகளைக் குறித்ததான செய்திகள் கொள்ளை நோயாய்ப் பரவும்.

விசுவாச துரோகம் முந்தி நேரிடும் - காட்டிக்கொடுத்தல் சர்வ சாதாரணமாய் நடக்கும் - பசியும் பட்டினியும் கொள்ளை நோயில் முடியும் - ஆங்காங்கே குழப்பங்கள், கலவரத்திலும் வன்முறையிலும் முடியும்.. நாடே போர்க்களமாய் மாறும் !!

# ‘நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..’

## பகுதி -4

### கண்முன்னே நிறைவேறும் தீர்க்கதரிசனம்

சாமுவேல் முதற்கொண்டு..எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ.. அத்தனை பேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள்.. (அப் 3:24)

1. சாமுவேல் முதற்கொண்டு..

தேவனுடைய பெட்டி பிடிபட்டு.. தேவ மகிமை எடுபட்டு.. தேவ ஆலயம், ரெகொபோத்திலிருந்து இக்கபோத்துக்குத் தள்ளப்பட்ட போது வந்த தேவ வார்த்தை..

இதோ நான் ஒரு காரியத்தைச் செய்வேன்..அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும்..

நான் சொன்ன யாவையும்..அந்நாளிலே வரப்பண்ணுவேன்..அதைத் தொடங்கவும் முடிக்கவும் போகிறேன்.. (1 சாமு 3:11-14 )

இன்றைய அநேக சபைகளிலிருந்து தேவனுடைய பெட்டி பிடிபட்டு தேவ பிரசன்னமும் தேவ மகிமையும் எடுபட்டுப் போய்விடவில்லையோ ?

‘ரெகொபோத்’ அல்ல..‘இக்கபோத்’ என்ற பெயர்ப்பலகை அல்லவோ தலை மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது ?

2. ஏசாயா தனது 63ம், 64ம் அதிகாரங்களில் எழுப்புதலுக்காக ஏங்கிக் கதறி ஜெபிக்குமுன் தேவ அங்கலாய்ப்பைப் பாருங்கள் !

‘உம்முடைய உடுப்பு சிவப்பாகவும் உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கிறதென்ன ?

‘நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்..நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப் போட்டேன்..அதனால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்கள் மேல் தெறித்தது..என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக் கொண்டேன்..’

‘நான் என் கோபத்திலே ஜனங்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப் பண்ணினேன்..’

(ஏசாயா 63:1-4,10/ 64:10,11 )

இதோ நாம் எழுப்புதலுக்காகக் காத்திருக்கிறோம்.. கதறுகிறோம்..

ஆனாலும் இப்படி ஒரு காலம் இன்றைய சபையின் மேல் கடந்து போன பிறகே, வருகைக்கு முன்னான வரலாறு காணா கடைசி எழுப்புதல் வரும்.. அதில் சந்தேகமே இல்லை !!

3. பிந்தின ஆலயத்தின் மகிமையைக் காணுமுன் இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் போவதைத் தீர்க்கமாய் முன்னறிவிக்கிறான் எரேமியா..

அவனது 27, 28, 29ம் அதிகாரங்கள் திட்டமாய்ச் சொல்லுகிறது..

'இதோ தேசம் கல்தேயரின் கைகளில்ஒப்புக்கொடுக்கப்படுகிறது..இப்பொழுதும் நான் இந்தத் தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்.. (எரே 27:6)

எரேமியாவின் நாட்களும், தரிசனங்களும், சம்பவங்களும் நமது, இன்றைய நாட்களுக்கு நிழலே..இதோ இங்கே ஒரு கூட்ட கல்தேயர் கொத்தளம் போட்டு..சபையைப் பிடிக்க இதோ இவர்களது கூட்டம் சபை வாசலிலே.. இந்தக் கல்தேயர் கைகளிலே சபை கொடுக்கப்பட்டாயிற்று:..

கர்த்தர் சொன்னபடி சம்பவிக்கிறது !

4. எசேக்கியேலின் வலி கொண்ட வார்த்தைகள் இதோ..

- 'தேசத்தைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: முடிவு வருகிறது, தேசத்தின் நாலு முனைகளின்மேலும் முடிவு வருகிறது.
- தேசத்தில் குடியிருக்கிறவனே, அந்நாளின் விடியற்காலம் வருகிறது, காலம் வருகிறது, அமளியின் நாள் சமீபித்திருக்கிறது, மலைகளில் சந்தோஷசத்தம் இல்லை.
- இப்பொழுது விரைவில் என் உக்கிரத்தை உன்மேல் ஊற்றி, என் கோபத்தை உன்னில் தீர்த்துக்கொண்டு, உன்னை உன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன்.
- அவர்கள் எக்காளம் ஊதி, எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியும், யுத்தத்துக்குப் போகிறவனில்லை, என் உக்கிரம் அதின் திரளான கும்பின்மேலும் இறங்குகிறது.
- வெளியே பட்டயமும் உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உண்டு, வயல் வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான்: நகரத்தில் இருக்கிறவனையோ பஞ்சமும் கொள்ளைநோயும் பட்சிக்கும்.
- அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள், ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள். எல்லாக் கைகளும் சலித்து, எல்லா முழங்கால்களும் தண்ணீரைப்போல் தத்தளிக்கும்.
- இரட்டை உடுத்திக்கொள்வார்கள், தத்தளிப்பு அவர்களை மூடும், எல்லா முகங்களும் வெட்கப்படும், எல்லாத் தலைகளும் மொட்டையிடப்படும்.

- சங்காரம் வருகிறது, அப்பொழுது சமாதானத்தைத் தேடுவார்கள், ஆனாலும் அது கிடையாது.

- விக்கினத்தின்மேல் விக்கினம் வரும், துர்ச்செய்தியின்மேல் துர்ச்செய்தி பிறக்கும், அப்பொழுது தீர்க்கதரிசியினிடத்திலே தரிசனத்தைத் தேடுவார்கள், ஆனாலும் ஆசாரியனிடத்திலே வேதமும் மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்துபோகும்.

- ராஜா துக்கித்துக்கொண்டிருப்பான், பிரபுவைத் திகில் மூடிக்கொண்டிருக்கும், தேசத்து ஜனங்களின் கைகள் தளர்ந்துபோகும், நான் அவர்கள் வழிகளின்படியே அவர்களுக்குச் செய்து, அவர்கள் நியாயங்களின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

  எசேக்கியேல் 7:2,7,8,14,15,17,18,25,26,27

5. நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தீர்க்கதரிசனம் :

- நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்: என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்குமுன்பாக நிறுத்தப்படுவீர்கள்.

- அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்: அந்த நாழிகையிலே உங்களுக்கு எது அருள்செய்யப்படுமோ அதையே பேசுங்கள்: ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல: பரிசுத்த ஆவியே பேசுகிறவர்.

- அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்: பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைசெய்வார்கள்.

  என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். (மாற்கு 13:9,11-13)

- நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள், மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்.

- அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன், நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.

- இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். (யோவான் 16:1,2,4,12)

6. நமது மத்தியிலிருந்த மூத்த தேவ தாசர்கள் இன்றைய நாட்களைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசனம் :

- 1996.. சென்னை அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் மூத்த போதகர், மறைந்த பாஸ்டர் எம்.கே.சாம் சுந்தரம் ஐயா அவர்கள்..தங்கள் ஊழியர் கூடுகை ஒன்றில் சொன்னது:

  ஒரு நாள் வரும்..இந்தியாவில் கிறிஸ்தவர்கள் மற்றும் ஊழியர்களின் இரத்த ஆறு ஓடும்..

- 1988.. ஒரு மிஷினரி இயக்கத்தின் மூத்த இயக்குநர் தங்கள் வாலிபர் கூடுகையில் சொன்னது :

  இந்தியாவில் இப்படிப்பட்ட கலாபனையின் நாட்கள் வரும்.. At that time your children will be kidnapped.

- சகோ.டி.ஜி.எஸ்.தினகரன் சொன்னது :

  கடைசி நாட்களில் நமது தேசத்தில் இப்படிப்பட்ட மதக்கலவரங்களும் உபத்திரவங்களும் வரும்..

- கத்தோலிக்க திருச்சபையிலிருந்து இரட்சிக்கப்பட்டு வெளிவந்த கன்னியாஸ்திரி சகோதரி ஏஞ்சலிக்கா அவர்கள் 2006 முதல் இந்த நாட்களை முன்குறித்து சபைகள் தோறும் பல காரியங்களைத் தீர்க்கதரிசனமாய் சொல்லி சபையை எச்சரித்திருக்கிறார்கள்.

- சகோ.வின்சென்ட் செல்வகுமார் தமது புத்தகமாகிய ‘வெளிப்படுத்தின விசேஷ செய்திகளில்’ மிக விலாவாரியாக எழுதியுள்ள ஒரு அத்தியாயம்- ‘இரத்தசாட்சிகளின் காலம்’

  அதிலிருந்து ஒரு பகுதி..



## இரத்தசாட்சிகளின் காலம்

‘இனிவரும் கடைசிக்காலம் என்பது பேரழிவுகளும், பயங்கரங்களும் உண்டாகிற காலமாக மாத்திரம் இல்லாமல், இரத்தசாட்சிகள் திரளாக எழும்பப் போகும் காலமாகவும் இருக்கும். இதை நான் சொல்லவில்லை..வேதம் சொல்லுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 6:9-11

‘அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது, அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.’

கடைசிக் காலத்தை தீர்க்கதரிசிகளின் காலம் என்று சொல்வதைப் போல இரத்தசாட்சிகளின் காலம் என்றும் சொல்லலாம்..காரணம், இந்தக் காலக்கட்டத்தில் தான் கூட்டம் கூட்டமாக கிறிஸ்துவுக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்த, வைராக்கியமுள்ள ஒரு சமுதாயம் கிறிஸ்தவர்களிடையே எழும்பும்.

அவர்கள் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டுவார்கள்.தங்கள் சுயநலத்திற்காகக் கர்த்தரையும் அவர் வேதத்தையும் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்களாய் இராமல், தங்கள் உயிரையும் அவருக்காக இழக்கத் துணிந்தவர்களாய் இருப்பார்கள்.

ஒருவரல்ல இருவரல்ல,ஒரு பெரிய கூட்டமே இப்படிப்பட்ட வைராக்கியத்தோடு களமிறங்கும். அவர்கள் கர்த்தருக்கு விரோதமான அதிகாரங்களையும் பலவான்களையும் துச்சமாக மதிப்பார்கள். தண்டனைகளுக்கும் வன்கொலைகளுக்கும் கர்த்தருடைய நாமத்தினாலே தங்கள் கழுத்தைக் கொடுக்க ஆயத்தமாய் இருப்பார்கள்.

இன்றைய நடைமுறையைப் பார்த்தால், அப்படிப்பட்ட வைராக்கியமான ஜனங்கள் இன்றைய கிறிஸ்தவர்களிடையே இல்லை என்பது போலத் தான் தோன்றுகிறது. அது உண்மை தான்.

ஆனால், மிக விரைவிலேயே வைராக்கியமான கூட்டம் ஒன்று அங்கிங்கினாதபடி எல்லா இடங்களிலிருந்தும் திரளாகக் கிளர்ந்து எழும்புவார்கள். கர்த்தருடைய ஆவியானவர் அப்படிப்பட்டவர்களை எழுப்புவார் !

அதே சமயம் கடைசிக் காலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான சட்டங்களும் வன்முறைகளும் திரளாக உண்டாகும். உண்மையான கிறிஸ்தவனாக வாழ்வது என்பது அரிதான காரியம் போலக் காணப்படும். கிறிஸ்துவுக்கென்று வாழ்வதென்பது போராட்டம் நிறைந்த வாழ்க்கையாக மாறிவிடும்.

அதே சமயம் அந்திக்கிறிஸ்துவுக்கு ஜால்ரா போட்டுக்கொண்டு அவன் இயற்றும் சட்டதிட்டங்களுக்குத் தங்கள் கையையும் நெற்றியையும் காட்டிக்கொண்டு தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் கிறிஸ்தவர்களும் இருப்பார்கள்.

பணத்துக்காகவும் புகழுக்காகவும் எதையும் செய்யத் துணிந்த கிறிஸ்தவர்களும் ஊழியர்களும் சபைகளும் இப்போதே ஏராளமாய் பெருகியிருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம் தான்.

இவர்கள் தான் மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் கிறிஸ்தவர்களைக் காட்டிக் கொடுக்கவும் பரியாசம் செய்யவும் புறப்படுவார்கள்.

கடைசி நாட்களில் அரசாங்கமும் சட்டங்களும் கூட மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அவர்களுடைய விசுவாசத்திற்கு எதிராக இருக்கும்.

கள்ளச் சகோதரர்கள் ஒருபுறம் காட்டிக் கொடுப்பார்கள். அரசாங்கம் ஒருபுறம் இவர்களை வேட்டையாடும். திரளான கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்துக்காகக் கொல்லப்படுவார்கள்.

நியாயமாகப் பார்க்கப் போனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை குறைந்தல்லவா போக வேண்டும் ? ஆனால் அப்படி எதுவும் நடக்காது..அதற்கு மாறாக, அவர்கள் திரளாகப் பெருகிக் கொண்டே வருவார்கள். காற்றைப் போல பலமாகவும், அலையைப் போல திரளாகவும் எழும்புவார்கள்.

பிள்ளைகளில், வாலிபர்களில், பெரியோரில், ஆண்களில், பெண்களில், படித்தவர்களில், பாமரர்களில் என்று எல்லாத் திறத்தாரிலுமிருந்தும் அவர்கள் திரளாகப் புறப்படுவார்கள்.இன்ன ஊர், இன்ன தேசம் என்றில்லாமல் எல்லா இடங்களிலிருந்தும் புறப்படுவார்கள்.

சட்டங்களும் தண்டனைகளும் அவர்களைப் பயப்படுத்துவதில்லை. மனிதர்களும் அதிகாரங்களும் அவர்களை ஒடுக்கப் போதுமானவகளும் அல்ல. அவர்கள் மனங்களில் கர்த்தரைக் குறித்த பக்தி வைராக்கியம் புயலாய் மையம் கொண்டிருக்கும்.கிறிஸ்துவின் மேலுள்ள அன்பும் விசுவாசமும் அவர்களுக்குள் தீயாய் எரிந்து கொண்டிருக்கும்.

இவர்கள் யாரையும் எதிர்த்துக் கிரியை செய்வதில்லை. கிறிஸ்துவை எதிர்க்கும் உலகத்தை எதிர்த்து கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்திற்காகத் தங்கள் ஜீவனையும் கொடுப்பவர்கள் இவர்கள். இவர்கள் கிறிஸ்துவுக்காக வீரமரணம் அடைவார்கள்.

இரத்தசாட்சிகளை யாரும் உருவாக்கி விட முடியாது. அது கிறிஸ்துவால் முன்குறிக்கப்பட்ட ஒரு அழைப்பு. கர்த்தருடைய வருகைக்கு முன்பாக இரத்தசாட்சிகளின் எண்ணிக்கை நிறைவேற வேண்டும்.

ஒருவேளை இப்படிப்பட்ட உன்னதமான அழைப்பில் நீங்களும் நானும் இருக்க நேரிட்டால் அதைக்காட்டிலும் சந்தோஷமும் பாக்கியமும் வேறு ஒன்றுமில்லை !! ’

‘தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் தங்கள் நிமித்தம் அல்ல..நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்கள் என்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது..’ (1 பேதுரு 10, 12 )

**‘அடைபட்ட அக்கினி’ என்ற பெயரில் நாம் இந்த நாட்களை முன்குறித்து கடந்த பத்து வருடங்களாக எழுதி வந்தவை :**

## 2013

‘அந்த நாளுக்கு ஆயத்தப்பட்டிருக்க வேண்டும் ’ (எஸ்தர் 3:14)

2013ம் ஆண்டு முதலே எஸ்தரில் சொல்லப்பட்ட இந்த வசனத்தை வைத்து நாம் நமது செய்திகளிலும் வாட்ஸப் கட்டுரைகளிலும் எச்சரித்து வருகிறோம்.

யூதர்களைக் கொல்ல ‘அந்த நாளுக்கு ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்’ என்று ஆமான் சொன்னாலும், இதே வார்த்தையை இப்படிப்பட்ட கலவர காலத்துக்கும் தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராய் எழும்பப் போகும் காலத்துக்கும் எச்சரிப்புண்டாகும்படி

‘அந்த நாளுக்கு ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்’ என்று எழுதி வந்தோம்.

## 2014

‘நீர் சொன்னபடி சம்பவித்தது’ என்றபடியே 2014 தேர்தலில் இந்தக் கட்சி ஜெயித்து அரசு அமைத்தது.

## 2015

ஜனவரி 1 அன்று ‘இரத்தசாட்சிகள் டைரி’ வாட்ஸப் குழு ஆரம்பிக்கப்பட்டது. அதில் பதிவிடப்பட்டு வந்த செய்திகள் :

- **ஆரம்ப கால இரத்தசாட்சிகள்**
- **கேட்டகோம்ஸ் இரத்த சாட்சிகள்**
- **ஹெறலன் பாப்போவ்**

## 2016

- **இடி அமீன் இரத்தசாட்சிகள்**
- **உடைத்தெறி 1 & 2- ஞடி லேக்**

## 2017

- **ஹிட் லைக் ஹிட்லர்** (கிறிஸ்தவர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட ஹிட்லர் கால உபத்திரவங்கள்)
- **ஹிட்லர் காலத்துக்கும் இன்றைய இந்தியாவுக்கும் உள்ள ஒப்புமை**

## 2019

- **இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன ?**
- **இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை**
- **மீண்டும் ஒரு மிஸா ?**
- **யோவேல் மறுவேல் !**
- **இன்னும் ஒரே ஒரு ஆண்டு !**

## 2020

- **ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ..**

(ரிச்சர்ட் உம்பிராண்ட் விவரிக்கும், கம்யூனிச நாடுகளில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த சித்ரவதைகள்)

இந்தச் செய்திகள் யாவுமே நேரடியாகவோ மறைமுகமாகவோ இன்றைய நாட்களைக் குறித்தும், இந்த நாட்களுக்கு நம்மை ஆயத்திப்படுத்திக் கொள்வதைப் பற்றியுமே சொல்லப்பட்டவைகள்..

## 2022

- **மிஷன் 2024**
- **குருதிப்பிரளயம்**

## 2023

- **இதோ நாட்கள் வருகிறது !**

## 2024

- **நாட்கள் எண்ணப்படுகிறது !**

## நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..

- தீர்க்கதரிசியாகிய எரேமியா சொன்னது அவரது நாட்களில் மட்டுமல்ல, இதோ நமது இந்த நாட்களிலும் வந்து சம்பவிக்கிறதல்லவோ ?
- நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகள் இதோ அவர் 'சொன்னபடியே சம்பவிக்கிறது..'
- இந்தியாவின் மூத்த தேவ தாசர்கள் தேவ ஆவியால் ஏவப்பட்டு சொன்ன வார்த்தைகள் 'அப்படியே இன்று சம்பவிக்கிறது..' கடந்த பத்து வருடங்களாக நாம் எச்சரிப்பின் செய்திகளாக எழுதி வருபவை இதோ சம்பவிக்கும் சம்பவங்களாய் நேரில் பார்க்கிறோம்..இதை விடவும் கொடிய காலங்கள் சபைகளை விழுங்கக் காத்திருக்கிறது..

**கீழ்க்காணும் இவைகள் தான் நாம் இன்று அன்றாடம் காணும் தலைப்புச் செய்திகள் :**

- ஜம்முவில் போதகர் கைது.
- உ. பி யில் சபை ஆராதனை நிறுத்தப்பட்டது.
- பஞ்சாபில் போதகர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- மத்திய பிரதேசத்தில் மதமாற்ற தடைச் சட்டம்.
- ஒரிசாவில் ஆதிவாசிகள் தாய் மதத்துக்குத் திரும்ப போராட்டம்.
- குஜராத்தில் மதக்கலவரம்.
- தமிழகத்தில் இந்து முன்னணி கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.

**இதோ ! ஒரு நியூஸ்..நமக்கும் நமது சபைகளுக்கும் ! 2020-21க்கான புதிய பட்ஜெட்டில் நிதியமைச்சர் மத நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மீது கொண்டு வந்துள்ள மிகப் பெரிய திருத்தங்கள்**

- 12 AA மற்றும் 10 (23- C)யின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரெஜிஸ்ட்ரேஷன் சான்றிதழ்கள் 1-6-2020 முதல் ரத்து செய்யப் படுகின்றன.
- வருமான வரி சலுகை பெற ஏற்கனவே பெற்றுள்ள 12 பு பதிவு, Section 12AB என்ற திருத்தப்பட்டுள்ள புதிய பிரிவில் மீண்டும் விண்ணப்பிக்கப்பட வேண்டும். 10 (23 - C) திருத்தப்பட்டுள்ளது.
- தங்கள் பதிவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள ஒவ்வொரு நிறுவனமும் ஜூன் 1க்குப் பிறகு மூன்று மாதத்துக்குள் மறு விண்ணப்பம் செய்ய வேண்டும்.
- பதிவு புதுப்பிக்கப்பட்டாலும் அது அடுத்த 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லும்.

## இதோ ! ஒரு நியூஸ்..நமக்கும் நமது சபைகளுக்கும் !
## 2020-21க்கான புதிய பட்ஜெட்டில் நிதியமைச்சர் மத நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மீது கொண்டு வந்துள்ள மிகப் பெரிய திருத்தங்கள்

- 12 AA மற்றும் 10 (23- C)யின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரெஜிஸ்ட்ரேஷன் சான்றிதழ்கள் 1-6-2020 முதல் ரத்து செய்யப் படுகின்றன.
- வருமான வரி சலுகை பெற ஏற்கனவே பெற்றுள்ள 12 பு பதிவு, Section 12AB என்ற திருத்தப்பட்டுள்ள புதிய பிரிவில் மீண்டும் விண்ணப்பிக்கப்பட வேண்டும். 10 (23 - C) திருத்தப்பட்டுள்ளது.
- தங்கள் பதிவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள ஒவ்வொரு நிறுவனமும் ஜுன் 1க்குப் பிறகு மூன்று மாதத்துக்குள் மறு விண்ணப்பம் செய்ய வேண்டும்.
- பதிவு புதுப்பிக்கப்பட்டாலும் அது அடுத்த 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லும்.

### நிறுவனங்கள் செய்ய வேண்டியவை :

- M0A மற்றும் By Laws, சொஸைட்டி பதிவாளர் மூலம் புதுப்பிக்கப்படல் வேண்டும்.
- நிறுவனத்தின் ட்ரஸ்ட்டின் உறுப்பினர்கள் புதுப்பிக்கப்பட்டு, அதின் பட்டியல் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- நிறுவனத்தின் மினிட்ஸ் புத்தகம் update பண்ணப்பட வேண்டும்.
- ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஆரம்ப குறிக்கோள்களில் அடித்தல், திருத்தல், திரித்தல் காணப்படக் கூடாது.

நமது நிறுவனங்களின் மேல் அவர்கள் கை வைக்கப் போவதற்கான ஒரு முன்னோட்டமே இது ! அடுத்து வரப்போவது நமது மத மற்றும் நிறுவனப் பதிவுகள் மேல் !

லேட்டஸ்ட் நியூஸ்; இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் FCRA ரத்துசெய்யப்பட்டுள்ளது.

**இதோ ! நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..(எரே 32:24)**

# COUNTDOWN

நாட்கள் எண்ணப்படுகிறது...

# CHAPTER 07

# 'நாங்க பயங்கர பிஸி !'

# 'நாங்க பயங்கர பிஸி !'

## PARALYSIS OF PRE-OCCUPATION

**07**

Rev. **Leonard Ravenhill**



ரோமச் சக்ரவர்த்தி அகுஸ்து ராயனுக்குப் பணப் பற்றாக்குறை. வரியும் வருமானமும் போதவில்லை. விலைவாசி ஒரு பக்கம் விஷக்காய்ச்சலாய் ஏறிக்கொண்டிருக்க, இராணுவச் செலவு இன்னொரு பக்கம் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்தது. ராயனுடைய உடனடித் தேவை பணம், பணம், பணம் மட்டுமே !

ரோம அரண்மனையின் அதிர்வலைகள் இங்கே பாலஸ்தீனாவை ஆக்கிரமித்து ஆண்டு கொண்டிருந்த காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதின் காதில் எதிரொலியாய் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தது. எப்படியானாலும் தன் நாற்காலியைத் தக்க வைத்துக்கொள்ளவோ, தலையைத் தப்ப வைத்துக்கொள்ளவோ, நிதி திரட்டி புரட்டி தன் தலைமைக்கு அனுப்பியாக வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு !




இப்படி அவன் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த நேரத்தில் தான் கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் என்ற சிலர் அவனிடம் அப்பாய்ன்ட்மென்ட் கேட்டிருந்தனர், 'யூத ராஜா ஒருவர் அப்பகுதியில் பிறந்திருப்பதாக நட்சத்திரம் கண்டு தேடி வந்தோம்' என்று வினவிச் செல்ல..

'ஏரோது அதைக் கேட்டபோது அவனும் அவனோடு கூட இருந்த எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினர்' என்ற ரீதியில் கதை தொடங்குகிறது. 'நீங்கள் போய் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்ட பின்பு நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள்' என்று அவன் சொன்ன வார்த்தையில் அவனது உள்ளான நரித்தனம் மட்டுமல்ல, அவனைப் பிடித்த நடுக்கமும் சில்லிட்டிருந்தது..

அவன் இருந்த அரண்மனையிலிருந்து மிஞ்சிப் போனால் அரை மணி நேரம் தான் பெத்லகேம். குதிரை மேல் சேணம் வைத்து இடத்தையும், அந்த ராஜ மகவையும் தானாகவே சென்று பார்த்து வந்திருக்கலாம்.

ஆனால் அவனுடைய வேலைப்பளுவும், அன்றைய நாளின் பிஸி ஷெட்யூலும் அதற்கு இடம் தரவில்லை. அவசர அவசரமாய்ப் பிரதான ஆசாரியரையும் வேதபாரகரையும் அரண்மனைக்கு அழைத்து விசாரித்துவிட்டு மறுபடியும் அன்றைய தனது அலுவல்களில் மூழ்கிப் போனான் ஏரோது !

மனித வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வு ஒன்று அங்கே ஒரு அரைமணி தூரத்தில் நிகழ்ந்திருக்கிறது. ஆனால் அந்த அரைமணி நேரம் கூட ஒதுக்க முடியாத அளவு அரக்கப்பரக்க பிஸியாக இருந்த அவன், தனக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பைக் கை நழுவ விட்டான். ஒரு வேளை அவன் நேரமெடுத்துப் போய் அவரைப் பணிந்து வந்திருப்பானானால், அவனது தனிப்பட்ட வாழ்க்கை வரலாறும் முடிவும் வேறு மாதிரி எழுதப்பட்டிருந்திருக்கும்.

பிலாத்து செய்ததும் அதுவே அல்லவோ? தனது நியாயாசனத்துக்கு முன்பாக முள்முடியும் சிவப்பு அங்கியும் தரித்தவராய் நின்ற இயேசு, ‘நான் சத்தியத்துக்கு சாட்சி கொடுக்கவே வந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்’ என்று சொன்னபோது, ‘சத்தியமாவது என்ன ?’ என்று கேட்டுவிட்டு (யோ 18:37, 38) அதற்கான பதிலை சத்தியமான அவரிடம் வாங்கப் பொறுமையும் நேரமுமின்றி, தன் கோட்டைக்குள் சென்றுவிட்டான் பிலாத்து என்கிறபடி செல்கிறது அந்த உரையாடல். ஒரு வேளை ‘சத்தியமாவது என்ன?’ என்ற கேள்விக்கு விடையைப் பொறுமையாய் உட்கார்ந்து அவன் கேட்டிருப்பானேயானால், அவனது சரித்திரமும் முடிவும் வேறு மாதிரி எழுதப்பட்டிருந்திருக்கும்.

But he was so busy to wash away his hands..

எப்படியோ இயேசுவைக் கை கழுவி விட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போவதிலேயே குறியாய் இருந்தான் அவன். அவ்வளவு பிஸி!

‘ஆதாம் பாவம் செய்த போது அவன் தன் வேலைப்பளுவின் நெருக்கடியில் மூழ்கிப் போனான்’ என்று ஒரு முறை **Dr.A.W. Tozer** அவர்கள் எனக்கு ஞாபகப்படுத்தினதுண்டு. நாம் இன்று நமது ‘எலி ஓட்டத்தின்’ **(Rat race)** மட ஓட்டத்திலேயே சிக்கி (இதையே உலக வழக்கில் ‘நாய்க்கு உட்கார நேரமுமில்ல... செய்ய வேலையுமில்ல..’ என்று சொல்வதுண்டு) அங்குமிங்கும் பிஸியாக ஓடிக்கொண்டே இருக்கிறோம்.


**Dr.A.W. Tozer**

ஜாண் பன்யன் தனது மோட்சப் பிரயாண நூலில் ஒரு வயதான மனிதனைக் காட்டுகிறார், ’அவன் தன் தலைக்கு மேலே மின்னிக்கொண்டிருந்த மகிமையான கிரீடத்தைக் கண்ணேறிட்டுப்பார்க்கக்கூட நேரமின்றி, உலகப் பொருட்களுக்குப் பின் ஓடிக்கொண்டிருந்து, சேறும் சகதியும் குப்பையும் நிறைந்த குப்பை மேட்டைக் கிண்டிக் கொண்டிருந்தான்.

நிலவுக்குப் போக இரவும் பகலும் தீவிர ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் மனிதன், பரலோகத்துக்குப் போக வழி காண மறந்தே போனான். நகரங்களை நரகமாக்க நவீன உத்திகளை நாளெல்லாம் தேடித் தடவும் மனிதன், தான் வாழும் வழியைக் காணக் கண்ணற்றுப் போனான். மரணத்தை ஆராயும் வழிகளிலேயே சில விஞ்ஞானிகள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்துப் போடுகின்றனர்.

உலக மனிதர் இப்படியாய் ஒரு பக்கம் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்க, விசுவாசிகளாகிய நாமோ, நமது சபைகளின் அவசியம் குறைந்த அந்நிய அலுவல்களிலேயே சிக்கிக்கொண்டு ஆவியானவரின் அசைவுக்கான பசி தாகத்தையே இழந்து கிடக்கிறோம்.

நாம் மட்டும் அவசியமற்றதும், அவசியம் குறைந்ததுமான காரியங்களில் சிக்கி நமது நேரங்களை வீணாக்கி இராதிருந்திருப்போமானால், அவர் வந்து நம்மை விசாரிக்கும்போது, ’ஐயோ நான் இன்னும் அவரோடு அதிகமாய் இருந்திருக்கலாமே? அவரது இதயத்துடிப்பையும் பாரத்தையும் வேதனையையும் அறிந்து அறிவித்திருக்கலாமே?’ என்று அழ வேண்டிய அவசியம் இராது.

ஆனால் நாமோ பயங்கர பிஸி, **பிஸி, பிஸி!**



# ஓவர் ஓட்டம் !
# ஓட்டம் ஓவர் !!

- Romilton -

'அவர்கள் புசித்தார்கள், குடித்தார்கள், பெண் கொண்டார்கள், கொடுத்தார்கள்... விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்.. ஜலப்பிரளயம் வந்து அவர்களை வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்..' (மத் 24:39/ லூக் 17: 27, 28)

இன்னொரு வகையில் சொன்னால், நோவா காலத்து ஜனங்கள் பிஸி! பிஸி! பிஸி!

அதுவே தானே இன்றும்?
நாடு நகரங்கள் இரவும் பகலும் பிஸி!
பள்ளி கல்லூரிகள் படிப்பில் பிஸி!
தொழில் வர்க்கங்கள், வர்த்தகங்கள் பிஸி!

ஆஸ்பத்திரிகள் பிஸி !
ஆபீஸ்கள் பிஸி !
அரசியல்வாதிகள் பிஸி !

இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், ஏர்போர்ட்டுகள், மெட்ரோக்கள், தொழிற்சாலைகள், கம்பெனிகள், சாஃப்ட்வேர், ஹார்டுவேர் டைடல் பார்க்குகள் 24 மணி நேரமும் பிஸி பிஸி பிஸி !

இதுவே அல்லவோ இன்று சபையிலும் ஊழியத்திலும் காணும் காட்சி ?
நாமெல்லாருமே பிஸி! பிஸி! பிஸி!

கிறிஸ்மஸ் கேரல்ஸ் பிஸி!
கேலண்டர் கேக்குகள் பிஸி!
சேலை சட்டை ஷாப்பிங்கில் பிஸி!
கல்யாணங்கள், பெண் பார்த்தல், பையன் பார்த்தலில் பிஸி!
சுவிசேஷ அறிவிப்பில் பிஸி!
ஸ்தாபனக் கூட்டங்களில் பிஸி !

'உபவாசக் கூட்டங்கள், முழுஇரவு ஜெபங்களில் பிஸி!

8 மணி நேர ஜெபங்கள், 12 மணி நேர ஜெபங்கள், 7 நாள், 21 நாள், 40 நாள் ஜெபங்கள் போக, இப்போது 365 நாள் பகல் ஜெபங்கள், 365 நாள் இரவு ஜெபங்கள் ' என்று நாம் எல்லாருமே சபையிலும் ஊழியத்திலும் சபையின் ஆண்டவரை விடவும் பயங்கர பிஸி!

கிறிஸ்தவ நிறுவனங்களும், மிஷினரி ஸ்தாபனங்களும் திட்டமிடுதல், அமலாக்கங்களில் (Planning executive comittee meetings)ல் பிஸி!

கிறிஸ்தவ புத்தகக் கடைகள் கிறிஸ்மஸ், ஈஸ்டர் வியாபாரத்தில் படு பிஸி!

வெளிநாடு பறக்கும் ஊழியர்கள் நாட்டுக்கு நாடு பிஸி!

உலகம் ஒரு பக்கம் பிஸியாகச் சுழன்று கொண்டிருக்க, கிறிஸ்தவ உலகமும் ஊழியர்களும் நிற்க நேரமின்றி பிஸி, பிஸி, பிஸி !

இப்படி நாம் பம்பரமாகச் சுற்றிக்கொண்டிருந்தபோது தான் 2023 இறுதியில் எந்த முன்னறிவிப்புமின்றி மிக்ஜாமும் ஜிக்ஜாமும் மழையும் வெள்ளமுமாய் வந்து நமது சில ஊர்களையும் மாவட்டங்களையும் வாரிக்கொண்டு போனது.

இப்படித்தான் இருந்திருக்கும் நோவா காலத்திலும்..
புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், கொடுத்தார்கள், விற்றார்கள், நட்டினார்கள், கட்டினார்கள்.. ஜலப்பிரளயம் வந்து வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராமலே இருக்கும் அளவுக்கு பிஸி!

இதோ! இங்கே நடந்ததுவே உலக இறுதியிலும் நடக்குமல்லவோ?
இன்று நடந்திருக்கும் இது மனுஷகுமாரனின் வருகைக்கு ஒரு முன்னோட்டம் அல்லவோ?

மழையும் நீரும் வந்து சூழ்ந்து நம் ஊர்களைச் சுருட்டிக்கொண்டு போகுமட்டும் விசுவாசிகளும் ஊழியர்களுமாகிய நாமும் கூட உணராமலே தான் இருந்தோம் இல்லையோ ? நம் நடுவே சபைகளுக்குக் குறைச்சலோ? ஊழியர்களுக்குப் பஞ்சமோ? ஜெபவீரர்கள் நலிந்து போனார்களோ? வரப்போகும் ஆபத்தைத் தீர்க்கமாய்ச் சொல்லும் ஞான திருஷ்டிக்காரர்கள் இங்கே இல்லையோ?

அப்படியானால் நமது ஊர்களை இந்த வெறும் மழை வெள்ளம் வந்து புரட்டிப்போடுமட்டும் நாம் உணராதிருந்தது என்ன?



- ‘கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ? கர்த்தராகிய ஆண்டவர்.. தமது ஊழியக்காரருக்கு... வெளிப்படுத்தாமல் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்வாரோ?’ (ஆமோஸ் 3: 6, 7)

- ‘இதை உணரத்தக்க ஞானமுள்ளவர்கள் இங்கே நம்மில் இல்லாமல் போனதென்ன?’

- தேசம் அழிந்து ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்தரம் என்னவென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அதை அறிவிக்கத்தக்கவன் நம்மிடையே இல்லாமல் போனதென்ன?’ (எரே 9:12).

- அது சுனாமியாகட்டும், மிக்ஜாமாகட்டும், பூகம்பமாகட்டும், தேசியப் பேரிடராகட்டும்.. அரசியல் அசைவுகளாகட்டும் - இவைகள் வருகைக்கு அடையாளங்கள் தானே என்று அசட்டையாய்ப் புறந்தள்ள முடியுமோ? இன்று நம் கண்முன்னே நிகழும் ஒவ்வொன்றிலும் ஒரு செய்தியை தேவன் தமது சபைக்கு வைத்திருக்கவில்லையோ?

  அந்த வகையில் நமக்கு இங்கு ஒரு செய்தி நிச்சயமாய் உண்டே?

  இந்த வெள்ளம் வந்து நமது ஊர்களையும் வீடு வாசல்களையும், சபைகளையும் இன்று விழுங்கிப்போடும் மட்டும் நாம் இதை உணராமல் போன காரணமென்ன? காரணத்தை உய்த்தறிய இங்கே யாருமில்லையோ? காரண காரியங்களை அலசி ஆராய்ந்து பார்த்ததில், பல வகைக் காரணங்களுக்கு மத்தியில் மிகத் துல்லியமாய், தெள்ளத் தெளிவாய்த் தனித்து நிற்கும் ஒன்றே ஒன்று இங்கே உண்டு!

  அது இது தான் - நமது ஓயா ஓட்டம் ! வேறெதிலும் அல்ல, நமது வேலைகளிலும், ஊழியம் என்ற பெயரிலும் நாம் ஓடும் வெற்று ஓட்டம் தான் ! என்றும் இல்லாதபடி இன்று விசுவாசிகளும் ஊழியர்களும் அவ்வளவு பிஸி !

- இந்த ஊர்களின் ஊழியர்களாகிய நாம் எங்கே போனோம்?

- கிறிஸ்துவைப் புறந்தள்ளிய புறஜாதிகள் மட்டுமன்றி, கிறிஸ்தவக் குடும்பங்களையும், சபைகளையும், ஊழியர்களையுமே வெள்ளம் வந்து புரட்டிப்போடும் மட்டும் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம்?

- வரப்போகும் அழிவு ஒன்றை தேவன் நமக்கு முன்கூட்டியே சொல்லவும் எச்சரிக்கவும் எத்தனப்பட்டு நம்மருகே அடிக்கடி வந்து நின்றபோது, அவரது சத்தமும் பிரசன்னமும் அவசரமும் அறியாத அளவு, அவரோடு தனித்திருக்க முடியாத அளவு  அவரது ஊழியத்திலேயே, சபையின் அலுவல்களிலேயே நாம் இயந்திரத்தனமாய் இயங்கி இயங்கி இயந்திரங்களாகவே மாறிப்போனதென்ன ?

- நமது இயந்திரகதி ஜெபங்கள்!
- நமது இயந்திரகதி வேத தியானங்கள் !
- இயந்திரகதி குடும்ப ஜெபங்கள்!
- இயந்திரத்தனமாய்ப் போன சபை கூடுகைகள்! ஜெபக் கூட்டங்கள்!
- கடமையாய்ப் போன வீடு சந்திப்புகள் ! வியாதியஸ்தர் விசாரிப்புகள்!

'ஊழியங்களில் காணப்படும் மிகவும் விந்தையும் முரணுமான ஒரு காரியம் உண்டென்றால், அது, தேவனுக்கு ஊழியம் செய்யும் அவரது ஊழியர்களே கூட, தாங்கள் சேவிக்கும் ஆண்டவருக்கென்று தனிப்பட்ட முறையில் நேரம் கொடாமல் இருப்பது தான் !

இயேசுவின் சொந்தப் பெற்றோரே அவரை தேவாலயத்தில் தவற விட்டுவிட்டனர். அவர்கள் மட்டுமல்ல, நாமும் கூட அவரை நம்மிடமிருந்து தவற விட்டுவிட்டு இன்று வரை அதே தவறைத்தான் செய்து வருகிறோம்..' என்றார் வெஸ்லி ட்யூவெல்..

'ஜெபமில்லா-வேத வாசிப்பு
ஜெபமில்லா-புத்தகப் படிப்பு
ஜெபமில்லா-ஓயா ஊழியம்
ஜெபமில்லா-ஆராதனை..

இவற்றில் ஒன்று கூட
பிசாசுக்கு ஒரு பொருட்டே அல்ல !

நமது அறிவு - அவனுக்கு நையாண்டி.. நமது ஓய்வில்லா ஓட்டம்-அவனுக்கு வேடிக்கை.. ஆனால் நமது ஆவியில் நிறைந்த ஊக்கமான முழங்கால் ஜெபம் - அவனுக்குச் சாவுமணி!!' என்றார் **Samuel Chadwick**

» சமாரியாவிலே எழுப்புதல் தீ பற்றியெரிந்து கொண்டிருக்க, பிலிப்பு அங்கே பயங்கர பிஸி! ஆனாலும் ஆவியானவரின் சத்தம் கேட்டு, அவ்வளவு வேலையையும் விட்டு விட்டு, வனாந்தரத்திலே எத்தியோப்பிய மந்திரிக்குப் பின்னாலே ஓடவில்லையோ ?

» ஆதிசபையில் ஆயிரக்கணக்கானோர் அனுதினமும் வந்து சேர்ந்து கொண்டேயிருக்க, அப்போஸ்தலர்களுக்கு இல்லாத வேலையா? ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றுவதைக் கேட்டு, பவுலையும் சீலாவையும் அவர் குறித்த ஊழியத்துக்குப் பிரித்தனுப்ப அவரது சத்தத்துக்கு அவர்கள் செவி திறந்தே இருக்கவில்லையோ?

- எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் வழியில் குற்றுயிராய்க் கிடக்கிறான் ஒருவன்.. ஆனாலும் அவனைக் கண்டும் விலகிச் செல்லுமளவு ஆசாரியனும் லேவியனும் ஒரே பிஸி!

- இயேசு பகல் முழுவதும் ஊழியத்தில் பிஸி தான். ஆனாலும் பிதாவின் சத்தம் அவருக்குக் கேட்கவில்லையோ?

- வெள்ளம் வந்து போன பிறகு நிவாரணப் பணியில் அரிசியும் புடவையும் உணவும் கொடுப்பது பெரிய காரியமோ? இதை உணர்ந்து எச்சரித்து அறிவிக்கக்கூடாத அளவு நம் ஊர்களிலுள்ள உண்மையும் உத்தமமுமான ஊழியர்களும் போதகர்களும் சுவிசேஷகர்களும் கூட இத்தனை இயந்திரத்தனமாய் மாறிப் போனதென்ன ?

இன்றைய இந்த அழிவு, வரும் காலத்துக்கு எச்சரிப்பு இல்லையோ?

நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் நம்மைக் குறித்தும், சபைகளைக் குறித்தும், தேசத்தைக் குறித்தும் அவர் நம்மிடம் சொல்ல வேண்டிய அநேகக் காரியங்கள் இன்னும் அவரிடத்தில் உண்டு. அவர் பாதம் அமைதியாய் அமரவும், சத்தமும் சித்தமும் கேட்கவும் நம்மை அர்ப்பணிப்போம்!

இதோ! ‘ஓவர் ஓட்டம்... ஓட்டம் ஓவர் !’ என்னும் எச்சரிப்புப் பலகை இங்கே நம் தலை மேலே தொங்கிக்கொண்டிருக்கிறது !

# மொழிபெயர்ப்புகள்:




ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]




கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]




நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]




கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில்
பேஜஸ்




என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே!
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே!




என் மகனாகிய
அப்சலோமே!
என் மகனே! என் மகனே!




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக!




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...





















# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:



இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன ?



இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை...



மீண்டும் ஒரு மிஸா ?



மிஷன் 2024



குருதிப் பிரளயம்



முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள்



முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள்



இதோ நாட்கள் வருகிறது !



நாட்கள் எண்ணப்படுகிறது

# ரிவைவா
## ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

# வெளியீடுகள்



| | | | |
|---|---|---|---|
| எழுப்புதலின் அடிப்படைகள், ஆரம்பப் பாடங்கள், ஆணி வேர்கள். | ரிவைவல் 66 வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள் | ரிவைவல் 66 [ பகுதி 2 ] வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள் | எழுப்புதல் 300 சபை சரித்திரம் கண்ட 300 எழுப்புதல்கள் |



| | | | |
|---|---|---|---|
| எழுப்புதலும் மிஷனரி வரலாறும் | எழுப்புதலும் [ பகுதி 2 ] சுருக்கமான சபை சரித்திரமும் | எழுப்புதலும் வரப்போகும் நாட்களும் [ பகுதி 1 ] | எழுப்புதலும் இன்றைய நாட்களும் [ பகுதி 2 ] |

**புத்தகங்கள் கிடைக்குமிடம்**

**அடைபட்ட அக்கினி**

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

## ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

அடைபட்ட
அக்கினி

246-B, Pocket - C, Mayur Vihar,
Phase-2, Delhi - 110091
Mob : 9810646981
email: hiddenfireromilton@gmail.com

LC
LIVING CREATION



# COUNTDOWN நாட்கள் எண்ணப்படுகிறது..

கடைசிக்காலம் என்ற காலம் சுருங்கி, கடைசி நாட்கள் என்ற நாட்களும் குறுகி, ‘பதினோராம் மணி’ என்ற நேரமும் முடிந்து, ‘சீக்கிரம் சம்பவிக்கப் போகிறவைகள்’ என்று சொல்லிவந்த காலமும் கடந்து, ‘இதோ நாட்கள் வருகிறது..’ என்று சொல்லப்பட்ட நாட்களும் போய், இப்போது, ’நாட்கள் எண்ணப்படும்’ Countdown என்ற டிக் டிக் மணித்துளிகளுக்கு சபையைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார் தேவன். திரைச்சீலை விலக்கப்படப்போகும் கடைசி விநாடி இது!

லவோதேக்கிய சபைகளின் காரியங்களுக்கு தேவன் மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார் ! ‘மெனே மெனே தெக்கேல் உப்பார்சின் !’ என்று சபையின் சுவர்களிலே எழுதப்பட்டாயிற்று !

சபையின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான வேளையில் சபைக்கு தேவன் சொல்லும் மிக மிக அவசரச் செய்தி இது !

காதுள்ளவன் கேட்கக்கடவன் !

## புத்தக ஆசிரியரைப்பற்றி...

டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த 30 வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் பாஸ்டர் ரொமில்ட்டன் கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீராத ஆர்வம் கொண்டவர். கர்த்தருடைய பாரத்தைத் தனது நெஞ்சில் சுமந்து திரியும் இவர், கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், அரிய இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான அரிய பல புத்தகங்கள் மற்றும் தேசத்தின் சமகால சம்பவங்களை வேதத்தின் சம்பவங்களோடு இணைத்து எச்சரிப்பின் செய்திகளாகக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் படைத்துப் பதிவிட்டு வருகிறார்.

இவரது ஜெபமும் பாரமும் கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை எழுத்து வடிவில் சபைகளுக்குக் கொண்டு சேர்ப்பதே ! இவர் ஒரு ஆவிக்குரிய எழுத்தாளர் மட்டுமல்லாது, நூல் மொழிபெயர்ப்பாளரும் கூட..

சமீப காலமாக ‘ரிவைவா’ என்ற எழுப்புதல் பயிற்சிப் பாசறை (School Of Revival) ஒன்றை தமிழகத்தின் பல மாவட்டங்களில் நடத்திவருகிறார் இவர்.

இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன?, இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை, மீண்டும் ஒரு மிஸா, மிஷன் 2024, என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம்?, குருதிப் பிரளயம், இதோ நாட்கள் வருகிறது!’ வரிசையில் இப்போது, ‘நாட்கள் எண்ணப்படுகிறது !!’

**அடைபட்ட அக்கினி**
246- B, Pocket - C, Mayur Vihar, Phase -2,
Delhi - 110091. **Mob : 98106 46981**